கழக வெளியீடு—உருஅ

# உலகப் பெருமக்கள்

## (Great Contemporaries)

371

## இரண்டாம் புத்தகம்

*

தாகூர் சட்ட விரிவுரையாளரும்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியருமாகிய,
திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.,
அவர்கள் எழுதியது.

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

விக்கிரம—புரட்டாசி

[*Copy-right*]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI, & MADRAS.

OCTOBER 1940

The Jupiter Press, Madras.

# பதிப்புரை

பெருமக்கள்தம் வரலாறுகளைப் படித்தறிதல் நல்வாழ்க்கைக்குச் சிறந்ததொரு வழியாகும் என்பது கற்றறிந்தோர் கண்ட சீரிய முடிபாகும். பண்டைக் காலத்திலிருந்த பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது ஒரு முறை; இக் காலத்திற் பிறந்து விளங்கும் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது மற்றொரு முறை. இவ்விரண்டனுள்ளும் பின்னதே — இக்காலத் தேவைகளுக்கேற்பச் சீரிய முறையாகக் கருதப்பட்டு வருகின்றது. அக்கருத்தை ஒட்டியே இதைப்போன்ற வரலாற்று நூல்களை வெளியிட்டு வருகின்றோம்.

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி, ருஷ்யா, துருக்கி, அயர்லாந்து போன்ற நாகரிகம் மிக்க பல பெரு நாடுகளில் அறிவாலுந் திருவாலும், ஆற்றலாலுஞ் சிறந்த பெருமக்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுள் ஒவ்வொரு வகையாற் சிறந்தவராக உலகத்தினரால் மதிக்கப்படும் ஏழு பெருந்தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை 'உலகப் பெருமக்கள்' முதற் புத்தகமாக முதற்கண் வெளியிட்டோம். இப்போது வேறு ஏழு பெருமக்களின் வரலாறுகளை எழுதுவித்து இரண்டாம் புத்தகமாக வெளியிடுகின்றோம்.

இவ் விரண்டாம் புத்தகமும் தாகூர் சட்ட விரிவுரையாளரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியருமாகிய உயர்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்களாலேயே எழுதப்பட்டது.

இதனையும் தமிழ் மக்கள் வாங்கிக் கற்று எங்கள் வெளியீட்டு முயற்சிக்கு ஆதரவளிப்பார்களாக!

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| க. | காந்தியடிகள் | ... | ... | க |
| உ. | பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் | ... | ... | உரு |
| ௩. | முஸ்தாபா கெமால் | ... | ... | ச௩ |
| ச. | ஜார்ஜ் பெர்னாட் ஷா | ... | ... | ருகூ |
| ரு. | சர். ஆலிவர் லாட்ச் | ... | ... | அஉ |
| கூ. | ருதர்போர்ட் பிரபு | ... | ... | க0உ |
| எ. | பால் இண்டன் பர்க் | ... | ... | கஉஉ |

## உருவப் படங்கள்


க. காந்தியடிகள் ... ... க

உ. 1. ரூஸ்வெல்ட், 2. முஸ்தாபா கெமால்,
3. சர் ஆலிவர் லாட்ச் ... ... உரு

ங. 1. ஜார்ஜ் பெர்னுட் ஷா, 2. ருதர்போர்ட்
பிரபு ... ... ருகூ

ச. பால் இண்டன்பர்க் ... ... கஉஉ



காந்தியடிகள்

# உலகப் பெருமக்கள்

## இரண்டாம் புத்தகம்

---

### க. காந்தியடிகள்

நாளடைவில் விரைவாகவாவது, மெதுவாகவாவது காந்தியடிகள் இன்னரென்பது பற்றி உலகமானது மனத் தெளிவு அடையவேண்டும். மோசஸ், சாக்ரட்டீஸ், கிறிஸ்து நாதர் என்பவர்களுள் அவர் யாரைப்போல்பவர்? புரட்சிக் காரரா? தத்துவ ஞானியா? அல்லது தன்னலங் கருதாத் தியாகியா? திட்பமாக அவர் இன்னர்தாம் என்று கூறுவது கடினம். கீழை நாடுகளிலும், மேலை நாடுகளிலுமுள்ள பிற எந்தப் பெரியாரைப் பற்றிய தீர்வையிலும் காந்தியடிகளின் அறியமுடியாத நிலையானது, அவரோடு ஒத்த காலத்தவர் மனத்திற் கலக்கம் விளைப்பதாயிருக்கிறது. இன்னும் அவரைப்பற்றிய தீர்வை முடிவாகவில்லை. முதலிலிருந்து கடைசி வரை அவருடைய வரலாறு எளிதிற் பொருள் விளங்கக் கூடியதன்று. சிறிய கரிய, புன்சிரிப்புடைய, துறவிபோன்ற அவருடைய வேடம் இராட்டினத்தில் சாந்தமாய் நூற்றுக் கொண்டிருக்கும் நிலையில் ஒருவகையாகத் தோன்றும். இந்திய இரவின் பளபளப்பான பேரிருளில் வௌவால் ஓசை போன்ற தமது சிற்றொலியை எழுப்பி அரசாங்க அதிகாரத்தையும், மேலைநாட்டு அறிவுக் கலையின் உயர்வையும் அறை கூவித் தாக்குகின்ற அவரது நிலை ஐரோப்பியர் மனத்திற்கு இன்னதென்று எளிதிற் புலனாகவில்லை. அவர் பம்பாய்

வழக்கறிஞராய் ஊக்கமான மனமும் வெற்றியும் உடையவரா யிருந்தும் தென் ஆப்பிரிக்காவிற் சென்றபோது சீமை உடைகளை முற்றிலுந் துறந்து இடுப்புவரை மட்டும் துணிகட்டிக் கொண்டு இந்திய கூலிக்காரனின் தாழ்ந்த நிலையைத் தன்னதாகக் கொண்டமையும் ஐரோப்பியருக்கு இன்னதென்று விளங்காததே.

காந்தியைக் கண்டிக்கும் ஆங்கிலக் கண்டனக்காரருள், சினமிக்கவர்கள் அவரை இந்திய அரசியலிற் சற்றுப் புதியதாய்க் கிளம்பியதொரு தோற்றமாகவும், இந்தியாவில் சுய ஆட்சிக்குக் கவனமாயும் விளக்கமாயுஞ் செய்யும் விருத்தியைத் தடுப்பதற்குத், தானே விரும்பி மேற்கொண்ட மறைவினின்று, இடையிடையே வெளிப்பட்டுத் தொந்தரவு செய்கின்ற சந்தேகப் புள்ளியாகவும் கருதுதல் கூடும். உண்மையாதெனின், நாற்பது ஆண்டுகளாக அவர் இந்தியாவிலும், பிற இடங்களிலும் உள்ள இந்தியரிடத்தில் ஆங்கிலர் வைத்த மனப்பான்மையைத் தவறென்று திடமாக அறைகூவித்தாக்கியிருக்கிறார் என்பதேயாகும். உலகப் போர் (1914-18) நடந்த நான்கு ஆண்டுகளிலும் அதற்கு முன்னும் பின்னுமுள்ள சில நாட்களிலும் அவருடைய உணர்ச்சி மிக்க அரசியல் மனச்சான்று, அவரை ஆங்கில அரசோடு ஒத்துழைக்க அல்லது நெருக்கி எதிர்க்காமல் இருக்கத் தூண்டியது. ஒழிந்த பிற காலங்களிலெல்லாம் அவருடைய முழு மனித வாழ்க்கையும், இந்திய நாட்டுப் பற்றையும் இன உணர்ச்சியையும் புதுப்பித்து இந்திய தேசத்திற்குப் புத்துயிர் கொடுப்பதற்கும், ஆள்கின்றவருக்கு ஆளப்படுகின்றவர்கள் அடங்கி அழிவதை ஒழிப்பதற்குமே பயன்படுத்தப்பட்டது. பல புரட்சிக்காரரைப்போலல்லாமல், வயது ஆக ஆக எதிர்ப்பு மனப்பான்மை அவர்பால் உறுதிப்படுகிறது. சில சமயங்களில் ஒத்துப்போகும் போக்கு அவரிடம் இருந்தது. ஆனால்

அச் சமயங்களை ஆவியின் பலவீனத்தையும் நெஞ்சத்தின் மென்மையையும் குறிப்பனவாகக் கருதி அவர் கழிவிரக்கங் கொள்ளுவர். பல புரட்சிக்காரரைப்போலல்லாமல், தோல்வி நேரத்தில் அவர் மிக அபாயகரமானவர். ஏனெனில் தோல்வி என்பது கடவுளின் நோக்கத்தை அறியத் தவறியதன் குறையென்று அவர் எண்ணுவர். கிறித்தவ சமயத்தில் பால்முனிவரின் ஆழமான நம்பிக்கையும் தாழ்மையும் உடையவராய் ஓயாமல் அவர் கடவுளிடம் தம் சங்கதிகளைக் கூறிக் கலப்பது வழக்கம். எந்தக் காட்டிலிருந்து அவர் வந்தாரோ அந்தக் காட்டுக்குள் தோல்வியானது அவரைப் புதிய ஊக்கமுடைய ஒளித்தூதனுகச் செலுத்துகின்றது. தோல்வி யடைந்தவருக்குரிய அவநம்பிக்கை அவருடைய ஆன்மாவை இருளடையச் செய்வதில்லை. வெற்றி வீரனுடைய கவலையே அவருடைய உயிராற்றலை இருளடையச் செய்கின்றது. மோசேயைப் போலத் தம் மக்களை, வாக்குத் தத்தம் செய்யப்பட்ட நாட்டின் ஓரம்வரை செலுத்துதற்கு அவர் கடவுளால் நியமிக்கப்பட்டார் போலும். அந் நாட்டிற்குட் செல்லுதல் அவர்க்கு விதிக்கப்படவில்லை.

மோகன்தாஸ் கரம்சந்து காந்தி கத்தியவார் தீபகற்பத்திலுள்ள போர்பந்தர் என்னுஞ் சுயஆட்சி நாட்டில் அப்பெயர் பெற்ற ஊரில் 1869-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ம் நாளிற் பிறந்தார். அவருடைய குடும்பம் வணிக வகுப்பைச் சார்ந்தது. திராவிடக் கலப்பினுல் அவர் கறுப்பு நிறமுடையவராயிருந்தார். அவர் இந்துஸ்தானத்திலுள்ள மிகப் பழமையான குடும்பத்தில் வந்தவர். போர்பந்தர் என்னுஞ் சாந்தமான துறைமுகப்பட்டணத்திலுள்ள கண்ணன் கோயில், இராமன் கோயில் என்னும் பெரிய கோயில்களுக்கு இடையே உள்ள நாலு மெத்தைக் கட்டிடம் ஒன்றில் அவருடைய குழந்தைப் பருவம் கழிந்தது.

காந்திக்கு ஏழு வயதானபோது அந்நாட்டு மன்னரிடம் முதல் மந்திரியாய் இருந்த அவருடைய தகப்பனார் அரசரின் தயவு இழந்து அரசாங்கத்தினின்று விலகி அவ்வூருக்கு வட கிழக்கில் நூறு மைலுக்கு அப்பாலுள்ள இராஜ்கோட்டில் குடும்பத்தோடு சென்று தங்கினர். அங்கே பத்து வயது வரை தாய்மொழிப் பள்ளிக்கூடத்தில் காந்தியடிகள் கல்வி பயின்றார். பிற்பாடு உயர்தரப் பள்ளிக்கூடத்துக்குப் போய், பதினேழாவது வயதிலே, அவர் மெட்ரிகுலேசன் பரி சோதனையில் தேறினார். அவர் பள்ளிக்கூடத்தில் மிகுந்த கெட்டிக்காரத்தனம் காட்டவில்லை. சரித்திர பாடத்தை அவர் அதிகமாகப் படிப்பதில்லை. யூக்லிட் என்னும் தரையளவு நூல் முற்றிலும் தருக்க நூலாயிருப்பது தெரிந்து அதை மட்டும் அவர் நன்கு கற்றார். அவர் மிகுந்த கூச்சமும் கூர்மை யான உணர்ச்சியும் உடையவர். உண்மையைப் பேணுவதில் அவர் மிகுந்த கண்ணும் கருத்தும் உடையவர். தம் தமை யன் வாங்கின கடனைத் தீர்ப்பதற்குத் தமையன் கைக்காப்பி லுள்ள பொன்னைத் தாம் திருடியதாகத் தம் தகப்பனா ரிடம் ஒப்புக்கொண்டார். தகப்பனாரிடம் தம் குற்றத்தை வாயினால் ஒப்புக்கொள்வதற்குக் கூசி அவர் நோயாய்ப் படுத் திருக்கும்போது, காந்தியடிகள் ஒரு கடிதத்தில் உண் மையை எழுதிக் கொடுத்தார். வயது சென்ற தகப்பனார் அதை வாசித்துச் சிறிது கண்ணீர் விட்டபின் அதனைக் கிழித்தெறிந்தார்.

இச் செய்தி வலிவந்தம் ஆகாது என்று பிற்காலத் தில் தாம் மக்களுக்குப் போதிப்பதற்குத் தமக்கு உணர்ச்சி தந்ததாக அவர் குறிப்பித்துள்ளார். மறைவாகப் புலாலுண் ணுதல், புகையிலைச் சுருட்டுப் பிடித்தல் முதலியவற்றின் இயல்புகளை அவர் சோதனை செய்து அவற்றை அறவே ஒழித்தார். அவைகள் ஆங்கில ஆட்சியின் சார்புபற்றி இங்

திய இளைஞர் கைக்கொண்ட பழக்கங்கள் என்று கூறுவது வழக்கம். சில ஆண்டுகள் கழித்துச் சீமைக்கு அவர் சென்ற போது அங்குள்ள உணவு முறைகளைச் சிலகாலம் அவர் கைப்பற்றினாலும் பிற்காலத்தில் அவர் ஊன், மீன், முட்டை எல்லாவற்றையும் ஒழித்துக் கண்டிப்பாய் மரக்கறியே கைக் கொண்டார். புகையிலை, சாராயம் முதலிய யாவும் அவர் தொடுவதில்லை. பழங்களும், வெள்ளாட்டின் பாலுமே அவர் உட்கொண்டு மிகுந்த ஒளியுடைய தம் வாழ்க்கையை நிலை நிறுத்திக்கொண்டனர்.

பன்னிரண்டாவது வயதில் அவருக்கு மிகுந்த தொந் தரவு கொடுக்கும் இரண்டு அனுபவங்கள் ஏற்பட்டன. அவர் தாய் வீட்டில் மிகக் கீழான வேலைகள் செய்த வேலைக்கார னைத் தீண்டக் கூடாதென்று வீட்டார் கூறுவது கேட்டு அவர் கோபம் கொண்டார். அஃது அவருக்கு ஒரு புது அனுபவம். இன்னொன்று அவர் குலத்துப் பொதுவழக் கப்படி அவருக்கு அவ்வயதில் திருமணம் நடந்தது. அப்போது அவருடைய மனைவிக்கு வயது பதினொன்று. காந்தியின் நல்வினைப் பயனாக அவர் மனைவியாகிய கஸ்தூரி பாய் இளமையிலேயே தன்முனைப்பான உள்ள முடையவ ளாய் இருந்தாள். அடிக்கடி கணவனுக்கும் மனைவிக்கும் சண்டைகள் ஏற்படுவதுண்டு. கலியாணமானபின் முதல் ஐந்து ஆண்டுகளில் கணவனையும் மனைவியையும் வருடத்தில் பாதி நாள் பிரித்துவைக்கும் வழக்கத்தினால் குழந்தை மணத் தின் கெடுதிகளுள் ஒன்றாகிய பருவத்துக்கு முந்திய இணை விழைச்சு குறைவுபட்டாலும் அவருடைய மணம் சமுதாய வாழ்க்கையில் வெற்றிகரமானது என்று சொல்ல இடமில்லை. 1906-ல் பிரமசரியச் சார்பான வாழ்க்கை நடத்தியபோது தான் அவ் வாழ்க்கையின் சுக நலம் ஒத்த மனமுடைய இரு வருக்கும் புலனாயிற்று என்று காந்தி ஒப்புக்கொண்டார்.

1887-ல் மெட்ரிகுலேசன் பரீட்சையில் தேறியவுடன் அவர் சீமைக்குப் புறப்பட்டுப் போய்ச் சௌதாம்ப்டன் என்னும் இடத்தில் இறங்கினர். அப்போது அவர் சிறந்த வெள்ளைப் பிளானல் சட்டை தரித்திருந்தார். அப்போது சமுதாயத்தில் அவருக்கு அனுபோகம் மிகுதியாயில்லை. முதலில் அவர் பிரெஞ்சு மொழி பேசும் திறம், நாட்டியம், வீணை முதலிய கலைகளைக் கற்றுக்கொள்ள மிகவும் ஆசைப்பட்டு முயன்றார். அவை அதிகப் பயனில்லாதன என்றறிந்து சமுதாயத்தில் அவற்றாற் கீர்த்தி பெறும் ஆசையைக் கைவிட்டு, அவர் வழக்கறிஞர் தொழிலுக்குக் கற்கத் தொடங்கினர். 1891 ஜூன் மாதத்தில் உயர்தர நீதி மன்றத்தில் அவர் பாரிஸ்டராகப் பதிவு செய்யப்பட்டார்.

பின்னர் அவர் இந்தியாவுக்குத் திரும்பினர். சீமையிலிருந்தபோது பிரியப்பட்டு அவர் கற்ற புத்தகம் வில்லியம்ஸ் என்பவரும், எட்வர்ட் என்பவரும் சேர்ந்து எழுதிய நிலச் சொத்து* என்பதாகும். விவிலிய நூலின் புதிய ஏற்பாடு என்பதன் முன்னுரை ஒன்றையும், இரண்டு ஆங்கிலப் பிரம ஞான சங்கத்தின் அங்கத்தினர்கள் குறிப்பித்த பகவத் கீதை முகவுரை ஒன்றையும் அவர் நன்கு கற்றார். இந்தியாவிற்கு வந்தபின் பம்பாயிலும், ராஜ்கோட்டிலும் இரண்டு ஆண்டுகளாக அவர் வழக்கறிஞர் தொழில் நடத்தினர். அப்போது அவருக்கு அதிக வருபடி கிடைக்கவில்லை. 1893-ல் கத்தியவாரிலுள்ள ஓர் இந்திய வணிக நிலையத்தார் தென்னப்பிரிக்காவில் நடந்துகொண்டிருந்த தங்கள் வழக்கைக் கவனிக்கும்படி அவரை வேண்டிக்கொண்டனர்.

இஃது அவர் வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படுத்தக் கூடியதாயிருந்தது. அரசியலில் அவர் வாழ்க்கை தொடங்கிய காலம் அதுவே. இந்தியாவிலிருந்து கூலிவேலைக்குப்

* Real property.

பிடித்து அனுப்பப்பட்ட தொழிலாளிகளின் நிலை அந்தக் குடியேற்ற நாட்டில் மிகவும் பரிதாபத்துக்கு இடமாயிருந்தது. அங்குள்ள பட்டணங்களில் தங்கிய செல்வமிக்க வணிகர்கள், வழக்கறிஞர்கள் முதலிய நடுத்தர இந்தியரின் நிலையும் மிகக் கடுமையாகவே இருந்தது. இந்தியர்கள் அங்குள்ள முக்கிய உணவுச் சாலைகளில் இடம் கொடுக்கப்படவில்லை. இருப்புப்பாதையில் முதல்தர வண்டிகளில் அவர்கள் யாத்திரை செய்யத் தடை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறு பலவகையான இடைஞ்சல்கள் இந்தியருக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் உள்ள வேற்றுமையைக் காட்டுவனவாயின. காந்தி அங்குச் சென்றபோது இவ்வித இடைஞ்சல்களுக்கு அவர் உட்படுத்தப்பட்டார். பிரிட்டோரியாவில் குரூகர் என்பவரின் வீட்டின் வாயிலில் நின்ற போயர் காவற்சேவகன் ஒருவன், மக்கள் நடமாடும் தளவரிசையில் நின்று, அவரைப் பிடித்துத் தள்ளி உதைத்தான். ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டவேண்டுமென்ற அவருடைய அஹிம்சைக் கொள்கைக்கு அது முதல் முதல் நிகழ்ந்த எதிர்ப்பாய் இருந்தது. தம் கொள்கைப்படியே காந்தியடிகள் அக் கொடுமையைப்பொறுத்துக்கொண்டாராயினும், தம் இனத்தாருக்கு அங்குள்ள உரிமைக் குறைகளை நினைத்துப் பார்ப்பதற்கு அஃது ஏதுவாயிற்று. பிரிட்டோரியாவில் முதல் முதல் பெரிய பொதுஜனக் கூட்டம் ஒன்று கூட்டி இந்தியர்களுடைய தேசியத் தீர்வைகளைப்பற்றி அவர் இந்தியரிடம் பேசுவாராயினர்.

இக்காலத்தில் அவர் **கார்லைல், வாஷிங்டன், இர்விங்** என்பவர்களின் நூல்களையும், இந்தியாவைப்பற்றி **மாக்ஸ் மூலர்** எழுதிய புத்தகங்களையும் உபநிடத முதலிய இந்து நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் அவர் கற்கத்

தொடங்கினுர். ரஸ்கின் நூல்களையும் அவர் வாசித்தார். அவர் மனத்துக்கு மிகவும் ஒத்தவராய்ப் பலமான உணர்ச்சி எழுப்பின ஆசிரியர் டால்ஸ்டாய் என்பவரே.

அவர் தென் ஆப்பிரிக்காவில் ஒரு வருடம் தங்கி, வந்த வேலையை முடித்துக்கொண்டு இந்தியாவிற்குப் புறப்படப் போகுந் தருணத்தில், நேட்டால் மாகாணத்தில் இந்தியர்களுடைய சில உரிமைகளைத் தொலைப்பதற்குச் சட்டம் கொண்டுவருஞ் செய்தியை அவர் கேள்விப்பட்டார். உடனே தம்முடைய பிரயாணத்தை நிறுத்திவிட்டுத் தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்தியரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு பெருங்கிளர்ச்சி தொடங்கி அதனை ஒழுங்குபடுத்துவாராயினர். அஃது இருபது ஆண்டுகள் நீடித்து இறுதியில் அவருக்கு வெற்றி தந்தது.

காந்தி தென்னுப்பிரிக்காவில் நீண்டகாலம் வாழ்ந்தபோது 1896-ல் இந்தியாவுக்கு வந்து சிலநாள் தங்கினுர். அவர் அக்காலத்தில் மூன்று பெரிய இந்திய தேசியவாதிகளைக் கண்டு அளவளாவினர். அவர்கள் பேரோஸிஷா மேட்டா, கோகலே, திலகர் என்பவர்களே. கோகலேயிடம் அவர் மிகுந்த மதிப்பும் அன்பும் உடையவராயினர். அவர் ஒருவரையே தம் குருவாக அவர் கருதினர். கம்பீரமிக்க திலகர்பால் காந்தியடிகள் நட்பு உடையவரா யிருந்தாலும், சிறிது கருத்து வேறுபாடுள்ள கண்டனக்காரராயும் இருந்தார். திலகரும் காந்தியும் ஒரு பொது நண்பர் வீட்டிற் சந்தித்தபோது ஒருவரையொருவர் வெகுநேரம் சும்மா பார்த்துக்கொண்டிருந்தபின் திலகர் காந்தியைப் பார்த்துச் சொன்னதாவது: "தாயை மகன் நேசிப்பதுபோல நீர் இந்தியாவை நேசிக்கிறீர். ஆனுல் உண்மையையும் நேசிக்கிறீர். இரண்டில் ஒன்றையே நேசிக்குந் தருணம் வந்தால் நீர் எதைக் கைக்கொள்வீர்?" என்பதே. சற்றுநேரம் காந்தியடிகள் மௌனமாக இருந்து பின்

மறுமொழி கூறியதாவது: "என் மனத்தில் இந்தியாவும் உண்மையும் ஒன்றே எனினும் இரண்டில் ஒன்றைத்தான் கைக்கொள்ள வேண்டுமென்ற இடர் ஏற்பட்டால் நான் உண்மையின் பக்கமே சார்வேன்" என்பது.

இதற்குப் பின் அவர்கள் சந்திக்கவில்லை. காந்தியடிகள் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்.

அருள் முறையாகிய அகிம்சையும், உண்மையின் ஆற்றலாகிய சத்யாக்கிரகமும் திலகர் மனத்துக்கு ஒத்தவையல்ல. ஆனால் அம்முறைகளின் வெற்றியைத் தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நிலைநாட்டினர். 1896-ல் மீண்டும் அவர் அங்கே சென்றபோது அவர் இந்தியாவில் எழுதியவற்றைக் கடிந்து ஒரு தெருக்கூட்டம் அவரைத் தாக்கிற்று. அவர் தம் எதிரிகளின்மீது குற்றவழக்குத் தொடுக்கவில்லை. நாளடைவில் பொதுஜன உணர்ச்சி அவருக்கு அனுகூலமாய் மாறிற்று. அவர் இடைவிடாது கிளர்ச்சிக்காரராகவும், வழக்கறிஞராகவும் பத்திராதிபராகவும் உழைத்தனர். நேட்டால் இந்தியக் காங்கிரஸ் என்பதை நிறுவி இந்தியக் கருத்து* என்னும் பத்திரிகையை அவர் வெளியிட்டார். அதனால் உண்டாகும் நஷ்டத்தை வழக்கறிஞராய்த் தாம் ஈட்டிய பொருளினின்று அவர் ஈடு செய்தார். போயர் யுத்தம் தொடங்கிய போது இந்திய சகாயப்படை ஒன்றுசேர்த்துஒழுங்குசெய்து அப்படையில் இலவசத் தொழிலாளரின் துணைகொண்டு காலன் சோ† ஸ்பியான் கோப்‡ வால் கிரான்ட்ஸ்§ என்னும் இடங்களில் நடந்த சண்டைகளில் ஊக்கமாக அவர் உழைத்தார். அவருடைய சகாயம் அரசாங்கக்கடிதங்களிலும் எடுத்துரைக்கப்பட்டது. பிற்காலத்தில் போயர்பால் தாம் பற்றுடையவரா யிருந்தமையை அவர் ஒப்புக்கொண்டார்.

* Indian opinion.　† Colenso.　‡ Spion kop.
§ Vaal krantz.

1901-ல் அவர் இந்தியாவிற்குத் திரும்பி ஆப்பிரிக்காவி லுள்ள தம் அனுபவங்களோடு இந்திய நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கினர். இந்தியாவில் பொது ஜனங்களின் நிலை ஆப்பிரிக்காவில் உள்ளதைப் பார்க்கிலும் சீர்கேடா யிருப்பதையும், புகைவண்டி மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்வது அதிக வசதிக் குறைவாய் இருப்பதையும் பெரிய இந்து ஆலயங்கள் நாகரிகமில்லாது அருவருக்கத் தக்கனவா யிருப்பதையும் அவர் கண்டார். 1901ல் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசியக் காங்கிரசுக்கு அவர் போயிருந்தார். அங்கேயுள்ள காளி கோயிலில் உயிர்ப் பலியினுல் ஏற்பட்ட இரத்த வெள்ளத்தைக் கண்டு அவர் அருவருப்புற்ருர். புனித நகராகிய காசியில் குருக்கள்மார் பேராசை பிடித்தவர்களாயும், வழிபடுபவர்கள் மெய்யன்பு இல்லாதவர்களாயும் இருப்பதை அவர் கண்டார்.

1902ல் தென்னுப்பிரிக்காவிற்கு அவர் மீண்டனர். அங்கே வெள்ளைக்காரர்களுக்கும் இந்தியர்களுக்கும் மறுபடியும் தொந்தரவுகள் ஏற்பட்டன. எதிர்ப்புகள், இடைப் பேச்சுக்கள், பத்திரிகைத் தொழில் என்பவைகளுக்கு இடையே சுகாதார நூல் கற்பதற்கு அவருக்கு நேரம் கிடைத்தது. அவருக்குத் தலைவலி ஏற்பட்டது. மலச்சிக்கலை நீக்குவதற்குப் பல முறைகளை அவர் கையாண்டு பார்த்தனர். காலை உணவு இல்லாதிருத்தல், மண் நிறைத்த துணியால், வயிற்றைச் சுற்றிக்கொள்ளுதல் முதலிய பல சிகிச்சைகள் ஆராயப்பட்டன. அம்முறைகளினுல் சோகனேஸ்பார்க்* என்னும் இடத்தில் தோன்றிய நுரையீரல் வியாதியினுல் வருந்திய நோயாளிகளில் மூன்றில் இருபங்கு மனிதரை அவர் குணப்படுத்தினர். அறிவுக்குப் பொருத்தமான உணவுமுறையை அவர் ஆராய்ச்சி செய்யத் தொடங்கிக்

* Johannesburg.

கனிகளும் வித்துக்களும் உண்பதே நல்லமுறை என்று முடிவு செய்தார். அவர் பாலைத் தொடுவதில்லை என்று பல நாள் விரதம் கொண்டிருந்தார். குடல்நுனி நோயினால் வருந்தி ரணசிகிச்சை பெற்றபின் ஏற்பட்டதன் பலஹீனத்தை ஒழிப்பதற்கு வெள்ளாட்டின் பாலை உணவாகக் கொள்ளத் தொடங்கினார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் *ரஸ்கின், †டால்ஸ்டாய் என்னும் ஆசிரியர்களின் நூல்களைக் கற்றுப் பொருளாதாரம், கல்வி, நீதியொழுக்கம், நாகரிகம் என்பவற்றைப் பற்றிய அவர்கள் கருத்துக்களைத் தழுவிக்கொண்டார். டர்பன், ஜோகனெஸ்பர்க் என்னும் நகர்களுக்கு அருகில் டால்ஸ்டாய் முறையில் எளிய வாழ்க்கை நடாத்துங் குடித்தொகுப்புக்களை அவர் ஏற்படுத்தினர். பள்ளிக்கூடங்களும் நிலைநாட்டினர். சுகவழி என்ற ஒரு நூல் அவர் எழுதினர். அவர் எழுதிய நூல்கள் பலவற்றிலும் அஃது அதிகமாக விலை போனதென்று அவர் கூறியிருக்கின்றார். 1906-ல் சூலுக் கலகம் நிகழ்ந்தபோது அவர் இந்திய சகாயப் படை ஒன்றைச் சேர்த்து நடத்தினர். அவருடைய உள்ளம் கலகக்காரர்பாற் பரிவுகொண்டது. இவ்வாண்டில் அவர் சேர்க்கைமறுத்தலாகிய பிரமசரிய விரதம் பூண்டனர்.

1907-ல் டிரான்ஸ்வாலுக்கு வரும் எல்லா ஆசியமக்களும் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற சட்டத்தை எதிர்ப்பதற்காக முதல் முதல் சட்ட மறுப்பு இயக்கத்தை அவர் தொடங்கினர். அவர் அதனைச் சத்தியாக்கிரகம் என்றனர். சாதாரணமாய்ச் சும்மாயிருந்து மறுப்பதற்கும், சத்தியாக்கிரகத்திற்கும் வேறுபாடு யாதெனில், பலவந்தம் செய்யாதிருப்பதோடு எதிர்ப்பவரிடம் அன்பு கொள்ளுதல் சத்தியாக்கிரகம் ஆகும் என்றனர். டிரான்ஸ்வாலில்

* Ruskin. † Tolstoi.

நடந்த சட்டமறுப்பினால் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் சிறைபுகுந்தனர். காந்தியும் அவருடைய மனைவியும் அவருடைய இரண்டு புதல்வர்களும் சிறை சென்றனர். எதிர்க்கப்பட்ட சட்டமானது சிலகாலம் நிறுத்தப்பட்டது. அப்போது காந்திக்கும், டிரான்ஸ்வாலில் ஆட்சிசெய்த தளகர்த்தர் ஸ்மட்ஸ் என்பவருக்கும் சமாதான உடன்படிக்கை நடந்தது. காந்தியைப் பின்பற்றிய ஒருவர் அவர் தம்மைக் காட்டிக் கொடுத்ததாகக் கருதி மூர்க்கத்தனமாக அவரைத் தாக்கினார்.

1914 வரை தென்னாப்பிரிக்காவில் இந்தியக் கிளர்ச்சி தொடர்ந்து நடந்தது. ஸ்மட்ஸுக்கும் காந்திக்கும் நடந்த உடன்படிக்கையால் ஆசியர்களுக்கு விரோதமான சட்டம் நீக்கிவிடப்பட்டது. ஆப்பிரிக்காவில் காந்தியின் வேலை முடிந்தது. அவர் லண்டன் வழியாக இந்தியாவிற்குச் செல்வாராயினர். முதல் உலகப்போர் தொடங்கி ஒருவாரத்துக்குள் அவர் இங்கிலாந்தை அடைந்தார். அங்கே அவர் சகாயப்படை ஒன்று சேர்க்க முயன்றபோது உடல்நிலை ஊனமடைந்ததால் 1915 ஜனவரியில் பம்பாய்க்கு மீண்டனர். அப்போது பம்பாய்க் கவர்னராயிருந்த வில்லிங்டன் பிரபு காந்தியடிகள் ஆப்பிரிக்காவிற் செய்த ஊழியங்களுக்குப் பரிசாக அவருக்குக் கேய்சரி ஹிந்து பதக்கம்* அளித்தார். அதிகாரிகளைக் கலவாமல் தேசிய இயக்கம் ஒன்றும் அவர் தொடங்கக்கூடாதென்று வேண்டிக்கொள்ளப்பட்டார்.

காந்தியடிகள் இந்தியாவுக்கு வந்தவுடன் பூனாவில் நோய்வாய்ப்பட்டிருந்த தம் அரசியல் தலைவராகிய கோகலேயைப் பார்ப்பதை முதல் வேலையாகக்கொண்டார். இந்திய நிலைமைகளை நன்றாய் அறியும்வரை ஒன்றிலும் தலையிட வேண்டாமென்று கோகலே அறிவுரை பகர்ந்தார். கோகலே உதவிய பணத்தைக்கொண்டு நெசவுத்தொழிலிற் பேர்போன

---

* Kaisari Hindu Medal.

ஆமதாபாத் நகருக்கருகில் சபர்மதி என்னும் இடத்தில் காந்தியடிகள் ஓர் ஆசிரமத்தை நிலைநாட்டினார். அது நாளடைவிற் புகழ்பெற்று ஓங்குவதாயிற்று. பின்னர் அவர் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்யத் தொடங்கினார். கல்கத்தாவில் வங்காள தேசியக் குழுவில் தீவிரவாதியாக இருந்த இளைஞர்களின் எதிர்ப்பை அவர் உணர்ந்தார். அவ்விளைஞர்கள் இங்கிலாந்தின் ஆபத்துக்காலமே இந்தியாவுக்குத் தக்க சமயம் என்றும் வலிவந்தத்தினாலும் கொலையினாலும் இந்தியாவின் சுயாதீனத்தை நாடவேண்டுமென்றும் வற்புறுத்தினர். எந்த அரசாங்கம் மிகக் குறைவாக ஆளுகின்றதோ அந்த அரசே நன்றாக ஆளுகிறதென்ற தோரோ* வின் கருத்தைத் தழுவிய காந்தியடிகள் தம்மை நம்பாத புரட்சிக் கட்சிக்காரர்களுக்குக் கூறியதாவது: பிரிட்டிஷ் பேரரசில் மிகக்குறைந்த கட்டுப்பாட்டோடு ஆளப்படுதல் கூடுமென்று நான் கண்டிருக்கிறேன் என்பதே.

ஓராண்டு கழிந்தபின் காசிப் பல்கலைக் கழகத்தில் காந்தி பேசியபோது அவர் கூறியதாவது, "நமக்குச் சுயஆட்சி வேண்டுமானால் நாமே அதை எடுத்துக்கொள்ளவேண்டும். அது நமக்குக் கொடுக்கப்படமாட்டாது" என்பதே. அதே காலத்தில் அதற்கு மாற்றமாகத் தோன்றும் உயர் கருத்து ஒன்றையும் அவர் தெரிவித்தார். அதாவது, "முற்றிலும் சுயநலமாகவே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு என் விசுவாசத்தை நான் காட்டுகிறேன். சிறந்த கொள்கையாகிய அகிம்சையை உலகமெங்கும் பரவச்செய்வதற்குப் பிரிட்டிஷ் மக்கள் இனத்தை நான் பயன்படுத்த விரும்புகின்றேன்" என்பதே.

அடுத்த ஆண்டில் காந்தியார் தம் ஆசிரமத்தில் தீண்டாதவர்கள் புகுவதற்கு இடங்கொடுத்ததைக் கண்டித்த பிராமண

---

*. Thoreau.

உதவியாளருடன் வாதாடினர். ஆமதாபாத்தில் நடந்த தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தில் வேலை மறுத்தவர்களை அவர் ஆதரித்தார். குஜராத்தில் நடந்த நிலவரி மறுப்புச் சண்டையில் குடியானவர்கள் பக்கம் சேர்ந்து அவர்கள் பலரும் அதிற் கலந்துகொள்ளும்படி தூண்டினர்.

1918-ல் உலகப்போர் முடிந்தபின் காந்தியடிகள் முனைப்பாய் இந்திய அரசியலிற் புகுந்தனர். அப்போது இந்துக்களும், மகம்மதியர்களும் ரவுலட் மசோதாக்களை* எதிர்த்துக் கிளர்ச்சிசெய்தனர். போர் முடிவில் ஐரோப்பியத் துருக்கியையும் ஆசியத் துருக்கியையும் பிரித்துக் கலிபா அரசைத் தொலைத்துவிடவேண்டுமென்று ஐரோப்பிய அரசியலார் குறிப்பித்த கருத்தை ஆலி சகோதரர்கள்† மறுத்துக் கிளர்ச்சி செய்தனர். இவற்றால் ஏற்பட்ட குழப்பங்கள் அமரிட்ஸார்‡ கலகத்தில் முடிந்தன. அக் கலகத்தில் இந்துக்களும் மகம்மதியர்களும் இரத்தஞ் சிந்தினர். இந்துக்களும் மகம்மதியர்களும் ஒற்றுமைப்பட்டனர். இத் தருணத்தில் மாண்டேக் செம்ஸ்போர்ட்§ அரசியற் சீர்திருத்த அறிக்கையை இந்தியர் அசட்டை செய்தனர். ரவுலட் சட்டத்துக்கு எதிர்ப்பாகத் தொழிலாளிகளும், வணிகர்களும் வேலை நிறுத்தஞ் செய்வதற்கு ஆர்ட்டல்¶ என்னும் முறையைக் காந்தியார் கைக்கொண்டார். ஆர்ட்டலினால் கலகம் ஏற்பட்டபோது காந்தி கலகத்தைக் கண்டித்தார். ஆர்ட்டலிற் கலந்தவர்களைப் போலிஸார் பிடித்துச் சிறைசெய்யவே இந்தியா முழுவதும் கொதிப்பு ஏற்பட்டது. ஆர்ட்டல்காரர்களுக்கும் படைகளுக்கும் மரணம் விளைவிக்கும் அடிபிடி சண்டைகள் அமரிட்சாரிலும் பிற இடங்களிலும் நடந்தன. காந்தியார் வருத்தப்பட்டுக் கூறியதாவது, “இவைகளெல்

* Rowlatt Bills. † Ali brothers. ‡ Amritsar.
§ Montague-Chelmsford. ¶ Hartal.

லாம் என்பெயரால் நடப்பது கேள்விப்பட்டு நான் துக்கமடைகின்றேன். பலவந்தமான செய்கைகளுக்குக் காரணமாக இருப்பவர்கள் என்னை மதியாது அவமானப்படுத்துகிருர்கள்" என்பதே. தம்மைப் பின்பற்றுவதாய்க் கூறுகின்றவர்கள் சத்தியாக்கிரகஞ் செய்வதற்குத் தகுந்தபடி ஒழுக்கப் பயிற்சியும் உடற் பயிற்சியும் அடையவில்லை என்று தெரிந்து அம்முறையை அவர் நிறுத்தி வைத்தார். தாமாக விரும்பி வருகின்ற சிலரைச் சேர்த்து, எதிரி தாக்கும்போது சாந்தமாய் இருப்பதற்கு அவர்களைப் பழக்கினுர்.

1920-ல் காந்தியடிகள் மற்றக் காங்கிரஸ் தலைவர்களோடு சேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினுர். அதனுல் காங்கிரஸ் உதவியாளரும், சார்ந்தவர்களும் எல்லா வகையான அரசாங்க நிர்வாக வேலைகளினின்றும் விலகினர். மாணவர்கள் பள்ளிக்கூடங்களினின்றும் உயர்தரக் கலாசாலைகளினின்றும் விலகினர். பட்டங்களைப் பட்டதாரிகள் வேண்டாமென்று ஒதுக்கினர். செல்வர்கள் அரசாங்கக் கடனுக்குப் பணம் உதவாதிருந்தனர். அரசாங்கத்தாருடைய பள்ளிக்கூடங்களுக்குப் போவதைக் காங்கிரஸைச் சார்ந்தவர்கள் தடுத்தனர். சிவில் வழக்குகள் கோர்ட்டிற்குப் போகாமல் ஜனங்கள் தங்களுக்குள்ளே முடிவு செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. சட்டசபைக்குப் போவது மறுக்கப்பட்டது. சுதேச சாமான்களையே வாங்கவேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. மகம்மதியர்களுடைய கலிபா அரசியல் கிளர்ச்சியில் இந்துக்கள் யாதொரு நிபந்தனையுமின்றிச் சேரும்படி காந்தியடிகள் தூண்டினர். இக்காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு மிகுந்த எதிர்ப்பு நாடு முழுவதும் ஏற்பட்டது. 1921ல் மலையாளத்தில் **மாப்பிள்ளைமார் கலகம்*** ஏற்பட்டது. ஆலி

* Moplah Rebellion.

சகோதரர்கள் சிறை செய்யப்பட்டார்கள். இதற்கிடையில் திலகர் உயிர் நீத்தனர். ஸி. ஆர். தாஸ் என்னும் தேசியத் தலைவர் சிறையிலிருந்தார். இளைய இந்தியா* என்னும் வாரப் பத்திரிகையில் காந்தியடிகள் தமது அரசியற் கருத்துக்களை வெளியிட்டுக்கொண்டிருந்தார். அவர் கருத்துக்களை சி. ஆர். தாஸ், மோதிலால் நேரு முதலிய காங்கிரஸ் தலைவர்கள் முற்றிலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இளைஞர் உலகம் மிகவும் தழுவிக்கொண்டது. இளைய நேரு, ருஷியப் புரட்சிக் கருத்துக்களைக் கவனிப்பாராயினர்.

காந்தியடிகளின் அரசியற் கொள்கை, விவகாரம் செய்யுங் கொள்கைபோலல்லாமல், ஆசிரியர் கற்பிக்கும் போதனை போன்றிருந்தது. அது மக்கள் அறிவுக்கு வேலைகொடாமல் அவர்கள் உணர்ச்சியைக் கவர்வதாயிருந்தது. தீண்டாமையை ஒழித்தல், வெறிப் பானங்களின் வியாபார நிறுத்தஞ் செய்தல், வீட்டுக்கு வீடு நூற்பதைக் கிராமப் பொருளாதாரத் தொழிலாளர் கைக்கொள்ளுதல், அந்நிய நாட்டுத் துணியை வாங்காது ஒழித்தல் என்பவைகளே சுய ஆட்சி வழியிலுள்ள படிகளாகும் என்பது. அவற்றினால் மக்கள் விழிப்புற்று ஒழுங்குபட்டுச் சுயராச்சியம் எய்துவரென்பது காந்தியடிகளின் கொள்கை.

அவருடைய இரண்டாவது கிளர்ச்சி 1922 பிப்ரவரியில் தொடங்கிற்று. அதனால் சவுரிசவுரா என்னும் இடத்தில் தெருக்கூட்டம் இந்திய போலிஸாரில் சிலரைக் கலகஞ் செய்து எரித்துவிட்டது. அதைக் கேட்ட காந்தியடிகள் தாம் செய்தது பெருந் தவறென்று உணர்ந்து சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டார். காங்கிரஸ் உட்கழகத்தார்† அவருடைய தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள். அவர்கள் எதிர்ப்புக்குப் பதிலாகக் காந்தி எழுதியதாவது,

* Young India. † Congress Committee.

"நான் மோசமான தோல்விக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். நான் எப்போதும் குறைந்த கூட்டத்திலேதான் இருக்கிறேன். அரசாங்கத்தார் அஞ்சுவது நான் பெருந்திரளான மக்களை வசப்படுத்தியுள்ளேன் என்பதேயாகும். அதற்கு அவர்களைப் பார்க்கிலும் நான் அஞ்சுகின்றேன் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளுவதில்லை. ஆலோசனை இல்லாத பெருங்கூட்டத்தில் நான் அருவருப்படைகின்றேன். அவர்கள் என்மேல் துப்பி என்னை இகழ்ந்தால், நான் என் நிலை இன்னதென்பதைத் திட்டமாய் உணர்வேன்".

அவருடைய அரசியல் எதிர்ப்பினால் அரசாங்கத்தார் தம்மீது நடவடிக்கைகள் நடத்துவார்களென்பதை அவர் எதிர்பார்த்திருந்தார்.

1922 மார்ச்சு மாதத்தில் காந்தியடிகள்மேல் குற்ற வழக்குத் தொடரப்பட்டது. அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். *வழக்கறிஞர் தலைவரின் பேச்சினை ஆமோதித்துச் சட்டத்தின் கடுமையான தண்டனையைத் தமக்கு விதிக்கும்படி அவர் கேட்டார். அவர் நீதிபதியிடம் சொன்னதாவது, "நெருப்பினோடு விளையாடிக்கொண்டிருந்தேன் என்பதை நான் அறிவேன். நானே என்னை அபாயத்துக் குள்ளாக்கிக் கொண்டேன். என்னை விடுதலை செய்தாலும் நான் மீட்டும் அப்படியே செய்வேன். அப்படிச் செய்யாவிட்டால் என் கடமையில் நான் தவறியவனாவேன். என் ஜனங்கள் சிலவேளை பித்துக் கொண்டுள்ளார்கள். அதற்காக நான் மிகவும் மனம் வருந்துகிறேன். ஆகையால் இலேசான தண்டனைக்கல்லாமல், விரும்பிச் செய்த குற்றத்திற்காகச் சட்டத்தின்படி விதிக்கப்படும் மிகக் கடுமையான தண்டனைக் குள்ளாவதற்கு நான் தயாராயிருக்கிறேன். அதுவே ஒரு பொறுப்பான

* Advocate-general.

நகரவாசியின் உயர்ந்த கடமை என்று தோன்றுகிறது" என்பதே. நீதிபதி இந்தப் பேர்பெற்ற கைதியின் ஒழுக்கத்தையும் நோக்கத்தையும் முற்றிலும் நன்கு மதித்து அவரை மிக மரியாதையாக நடத்தினர். ஆறு வருடம் வெறுங்காவல் அவருக்கு விதித்தபோது நீதிபதியும் அவரும் ஒருவருக்கொருவர் நன்மனத்தோடு பணிந்து கொண்டார்கள். *எரவாடா சிறையில் இரண்டு ஆண்டுகள் அவர் தனிக்காவலில் இருந்தார். †குடல்நுனி வீக்க நோய்க்காக அவருக்கு ரணசிகிச்சை நடந்தபின் அவர் சிறையினின்று யாதொரு நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டார். சிறையிலிருந்த காலத்தில் நூல் நூற்பதிலும், கொரான், கிறித்தவ நூல்கள், இந்து சமய நூல்கள் முதலியவற்றைக் கற்பதிலும், உருதுமொழி தெரிந்துகொள்வதிலும் நேரங் கழித்தார். ஒரு பறவைபோலத் தாம் ஆநந்தமாக வாழ்ந்ததாக அவர் குறிப்பித்தார்.

விடுதலையானபின் அந்நிய நாட்டுச் சாமான் மறுப்பு ஒழிந்திருப்பதையும், கதர் கைத்தறி உடைகளை நூற்றலும் நெய்தலும் கவனிக்கப்படாதிருப்பதையும், காங்கிரஸ் உட்கழகம் பொது ஜனங்களினின்று பிரிந்திருப்பதையும் இந்து மகம்மதிய ஒற்றுமை முறிந்திருப்பதையும் அவர் கண்டார். ஒவ்வொன்றையும் அடிப்படையினின்று மறுபடியும் கட்ட வேண்டியதாயிருந்தது. எல்லைப் புறத்தில் இந்து மகம்மதியக் கலகங்கள் தலையெடுத்தன. காந்தியடிகள் காரியங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் 21 நாள் பட்டினியிருந்து தவங்கிடந்தார்.

1924லிருந்து 1928 வரை காங்கிரஸை நடாத்தும் தலைமை பிறர் கையிலிருந்தது. 1926-ல் பேரரச மகாநாடு பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் மதிப்பு நிலையைச் சீர்

---

* Yeravada. † Appendicitis.

திருத்தம் செய்யத் தீர்மானித்தபோது சுய ஆட்சிக் கிளர்ச்சிக்குப் புதுவேகம் ஏற்பட்டது. சுயராச்சியக்காரர்கள் காங்கிரஸோடு கலந்து இடையிடையே தடை செய்யுங் கொள்கையை விட்டுத் தெளிவாக அரசாங்கத்தை எதிர்க்கத் தொடங்கினர்.

1929 அக்டோபரில் அரசப் பிரதிநிதியாகிய இர்வின் பிரபு இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு மதிப்பு நிலை கொடுப்பதாகத் தெரிவித்தார். ஆனால் இங்கிலாந்திலுள்ள அவருடைய கட்சிக்காரர்கள் அவரைக் கண்டித்ததின் நிமித்தம் இந்தியாவில் புதிய சந்தேகங்கள் ஏற்பட்டன. 1930-ல் காங்கிரஸானது காந்தி சார்பாக ஒரு பக்கமும், ஜவஹர்லால் நேருவின் சார்பாக மற்றொரு பக்கமுமாகப் பிரிந்து குடியேற்ற நாட்டின் நிலை போதாது என்று அதனைப் பற்றிய தீர்மானத்தைத் தள்ளி முழு சுய ஆட்சி வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

சட்டமறுப்புப் புதியதாகத் தொடங்கவேண்டுமென்று விளம்பரம் செய்யப்பட்டது. அதனால் வரும் கடுமையான பலாத்காரப் போரைத் தடுப்பதற்காகக் காந்தியடிகள் அரசப் பிரதிநிதிக்குக் கடைசியாக ஒருமுறையீடுசெய்யத் தீர்மானித்தார். 1930 தொடக்கத்தில் இந்திய அரசாங்கத்தார் அதன் உண்மை நோக்கத்திற்கு முன்மாதிரியாக உப்புவரியையும், வெறிப்பான வரியையும் உடனே தள்ளிவிடவேண்டுமென்றும் அந்நியநாட்டுத்துணி விற்குங் கடைகளில் மறியல் செய்வதைத் தடை செய்யக்கூடாதென்றும் அவர் வேண்டினர். அவ்வாறு அதிகாரிகள் செய்தால் சட்டமறுப்பு இயக்கத்தை உடனே நிறுத்திவிடுவதாகச் சொன்னார். அரசாங்கத்தார் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்காமையால் அவர் ஆமதபாத்திலுள்ள தம்முடைய ஆசிரமத்திலிருந்து கடலை நோக்கிப் புறப்பட்டார். இராஜபுத்திரவீரர்கள் சண்டைக்குப்

போகுங்காலத்திற் செய்ததுபோல, மாலையிட்ட குதிரை ஒன்று ஏறுவோன் இல்லாமல் அவருக்குமுன் சென்றது. அவரும் அவரோடு சென்ற திரளான மக்களும் தண்டிக் கடற்கரையை அடைந்து அங்கே அரசாங்கக் கட்டளைக்கு மாறாகக் கடல் தண்ணீரைக் காய்ச்சி உப்பு எடுத்தனர். அதே காலத்தில் பம்பாய் மாகாணத்தில் பல இடங்களில் அரசாங்க உப்பளங்கள் சூறையாடப்பட்டன. சாராயக் கடைகள் மறியல் செய்யப்பட்டன. பிரிட்டிஷ் சாமான்களை வாங்கக் கூடாதென்று இந்தியர் தடை செய்யப்பட்டனர். ஆங்கில ஆட்சிக்கு மிகக் கடுமையான எதிர்ப்பு இக்காலத்தில் ஏற்பட்டது. தேசிய இந்தியாவின் வீரராகவும் ஒற்றுமையின் தனி அடையாளமாகவும் காந்தியடிகள் திகழ்ந்தனர். அவர் சொற் சத்தி உச்சநிலையில் இருந்தது. அவர் போதித்த சாந்தமான சட்டமறுப்பும் முனைப்பற்ற எதிர்ப்பும் கடைசியாக வெற்றி பெற்றன. இந்திய அரசியலில் நடுத்தரமாயிருந்த தாராளக் கட்சிக்காரர்,இந்து மகாசபையார் முதலியோரெல்லாரும் இந்தியாவின் பல பாகங்களில் அடித்து வீசிக்கொண்டுபோன சமய வெறியோடுகூடிய அரசியற் பேரலைகளால் தாக்கி ஒதுக்கப்பட்டனர். செல்வமிக்க வர்த்தகர்கள் நுண்ணியதாய் நூற்கப்பட்ட பட்டாடைகளையும் மெல்லிய பருத்தி ஆடைகளையும் எறிந்துவிட்டுத் தேசியக் கிளர்ச்சிக்கு அடையாளமாகக் கனத்த கதர்துணியைக் கட்டிக்கொண்டனர். அவர்கள் மனைவிகளும் பெண் குழந்தைகளும் கோஷா முறையை விடுத்துப் பிடிவாதமாக அந்நியநாட்டுத் துணிகளை விற்குங் கடைகளை மறியல்செய்யும் வீரர்களோடு நின்று ஒருங்குழைத்தனர். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் பல நூற்றுக்கணக்கான கிராமங்களிலுமுள்ளவர்கள் வெள்ளை நிறமுள்ள காந்திக் குல்லாவைக் கம்பீரத்துடன் அணிந்து வெளிப்போந்தனர். விசாரணை இல்லாமல் அரசாங்கக் கைதி

யாகக் காந்தியடிகள் சிறையிடப்பட்ட நேரத்தில் இந்திய மக்கள் பெரும்பாலர்க்கு அவர் கிறிஸ்து நாதரைப்போன்ற தெய்வத் தன்மையுடையவராயும் மகாத்துமாக்க ளெல்லாரினுஞ் சிறந்த மகாத்துமாவாகவும் விளங்கினர்.

1930 மே 4-ம் நாள் காந்தியடிகள் எரவாடா சிறைக்கு மீண்டும் சென்றார். ஒருவர்பின் ஒருவராக அவருடைய துணைவர்களும் பிடித்துச் சிறையிடப்பட்டனர். அடுத்த மாதத்தில் சைமன் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டது. அது காந்தியடிகளின் கையை வலுக்கச் செய்தது. அவரைப் பின்பற்றியவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது கோபம் கொண்டனர். சிறையிலிருக்கும் காந்தியடிகளோடு சமாதானம் செய்ய முயற்சிகள் நடந்தன. ஆனால் 1934 நவம்பரில் காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலிருக்கும்போதுதான் லண்டனில் **வட்டமேசை மகாநாடு** தொடங்கிற்று. அஃது ஒத்திவைக்கப்பட்டபின் மகாத்துமாவைச் சமாதானம்செய்ய நடந்த முயற்சி வெற்றிபெற்றது. காந்தி விடுதலை செய்யப்பட்டார். 1931 மார்ச்சு மாதத்தில் டில்லியில் இர்வின் பிரபுவோடு அவர் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். அதனால் காங்கிரஸ் சட்டமறுப்பை நிறுத்துவதாக ஒப்புக்கொண்டது. அரசாங்கம் அதன் அடக்குமுறைக் கட்டளைகளை நிறுத்திவிடுவதாக வாக்களித்தது.

இதற்குப் பின் காங்கிரஸின் அதிதீவிரவாதிகளின் எதிர்ப்பைக் கவனியாமல் காந்தியடிகள் 1931 செப்டம்பரில் லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேசை மகாநாட்டிற்குப் போயிருந்தார். அங்கே அவர் எதிர்பார்த்தபடி இந்தியாவின் எதிர்கால அரசியலைப்பற்றிய விவாதம் முக்கியமாய் நடைபெறாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் சிறப்பாகப் பேசப்பட்டது. முதல் மந்திரியாகிய கனம் **ராம்சே மாக்டோனல்ட்** செய்த தீர்ப்பின்படி எதிர்கால இந்திய சட்டசபைகளில்

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனித் தேர்தற் றொகுதிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. குறைந்த கூட்டத்தாருக்காக ஏற்பட்ட உட் கழகத்தின்முன் காந்தியடிகள் கடைசியாகப் பேசியபோது அவர் இதைப் பலமாக எதிர்த்தார். அவர் இந்தியாவுக்குத் திரும்பி ஆறுநாள் ஆவதற்குள் 1932 ஜனவரி 4-ஆம் நாளில் அவர் மீண்டும் எரவாடா சிறையில் வைக்கப்பட்டார். அடுத்த எட்டுமாதங்களாக இந்தியாவி லுள்ள ஆறுகோடி தீண்டா மக்களை உயர்ந்த வகுப்பினரினின் றும் பிரிப்பதைக் கண்டித்துச் செய்த எதிர்ப்பெல்லாம் பயன் படாமலிருந்தது. மேல்வகுப்பினருக்கும் கீழ்வகுப்பினருக் கும் உள்ள பிரிவினை என்றும் நிலைநிறுத்துவதாக அவ்விதி அவருக்குத் தோன்றிற்று. அவர் கூறியதாவது, "இந்தியா வுக்கு முழுச் சுயாதீனம் கிடைப்பதா யிருந்தாலும் தீண்டா தாருடைய முக்கிய உரிமைகளை நான் விட்டுவிடமாட்டேன். தீண்டாதாரின் பெருங்கூட்டத்திற்குப் பிரதிநிதியாய் இருப்ப தற்கு நானே உரிமை கொண்டாடுவேன். அவர்கள் எல்லா ரையும் கேட்டறிய ஒருதேர்தல் நடக்குமாயின் நானே அதில் முதல் வெற்றி பெறுவேன். நான் ஒருவனே பிரிப்புத் தேர்தலை எதிர்ப்பதா யிருந்தாலும் நான் என் உயிர்வலிமை யோடு அதனை எதிர்ப்பேன்" என்பதே.

1932 செப்டம்பர் 20-ம் நாள் காந்தியடிகள் தம் சபதத்தை நிறைவேற்றத் தொடங்கிச் சாகும்வரை பட்டினி கிடக்கத் தொடங்கினர். அவர் சிறையின் முற்றத்திலிருந்த மாமரத்தின் அடியில் அவர் இருந்தபோது, சாக்ரடீஸைப் போல் பரிதவிக்கத்தக்க நிலையில் அவர் இருந்து இறந்துவிடு வாரோவென்று பலர் அஞ்சினர். இந்தியா முழுவதும் அவரிடத்தில் பரிதாபம் கொண்டது. ஆறு நாள் அவர் பட்டினி கிடந்தபின், தாழ்த்தப்பட்ட வகுப்பாருடைய பிரதி நிதிகள் ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். அது

பூஞ உடன்படிக்கை என்னப்படும். மாளவியா, ஜெயக்கர், சப்புரு, இராஜகோபாலாச்சாரி என்னும் நால்வரும் உயர்தர வகுப்பாருக்காகக் கையெழுத்திட்டனர். டாக்டர் அம்பெட்காரும், எம். சி. ராஜாவும் தாழ்த்தப்பட்டாருக்காகக் கையெழுத்திட்டனர். தீண்டாமை வடுவை ஒழிக்க இருதிறத்தாரும் ஒருங்கு முயலவேண்டு மென்பது அதன் முக்கிய நோக்கம். தீண்டாதாருக்கு மாகாணச் சட்டசபைகளில் அரசாங்கத்தார் ஒதுக்கிவைத்த எழுபத்தோரிடங்களுக்குப் பதிலாக நூற்றுநாற்பத்தெட்டு இடங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்பதும், இந்திய சட்டசபையில் நூற்றுக்குப் பதினெட்டு வீதம் இடங்கள் கொடுக்கப்படவேண்டு மென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டன. இருவகையான தேர்தல் நடைபெறவேண்டு மென்றும் முதல் தேர்தலில் தீண்டாதார்களுள் நான்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்றும், அவர்களுள் ஒருவர் தீண்டாதாரும் உயர்குல இந்துக்களும் கலந்த தொகுதியால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், உடன்படிக்கையில் விதிக்கப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் பிற்பயனாக வடஇந்தியாவிலும், கீழ் இந்தியாவிலும் நூற்றுக் கணக்கான கோயில்கள் தீண்டாதாருக்குத் திறந்துவிடப்பட்டன. தென் இந்தியாவிலும் இவ்வியக்கம் பரவுதலாயிற்று. வைதீகர்கள் சிலரோ அதனை எதிர்ப்பாராயினர்.

இந்த உடன்படிக்கைகள் நடந்த சில மாதங்கள் கழிந்த பின் காந்தியடிகள் சிறையினின்று விடுவிக்கப்பட்டார். அதற்குப் பின் அவர் காங்கிரஸில் முனைப்பாகக் கலந்து கொள்ளாமல் நாட்டுப் புறங்களில் தீண்டாமை ஒழிப்பதற்கும், கிராமச் சீர்திருத்தங்கள் செய்வதற்கும் உழைப்பாராயினர். காங்கிரஸ் தலைவர்கள் அவரை அடிக்கடி கலந்து கொண்டனர். அவர் நாகபுரிக்கருகிலுள்ள வார்தாவில் தங்கிச்

சில கல்வித் திட்டங்கள் வகுத்தனர். அது ஜாதித் தொழில் முறைகளை வற்புறுத்துந் தன்மையதென்று கருதிப் பலர் அதனை எதிர்த்தார்கள். இராஜ்கோட் முதலிய நாட்டு மன்னர் ஆட்சிகளில் குடிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்து அவர் வெற்றி பெற்றார். சில நாட்களுக்குமுன் காந்தியடிகள் காங்கிரஸில் கலந்து இந்தியர் போருக்கு உதவிபுரிய வேண்டுமாயின் அவர்களுக்கு ஆட்சி உரிமைகள் பூர்த்தியாய்க் கிடைக்க வேண்டுமென்று அரசப் பிரதிநிதியோடு வாதாடினர். அரசியலில் இந்து மகம்மதிய ஒற்றுமையை நிலைபெறுத்துவதற்காக மகம்மதிய ஜின்னாவோடு சொற்போராடினர்.

சாங்கிரஸில் பிளவுகள் ஏற்பட்டாலும் பெரும்பாலர் காந்தியடிகளின் கருத்தையே தழுவி நடக்கின்றனர். இன்றும் அவர் சொல்லாற்றலே உச்ச நிலையில் இருக்கிறது.

பல செயல்களில் காந்தியடிகள் ஐரோப்பியப் போக்குடையவரென்று இந்தியரிற் சிலர் கருதுகின்றனர். அவருக்கு இந்து சமயங்களின் உயர்ந்த கொள்கையிற் பற்றிருப்பது கண்டும் அவர் ஆடம்பரமற்ற எளிய ஆன்மலாப வாழ்க்கையை வற்புறுத்துவது தெரிந்தும் மேலை நாட்டினர் பலர் அவரைக் குறை கூறுவர். கீழை நாட்டில் தக்கவற்றையும் மேலைநாட்டுச் சீர்திருத்த முறைகளையும் போற்றுகின்ற தற்கால இந்திய இளைஞர்கள் மகாத்மாவை நன்கு மதிக்கின்றனர். மகாத்மா தம்முடைய முழு வாழ்க்கையையும் எல்லாம் வல்ல கடவுளின் அருளொளிக்கு உட்படுத்தி அதன் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதையே மேற்கொண்டுள்ளார்.



பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட்



முஸ்தாபா கெமால்



சர் ஆலிவர் லாட்ஜ்

## உ. பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட்

பிராங்கிளின் டிலானோ ரூஸ்வெல்ட்டைப்பற்றி மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய முக்கிய செய்தி என்னவென்றால் அவர் போருக்கு முந்திய காலத்து மனிதரென்பதே. சனங்கள் மிகவும் பொருளாதாரத் தொந்தரவினால் மூன்று ஆண்டுகளாக வருந்தி அதிருப்தி அடைந்ததின் பயனாக அவர் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தலைவரான முதலாண்டில் தன்னோடொத்த சனங்கள் பலருக்கும் பாதுகாப்பாளரானார். ஆனால் அவர் வேலைக்கு வருமுன் காப்பாளராய் இல்லை. அவர் தலைமைக்கு சனங்களின் வாக்குரிமை கிடைத்தது, அவர் காப்பாளராய் இருப்பார் எனக் கருதி அன்று, 1912-ம் வருடத்தை நினைப்பூட்டக் கூடிய சீர்திருத்தச் சட்டங்களைத் தழுவிப் பேசி வெற்றி பெறக்கூடிய திறமையான அரசியல் வல்லாராய் அவர் மதிக்கப்பட்டதுபற்றியே என்க. 1932-ல் திரு. ஹூவர் என்பவரைத் தோற்கடித்ததற்குக் காரணமான சனங்களது உரிமைச்சீட்டு ஹூவர் இடத்தில் உள்ள நம்பிக்கைக் குறைவைக் காட்டினதேயன்றி ரூஸ்வெல்டினிடம் உள்ள நம்பிக்கையைக் காட்டினதாக இல்லை. ரூஸ்வெல்ட் நன்மை செய்வாரென்று சனங்கள் எதிர்பார்த்தனரேயொழிய உறுதியாக நம்பவில்லை. ஆதலால் தொடக்கத்திலேயே ரூஸ்வெல்டுக்கும் லெனின், ஸ்டாலின், முசோலினி முதலியவர்களுக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. அவர்களெல்லாம் போரில் ஏற்பட்ட மேலைநாட்டு முதலாளி ஆதிக்க முறிவு காரணமாக அதிகாரத்தில் மேல்நிலை அடைந்தவர்கள். புதிய முறைகளைக் கையாண்டவர்கள். ஆனால் ரூஸ்வெல்ட் அரசியல் வன்மையில் அவர்களைப்போல முக்கியமானவரே.

அவர் தலைவராகத் தொடங்கியதற்குமுன் நடத்திய வாழ்க்கை சிலவகையில் அபூர்வமானது. ஒருவகையில் அது மிகவும் தனியான போக்குடையது. ஆனால் அவர் அதிகாரத்துக்கு வந்த முறை 'அமெரிக்க சனநாயகம்' 'அமெரிக்காக் கட்சித் திட்டம்' என்ற முன்னே வகுத்த வாயில்கள் வழியாகவே யென்றறிக. 1912-ல் தியடோர் ரூஸ்வெல்டின் கிழாதல், 1924-ல் ராபர்ட்யம் லாபாலட்சர் என்பவரின் கிழாதல் மூன்றாவது ஆள் வெற்றியடைய வேண்டுமானால் வழக்கமான அமெரிக்க அரசியல் முறையி லிருந்து மிக விலகி அதனைப் பெறவேண்டியதாக இருக்கும். பிராங்கிளின் ரூஸ்வெல்ட் புதிய ஆளாக இல்லை. 1910-ல் நியூயார்க் சட்டமன்ற மேல் சபைக்கு ஓர் அங்கத்தினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அஃது அவருடைய முதல் பொது சனவேலை. இரண்டாவதாக வில்சனுடைய இரு முறை நிர்வாக காலத்தில் கடற் படைக்குத் துணை அமைச்சராக வேலை பார்த்து வந்தார். 1920-ல் துணைத்தலைவர் வேலைக்குக் குடியரசுக் கட்சியால் பேர் கூறப்பட்டுத் தேசம் முழுவதும் யாத்திரை செய்திருக்கிறார். அதைத் தொடர்ந்து பன்னி ரண்டு ஆண்டுகளாகச் சனநாயகக் கட்சியின் உள்நிர்வாகத்தலை வர்களுள் ஒருவராக அவர் இருந்திருக்கிறார். ஐக்கிய மாகா ணங்களில் அதிக மக்கள் நிறைந்த மாகாணத்தின் ஆளுந் தலைவராக (கவர்னராக) இருமுறை இருந்திருக்கிறார். இந்தக் காலங்களிலெல்லாம் அவர் தம் கட்சியைவிட்டு விலகின தில்லை. கட்சிக்குள் அவர் சாந்தமான முறையைத் தழுவின வர். அவருடைய இயற்கைப்போக்கு சமாதானமும் மத்தி யஸ்தமும் செய்வதற்கே தவிர வல்வழக்காடுவதற்கில்லை. அவர் தாராளக் கொள்கையுடையவராய் இருந்தாலும், சன நாயகக் கட்சி பழங் கொள்கைக்காரரைத் தேர்தலுக்குப் பேர் கூறியபோது அவர்களை ஆதரித்தார்.

பிராங்கிளின் ரூஸ்வெல்ட் கொண்ட கொள்கை போருக்குப் பிந்திய சோதனைக் காலத்தில் உற்பத்தியாகவில்லை. அது குடியரசுக் கட்சியில் 1912-ல் ஏற்பட்ட பிளவில் உற்பத்தியானதாகும். அவர் நோக்கம் முற்போக்குக் குடியரசுக் கட்சியினரைச் சனநாயகக் கட்சியிற் சேர்த்துப் பிணிப்பதே. 1912-ல் தியடோர் ரூஸ்வெல்டுக்கும் * டாப்ட் என்பவருக்கும் குடியரசுக் கட்சி உரிமைச் சீட்டுகள் பிரிவுபட்டதால் உட்ரோ வில்சன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1916-ல் மறுபடி தேர்தல் பெற்றது முற்போக்குக் குடியரசின் வாக்காளரது உதவிகொண்டே. வில்சன் அகில பழைய குடியரசுக் கட்சிக்கும் அகில சனநாயகத்தரென்ற கட்சிக்கும் ஒற்றுமை உண்டாக்கச் செய்த உபாயங்கள் தவறிப்போயின. போருக்குப் பிந்திய கிளர்ச்சியில் இரண்டு கட்சிக்காரர்களும் பழங் கொள்கைகளைத் தழுவினர். முற்போக்குக் குடியரசினர் குடிஅரசுக் கட்சியென்று பேர் பெற்ற எல்லைக்குள் புதுச் சுயாதீன நிலைமையில் நின்றனர். 1924-ல் லாபாலட் என்பவரை அவர்கள் மறுபடியும் தேர்ந்தெடுக்கச் செய்த முயற்சி தவறினபோது மிகுந்த எண்ணுடைய ஏதாவது ஒரு கட்சியின் விரிந்த நோக்கமுடைய தலைவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அவர் தயாராய் இருந்தனர். தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே வில்சன் 'ஒரு பாகம் உண்டாக்கிய ஒற்றுமையை முற்றுவித்தற்குத் தம்மைக் கருவியாக்கிக்கொள்ளப் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் தொடங்கினர். உள்நாட்டுப் போர்க்காலம் முதல் மிகுந்த தொகையினர் பல காலங்களில் சனநாயகக் கட்சியை முற்போக்குக் குடியரசுக் கட்சியினரோடு சேர்த்து அந்தக் கட்சியையே நாட்டில் மிகுந்த எண்ணுடையதாகச் செய்வதாகக் கூறினர். குடியரசுக் கட்சி

* Taft.

நாட்டின் பொருளாதாரப் பொருளாக்க உரிமைகளில் ஈடுபட்டிருந்ததால் எப்போதும் தாராளக் கொள்கையுடையதாக இருக்கமுடியாது. சனநாயகக் கட்சி தாராள நோக்கமுடைய மிகுந்த எண் கட்சியாக மாற்றப்படலாம். ஏனெனில் பழங் கொள்கையை ஆதரிக்கும் அதன்பகுதி தென்பாகத்தில் உழவுத்தொழிலைவற்புறுத்துவதாயும் பரம்பரையினலும் இனசம்பந்தமான காரியங்களாலும் சனநாயகக் கட்சிக்கே கட்டுப்பட்டிருந்தது. அது தாராள சனநாயகத் தலைமையை விடுத்துப் பழைய குடியரசுத் தலைமையின் கைக்குள் இனங் காரணமாகச் செல்வதில்லை. பிராங்கிளின் ரூஸ்வெல்ட் தாம் கருதிய சமாதானத்தை முற்றுவித்ததற்கு அவர் ஒரு ரூஸ்வெல்டாய் இருந்தமையாலேயே மிகவும் தகுதியுடையவரானர். அவருக்குத் தூர இனத்தாராகிய இன்னெரு ரூஸ்வெல்ட் குடியரசுக் கட்சியின் மூலம் மேல் நிலைக்கு வந்து தமக்கு அனுகூலமான அரசியற் சார்பான ஐதிகத்தை ஏற்படுத்திக் கொண்டார். நாம் பேசும் ரூஸ்வெல்ட் சனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். அவர் ஒரு பிராட்டஸ்டண்ட் கிறித்தவர். வில்சனுடைய மாணுக்கர். நாட்டுப்புறத்தைத் தழுவும் ஜனநாயகக் கட்சியினர். இது, அவரைத் தென்பாகத்தார் விரும்பும்படி செய்தது. ஆனல் அவர் வந்த மாகாணம் மிகுந்த சனநெருக்கமுடையதாய் இருந்ததோடு அங்கே இருந்த சனநாயகக் கட்சியில் மிகுதிப்பேர் கத்தோலிக் நகரவாசிகளாய் இருந்தனர். ரூஸ்வெல்ட் அம் மாகாணத் தலைமைக்கு முதல் கத்தோலிக் அமைச்சராய் நின்ற ஆல்பர்ட் ஸ்மித் என்பவரை ஆதரித்தவருள் ஒருவர். தம்முடைய மாகாணத்திலே இருமுறை அதிகாரத்துக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவது முறையில் அதுவரை இல்லாத மிகுந்த எண் அவருக்குக் கிடைத்தது. இவ்வாறு அவர் வடபாகத்து நகர வாழ்க்கையிலுள்ள ஜன

நாயகக் கட்சியினரைத் தம்பால் இழுத்துக்கொண்டவர். மேலும் அவர் நீராவி ஆற்றலைப் பொதுசனங்கள் நன்மைக்காக விருத்தி செய்தல், வயோதிகர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுத்தல், உழவர்களுக்கு இடைஞ்சல் தீர்த்தல், வேலையில்லாத் திண்டாட்டத்தாருக்கு அரசாங்க உதவி புரிதல் முதலிய நன்மைகளை வற்புறுத்திப் பேசி முற்போக்குக் குடியரசினரையும், அதிருப்திப்பட்ட மேற்குப் பக்கத்து உழவர்களையும் கவர்ந்துகொண்டனர். அவருடைய கொள்கை அபாய வீழ்ச்சிக்கு இடமில்லாமல் எல்லாவற்றையுந் தழுவினதாயிருந்தது. அவருடைய கொள்கையினாலே இயற்கையாகவே அவர் தலைவராகத் தேர்ந்தெடுத்தற்குரிய சமயம் வாய்த்திருந்தது. 1928-ல் போலத் திகில் ஏற்பட்ட போதுதான் அது கடினம். பொருளாதாரக் குறைவு ஏற்பட்ட மூன்றாவது ஆண்டில் அஃதாவது 1932-ல் தலைமைப் பதவியை அவர் நாட்டியபோது ஒரு புதிய மருந்து கண்டு பிடித்ததாக அவர் கூறவில்லை. தியடோர் ரூஸ்வெல்ட், உட்ரோ வில்சன் என்னும் இருவருடைய அரசியல் வாரிசாக ரூஸ்வெல்ட் தம்மைக் கூறிக்கொண்டார். வில்சனுடைய புதுச் சுயாதீனமும் தியடோர் ரூஸ்வெல்டின் நேர்மையான பண்டமாற்றும் கலந்த ஒரு புதிய ஊதிய முறையென்று தம் கொள்கையைச் சொல்லிக்கொள்வார்.

உண்மையில் அவ்விருவர் காலத்துக்கும் முற்பட்ட அரசியல் சமுதாயக் கொள்கைகளின் வாரிசாகப் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் இருந்தார். அவர் அமெரிக்க சமுதாயச் சிறந்த சிறு கூட்டத்தின்வழி வந்தவர். சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து முதலில் புது உலகத்துக்கு வந்து அங்கே சௌகரியமாகச் செல்வந் தேடி வாழ்க்கை வசதிகள் ஏற்படுத்திக் கொண்டு ஒரு சமுதாயமாக வாழ்ந்து வந்தார்கள். ரூஸ்வெல்டுக்குமுன் மூன்று நூற்றாண்டுகளில் அவ்வகையார்

கப்பல் வாழ்க்கையுடையவராயும் வியாபாரிகளாயும் நிலச்சு வான்களாயும் இருந்திருக்கிறார்கள். டச்சுக்காரரைச் சேர்ந்த ரூஸ்வெல்ட் குடும்பமும், பிளாண்டர்சைச் சேர்ந்த டிலானோ குடும்பமும் 17-வது நூற்றாண்டின் நடுவில் புது உலகத்துக்கு வந்தவை. ரூஸ்வெல்ட் குடும்பத்திலுள்ள மிகுதியான ஆங் கிலக் குடும்பப் பெயர்கள் புது இங்கிலாந்து, புது யார்க் என்னுமிடங்களிலுள்ள குடும்பங்களின் பெயர்களாகும். ஐக் கிய மாகாணத்தில் இந்தப் பரம்பரைகளில் ஆடம்பரமான இச் சுகவாழ்க்கை நடத்துகின்றவர்களும் உண்டு. சிலர் பொது சனப் பொறுப்பு உணர்ச்சியோடு உயர்ந்த ஒழுக்க முறைகளையும் கைக்கொண்டார்கள். அவர்கள், பொருள் செலவழித்து வேலை செய்கிறவன் தேச ஊழியத்தில் தன் னுடைய முயற்சிக்குத் தக்க பகுதியை எடுத்துக்கொள்ள லாமே தவிர அளவுக்குமிஞ்சிய அசாத்திய லாபத்தை எதிர் பார்த்தல் அல்லது கொள்ளைகொள்ளுதல் தவறென்று கருதினார்கள். ஐக்கிய மாகாணத்துப் பல செல்வர்களும் வியாபாரக்காரர்களும் அவர்கள் கூட்டத்திலிருந்து வந்திருக் கிறார்கள். ஆனால் உள்நாட்டுச் சண்டைக்குப்பின் மிகுந்த செல்வவான்களாவது, தங்கள் வகுப்பின் பொருளாதாரப் பாதுகாப்புக்கு மிஞ்சி ஏதாவது நன்மை செய்ய வேண்டு மென்ற எண்ணமுடையவர்களாவது அரசியல் தலைவர்களாக வரவில்லை. அதற்குப் புறநடையாகத் தியடோர் ரூஸ்வெல் டும், பிராங்கிளின் ரூஸ்வெல்டும் இருந்தனர். முதல் ரூஸ் வெல்டின் வாழ்க்கை இரண்டாவது ரூஸ்வெல்டின் வாழ்க் கைக்கு மிகவும் சார்பாய் இருந்தது. ஆனால் இரண்டாவது ரூஸ்வெல்ட் முதல் ரூஸ்வெல்ட்டைப் பார்க்கிலும் முக்கிய மான காரியங்களைச் செய்து முடித்தார்.

குடி அரசின் தொடக்கக் காலத்திலிருந்த பெரியா ரோடு அவர் தம்மை ஒற்றுமைப்படுத்தி உணர்ந்தார். இள

மையிலிருந்து அவர் பெரிய வீரராக எண்ணியவர்கள் * ஜான்பால் ஜோன்ஸ், † தாமஸ் ஜபர்சன், ‡ ஜ்யார்ஜ் வாசிங்டன் என்பவர்களும் அவர்களோடு ஒத்த காலத்தவருமாவர். ஒத்த காலத்தவர்களில் பலர் அவருடைய முன்னோர்கள். அவர்கள் காலத்து இளைஞர்களில் பலர் தங்களுக்கு வயது வந்ததும் நாட்டைக் கொள்ளையடித்த பெரிய பாங்கர்களையும் தொழில் முதலாளிகளையும் தங்கள் வீரர்களாகக் கருதினர். அவர் அப்படிக் கருதவில்லை. தம் இளமையில் கருதிய வீரர்களையே அவர் எப்போதும் வீரர்களாகக் கொண்டார். ஐக்கிய மாகாணத்தின் முந்திய குடியரசுச் சரிதமும் பிந்திய குடியேற்றச் சரிதங்களும் அவர் நன்கறிந்திருந்தார். அமெரிக்கக் கடற்படைச் சரித்திரமும் ஐக்கிய மாகாணப் பொதுத்தலைமை அறிக்கைகளும் அரசியல் அமைப்பு முறைகளும் அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தன. தொழிற்புரட்சிச் சரித்திரத்தைப் பார்க்கினும் அவற்றை அவர் நன்குணர்ந்தார். வாசிங்டனில் தொடங்கி சாண்டுவன்சி ஆடம்ஸ் என்பவரோடு முடிகிற பழைய வரிசை அமெரிக்கத் தலைவர்களோடு சேர்ந்த ஒரு தலைவராக அவரை மதிக்கவேண்டும். அஃதாவது அவர் உயர்ந்த வகுப்புத் தலைவர்களுள் ஒருவர். அவர்களைப் போல அவரும் எளிதான நம்பிக்கையும் துணிவும் நேர்மையும் பொறுப்பு உணர்ச்சியும் வகுப்புப் பிரிவுகளைக் கருதாத தேசீய ஒற்றுமை உணர்ச்சியும் உடையவராயிருந்தார். அவரைப் போலப் பின்னோக்கும் முன்னோக்கும் உடைய அரசியல் வல்லார் பலர் பிரிட்டனில் இருந்திருக்கிறார்கள். ஐக்கிய மாகாணங்களில் சிலரே அவ்வாறிருந்தனர்.

---

* John Paul Jones. † Thomas Jefferson. ‡ George Washington.

கூட்டி வகுப்பதற்காக அவர் நிர்வாகக்காலம் தொடங்கி ஒரு வகையான உட்சபையும் ஏற்படுத்தவில்லை. அவருக்குத் துணையாகத்தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவர்பின்பற்றும் நிகழ்ச்சி முறைகளின் பல பகுதிகளையும் ஒற்றுமைப்படுத்த வேண்டிய கடமைதான் உடையவர்.

எளிதான முயற்சியற்ற தன்னம்பிக்கையே ரூஸ்வெல்டின் சிறந்த குணங்களில் ஒன்று. அதன் ஒரு பகுதி அவருடைய குற்றமற்ற சமுதாய அடிப்படையில் உற்பத்தியாவது. அதற்கு வேறு காரணங்களும் உள்ளன.

முதலாவது அவர் அசாதாரணமான உடற்பல முடையவர். உயரமும், உறுதியும், அழகாக அமைந்த நிலையும் கண்டாரை முதற் பார்வையிலேயே நண்பராக்கும் புன் சிரிப்பும் உடையவர். இளமையிலேயே அவர் அவ்வாறிருந்தனர். அவர் நியூயார்க்கில் சட்டமன்றத்தில் 1911-ல் புகுந்தபோது தக்க பத்திரிகைக்கு எழுதுவோர் புதிதாக வந்த அவரைப் பற்றி அவர் இந்திரன்போன்றவர் என்றும், நாடகசாலையிற் சென்றால் வரும்படி ஈட்டுவாரென்றும், பெண் நடிகர்களது மனத்தைக் கவரக்கூடியவர் என்றும் பேசினர்.

இரண்டாவது பொதுநல வாழ்க்கையில் அவருக்கு விரைவான வெற்றி கிடைத்தது. முதல்தரம் சட்டமன்றத்துக்கு அபேட்சகராய் நின்றபோதே அவருடைய கட்சியில் 50 ஆண்டுகளாகப் பிற எவரும் வெற்றிபெறாத சில்லாவில் அவர் வெற்றி பெற்றார். அவர் அங்கத்தினர் பதவி ஏற்று 48 மணி நேரத்துக்குள் தம்முடைய கட்சியிலேயே ஒரு எதிர்ப்புக் குழு அமைத்து நாட்டில் மிகவும் பலமான அரசியல் இயந்திரமாய் இருந்த தம்மனேஹால் என்னும் சபையைத் தாக்கினர். ஐக்கிய மாகாண மேற்சபை அங்கத்தினர் ஒருவரைத் தெரிந்தெடுக்கவேண்டிய சமயம் வந்தபோது ரூஸ்வெல்ட் தம் குழுவோடு எதிர்த்துத் தம்மனேஹாலின்

அதிகாரத்தை அடக்கி மூன்று மாதம் அதனை மிஞ்சவிடாமல் வைத்தபடியால் அஃது அவரிடம் சரண்புகுந்து வேறொரு அபேட்சகரை நிறுத்துவதாக ஒப்புக்கொண்டது.

ஒரு கீழ்ப்பட்ட நிலையில் அரசியலுள் அவர் பிரவேசித்தது இருபது ஆண்டுகளுக்குப்பின் அவர் தலைவர் பதவி ஏற்றதுபோல வியக்கத்தக்கதாயிருந்தது. அவருக்கு 30 வயதாவதற்கு முன்னே தேசிய அரசியல் வாதியாக அவர் திகழ்ந்தார். 31-வது வயதில் வில்சன் நிர்வாகத்தில் கடற்படைக்குத் துணை அமைச்சரானார். அவர் அந்த உத்தியோகத்தில் விரைவாகக் கீர்த்தி பெற்றதினால் நியூயார்க்கிலுள்ள சனநாயகக் கட்சியினர், அந்நாட்டு ஆளுந் தலைவர் பதவிக்கு அபேட்சகராக அவரை நிற்கும்படி வேண்டினர். சண்டைக் காலத்தில் அப்பதவி வேண்டாமென்று மறுத்தார். வில்சன் நிர்வாகமுடிவுக்கு வரவும் சனநாயகக் கட்சியில் உள்ள இளைய அங்கத்தாருள் அவரே சிறந்தவராக மதிக்கப்பட்டமையால் 38 ஆவது வயதில் துணைத் தலைவர் பதவிக்கு அவர் பெயர் கூறப்பட்டது. தியடோர் ரூஸ்வெல்டுக்கு 42 வயதில்தான் அப் பதவிக்குப் பேர் கூறப்பட்டது. அப் பதவித்தேர்தலில் அவர் தோற்றுப்போனது ஒரு முறைதான். அனுபவித்த தோல்வி 24 வருடங்களில் அஃது ஒன்றுதான். தேசியச் சார்பில் அவருடைய இடம் கீழ்ப்பட்டதாயிருந்ததே அதற்குக் காரணம். அமெரிக்கப் பொதுநல வாழ்க்கையில் காரியசித்தி பெற்ற பலரும் 50 வயதுக்குமுன் முயன்றடையாத பதவியை 38 வயதுள்ள ரூஸ்வெல்ட் அரசியற் பேரேணியில் ஏறி அடைந்தார்.

1924-ல்கூடத் தலைமைப் பதவிக்கு அவர் பெயர் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் ஓர் அபாயமான நோய் அவருக்கு ஏற்பட்டது. 1921-ல் இளங் திமிர்வாதங் கண்டு அவர் இடுப்புக்குக் கீழே அசைக்கமுடியாத நிலைமையடைந்தார்.

மூன்றுவருடம் விடாது முயன்றும் உருள்கின்ற நாற்காலியில் இருக்கவும், ஊன்றுகோல்மீது சிறிது தூரம் நடக்கவுமே அவருக்கு இயன்றது. பின்னர் *சார்ச்சியா மாகாணத்தில் நன்கு தெரியப்படாத கோடை நிலைய மொன்றில் வெது வெதுப்பான தண்ணீரில் தேகப்பயிற்சி செய்து கருவிகளின் உதவிகொண்டு நடக்குந் திறமை பெற்றூர். 1928-ல் அவர் நோய் முற்றிலும் குணமாகும்வரை காத்திருக்கமுடியாமல் தலைமைப் பதவிக்கு அபேட்சகராய் நின்ற அவருடைய பழைய நண்பராகிய ஆல்பிரட் ஸ்மித் என்பவரால் அரசியல் துறைக்கு அவர் இழுக்கப்பட்டார். நியூயார்க் தலைவர் பதவிக்கு அவர் பெயர் கூறப்பட்டது. அவர் அரசியல் வாழ்க்கைக்கு முடிவு செய்ததாகக் கருதப்பட்ட நோயை உறுதியாக வென்று மேன்மை அடைந்தது அவருடைய தன்னம்பிக்கையினலேதான். நோயினல் அவருடைய இயற்கையான உற்சாக உணர்ச்சி மாறவில்லை. அவருடைய நோய் திரும்ப வருந் தன்மையுடையதன்று. துன்பம் கொடுப்பதுமன்று. நீந்துதல் முதலிய தேகப் பயிற்சிகளால் அவர் தம்மைத் தகுதியாக வைத்துக்கொள்ளுகிறூர். ஆயுள் உறுதி செய்வதற்குரிய தன்மையில் அவருடைய உடல்நிலை இருந்தது. அவர் அதிகமாக அசையக் கூடாதபடியால் தம் பலத்தை ஒரே இடத்தில் செலுத்தக்கூடியவராய், அவருக்கு எப்போதும் தவருதுள்ள நகை யுணர்ச்சியோடு ஒருநாட் காலை முதல் மறுநாள் விடியற்காலம் வரை இளைப்பில்லாமல் வேலை செய்யக்கூடியவரா யிருந்தார். தலைமைப் பதவிக்குரிய அபரிமிதமான உடலுக்கும் நரம்புக்கும் ஏற்படும் வேலைச் சுமைகளைத் தாங்குவதில் அவர் இணையற்றவர். அவர் பொங்குகின்ற மகிழ்ச்சியுடையவர். சில வேளை சிரித்துக் கொண்டும் சிலவேளை வேடிக்கை பேசிக்கொண்டும், கண்

* Georgia.

டனச் சிரிப்புடனும் இருப்பதைப் பார்த்தால் அவரை அறியாதவர்களுக்கு மனக்குழப்பம் ஏற்படும். அமெரிக்கப் பொதுநல வாழ்க்கையில் இருக்கும் பிற எவரைப் பார்க்கிலும் அவர் அதிகமாகச் சிரிப்பார்; அழகாகக் கதை சொல்லுவார். பிறரைப் பார்த்து அவர்போல் நடந்து காட்டுவதில் கண்டனத்துக்கு வேண்டிய அளவுக்கு அதிகப்படுத்தியும் காட்டுவார். தம்மோடொத்த அரசியலிலும் சமுதாயத்திலுமுள்ள கனவான்களைப்போல நடித்துக் காட்டுவார். நண்பர்களுக்குள் கூர்மையாய் வேடிக்கை பேசுவார். ஆனால் பொதுசனங்களுக்கு நல்ல எண்ணமுடைய நல்லியற்கையாளனாக இருப்பார். கவர்ச்சியே அவருடைய பெரிய அரசியல் சாதனமென்னலாம். ஓர் உற்சாகமான சொல்லும் ஒரு புன்சிரிப்புங்கொண்டு சபையைப் பிணிக்கவும் ஓய்ந்து தளர்ந்த கீழ்வேலைக்காரர்களை உயிர்ப்பிக்கவும் அமைச்சர் குழுவின் பிளவை மாற்றவும் வல்லவர்.

இவருடைய இத்தன்மைகள் சில பேருக்கு அவரைத் தவறாகக் காட்டுவதுண்டு. அவர் தலைவராவதற்கு முன் அவருக்கு ஆழ்ந்த போக்கில்லை என்று சிலர் நினைத்தார்கள். ஒரு சிறந்த அமெரிக்க விரிவுரையாளர், தலைவராகவிருக்க விரும்பும் ஓர் அழகிய கனவான் அவர் என்றும், ஆனால் வேலைக்குரிய சிறந்த தகுதி அவரிடமில்லையென்றுங் கூறினார். தம் பெரிய உடல் நோயை வெல்லுதற்கு அவர் காட்டிய அளக்க முடியாத உறுதியையும் தமது அரசியல் வாழ்க்கையில் காட்டிய துணிவையும் சூழ்ச்சி வளத்தையும் அவ்விரிவுரையாளரும் பிறரும் மறந்தார்கள். எவற்றையும் தெளிவுபடுத்தி எளிதாகச் சொல்லவல்ல அவருடைய திறமை அவருடைய எளிய மனப்பாங்கோடு சேர்ந்திருந்தது. அவர் எளிதாகப் பேசுவதின் வைத்து அவரை இலேசாக எண்ணுவதும் உண்டு.

அரசியல் முறையில் சாதாரண வழக்கம் என்னவென்றால் சுருக்கமான கருத்தை ஆடம்பரமான சொற்களிற் பொதிந்து பேசுதலும் முக்கியமில்லாத செயல்களைப் பெரிதாகப் பாராட்டிப் பேசுதலுமேயாம். ரூஸ்வெல்டின் முறை யாதெனில் மிகவும் கடினமான தீர்வைகளை எளிதாக விளக்குவதும் முக்கியமான செயல்களை முக்கியமில்லாததுபோற் பேசுதலுமேயாம். அநேக அரசியல் வல்லார்கள் தேர்தல் கூட்டத்தில் 'இஃது ஒரு பெரிய முக்கியமான தீர்வை, அறிவாளிகளிற் பலர் பல வருடங்களாக இதற்கு முடிவு சொல்லக் கூடவில்லை. நான் இப்போது அதற்கு முடிவு கண்டிருக்கிறேன்' என்று கூறுவார்கள். ரூஸ்வெல்ட் அதற்கு நேர் மாருக எவ்வாறு கூறுவாரெனில், 'நீங்கள் அதை என்னிடம் கொண்டு வருகிறவரை அதைப்பற்றி உண்மையில் நினைக்கவே இல்லை. அதனை எளிதாக முடித்துக்கொள்ளலாம். அதில் ஒன்றுமே இல்லை' என்பர். உண்மையில் ஒரு வேளை பிறர்க்குக் கடினமாய்த் தோன்றுவது அவருக்கு எளிதாக இருக்கலாம். ஒன்றின் அனுவசியமான பகுதிகளைப் பிரித்தெறிந்து அதன் சாரத்தை உடனே கைப்பற்றி அதனை எளிய முறையிற் பகுத்தறியும் ஆற்றல் அவருக்கு உண்டு.

இவ்வாற்றல் அவருடைய பொதுப் பேச்சுக்களிற் காணப்படும். அவர் பெரிய சொல்லாளருமில்லை. எழுத்தாளருமில்லை. அவர் சில நினைவுகூரத்தக்க பேச்சுக்களும் போதனைகளும் செய்திருக்கிருர். அவை சிறந்த அரசாங்கப் பத்திரங்களுடன் வைத்துப் பாதுகாக்கப்படத் தக்கன. அவைகளைக் கவனமாய்த் தயார் செய்வதும் உண்டு. அவருடைய வழக்கமான பேச்சு முறையும் எழுது முறையும் ஆடம்பரமில்லாத உரையாடல்போல இருக்கும். ஒலி பெருக்குங் கருவி மூலமாகத் தேசத்துக்குப் பேசப்படும் அவருடைய பேச்சுக்கள் கவனமாய்த் தயார் செய்யப்பட்டா

லும் குளிர் காயுமிடத்தில் பேசும் பேச்சுப்போல் அவைகள் அமைந்திருக்கும். கேட்குஞ் சனங்கள் ஓர் உயர்ந்த பேச்சைக் கேட்கின்ற உணர்ச்சியுடையவராகமாட்டார்கள். பக்கத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பேசுவது போலத் தோன்றும். அவர் நல்ல சொல்நடையில் ஒழுங்கான குரலோடு பேசுவார். ஆனால் அவருடைய வார்த்தைகள் ஓரசைச் சொற்களாய் அல்லது ஈரசைச் சொற்களாய் இருக்கும். நாடோடி உலகவழக்கச் சொற்களும் சாதாரண உதாரணங்களும் இடையிடையே வரும். தற்கால அரசாங்கத்தின் கடமையைப்பற்றிப் பெரும் புத்தகத்திலுள்ள உயர்ந்த கருத்துக்களின் தொகுதியை, ஒருவன் தன் அயலாருக்குச் செய்ய வேண்டிய பொறுப்பான கடமைகளைப்பற்றிப் பேசுவதுபோல, ஒரு பாராவில் அவர் சொல்வார். அந்தக் கலையில் தேர்ச்சியுற்றவன் ஒருவன் அவர் மிகச் சுருக்கமாகப் பேசுவதாகக் குறைகூறலாம். தேர்ச்சியுற்றவர்களுக்கும் சட்ட மன்றத்தாருக்கும் அவர் தம்முடைய பொதுப் பிரசங்கங்களைச் செய்யவில்லை. தாம் சொல்வது வயலில் உழுகிறவர்களுக்கும் வண்டி ஓட்டுகிறவர்களுக்கும் விளங்கவேண்டுமென்பது அவருடைய நோக்கம். அவர்கள் கேட்டு ஒரு பகுதியாவது விளங்கிக்கொள்வார்கள். அக்காரணத்தினால் ஐக்கிய மாகாணத்தில் லிங்கன் காலத்துக்குப்பின் அவர் மிக வெற்றியுள்ள அரசியற் போதகாசிரியராய்க் குடியரசுச் சரித்திரத்தில் விளங்குகின்றார். அவர் காலத்துக்கு முன் இருந்தவர்களுக்கு ஒலி பெருக்குங் கருவி கிடையாது. அவர் காலத்தில் அவரைப் போல் அதனைப் பயன்படுத்தத் தெரிந்தவர்களில்லை. பெருந்திரளான மக்கள் அதன் மூலமாய் அவரோடு நேர் தொடர்பு இருப்பது கருதி அவருக்கு அளவிறந்த கடிதங்கள் எழுதுகிறார்கள். வருத்தங்கள் தெரிவிப்பவர்களிட

மிருந்து சராசரி ஒரு நாளில் 3000 கடிதங்கள் அவருக்கு வருகின்றன.

இவ்வகையான தொடர்பு அவருக்கும் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. ஒரு வாரத்துக்கு இருமுறை அவர்களைப் பார்ப்பார். ஒரே நேரத்தில் 90 அல்லது 100 பேரைப் பார்ப்பார். கேள்விகளுக்கு உடனே பதில் விடுப்பார். விடை தெரியாவிட்டால் தெரியாதென்று சொல்லுவார். வெவ்வேறு பகுதிக்குரிய சிறப்புக் கேள்வியாயிருந்தால் தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நன்ருகத் தெரியுமென்று சொல்லி, அவர்களிடம் அதைக் கேட்கச் சொல்லுவார். அரசாங்கத்தின் ஒவ்வொரு முக்கிய உறுப்பினருடனும் இத்தகைய உரையாடலை அவர் வைத்துக்கொண்டிருக்கிருர். ரூஸ்வெல்டுக்குமுன் இரண்டு மூன்று தலைவர்கள் இவ்விதமான உரையாடல் வைக்கமுயன்று அது தொந்தரவாயிருப்பது கண்டு ஓர் அளவுபட்ட தொடர்பே வைத்துக் கொண்டார்கள். வாஷிங்டன் நகரத்தில் ரூஸ்வெல்ட் பேச்சுக்களைக் கேட்பதற்கு உள்நாட்டுப் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுப்பதுபோலவே அயல்நாட்டுப்பத்திரிகைக்காரர்களுக்கும் சமமாகவே இடம்கொடுக்கப்படுகிறது. இது பிற அரசாங்கங்களில் நிகழ்வதில்லை.

ரூஸ்வெல்ட் பல பத்திரிகையாளரை அவர்கள் முதற்பெயரால் அழைப்பர். தாமறிந்த பலரையும் அவ்வாறே அழைப்பர். நிலைவரமான உத்தியோகத்தரையும் அவ்வாறு அழைப்பர். அங்ஙனமழைத்தல் அவரோடு அந்நியோன்னியமாய்ப் பழகுவதற்கும் அவரை எல்லோரும் விரும்பி நேசித்தற்கும் இடந்தருகிறது. மற்றத் தலைவர்கள் அது தங்கள் தகுதிக்குப் பொருத்தமில்லையென்று எண்ணுவதுண்டு. ஜெபர்சன், சாக்சன் முதலியவர்களுக்கு இத்தன்மையான குணங்கள் இருந்தன.

இக் குண நலத்தோடு ரூஸ்வெல்ட் மிகுந்த அரசியற் சாமர்த்தியம் உடையவர். தலைவராய்த் தற்காலத்தில் வந்தவர்களுள் அவர் மிகுந்த அரசியல் திறமையாளர் என்று அவருடைய கடுமையான கண்டனக்காரர்களும் பேசியிருக்கின்றார்கள். உயர்ந்த நிலையில் லாயிட் சார்ஜினிடமிருந்த சில குணங்கள் ரூஸ்வெல்டினிடம் உண்டு. ரூஸ்வெல்ட் உறுதியான பொது அறிவு உடையவர். மிகவும் கூர்மையான கவனமும், சுறுசுறுப்பான உள்ளமும், ஐக்கியமாகாணத்தில் உள்ள வெவ்வேறு வகை மக்கள் தன்மையைப்பற்றி நேரே அறிந்த அபரிமிதமான அறிவும், பொது வாழ்க்கையில் நீண்ட அனுபவமும் சேர்ந்து அவருடைய அரசியல் திறமைக்குக் காரணமாயின. ஆனால் அவர் பிழையற்றவர் என்று சொல்ல முடியாது. ஆத்திரத்தினாலும் நல்லெண்ணத்தினாலும் அரசியலில் அவர் தவறான தீர்மானங்கள் செய்ததுண்டு. உண்மையாயும் விசுவாசமாயும் உள்ள வேலைக்காரர்களை அவர்கள் தகுதியின்மை பற்றி விலங்காகக் கூறுவார். சமயக் குறிக்கோளென்னும் பொதுவான மேலுணர்ச்சியே அவருக்கு உண்டு. அதனால் அவர் உட்ரோ வில்சனைப்போலவும் ராம்சே மாக்டனால்டைப்போலவும் உண்மையார்வம் உடையவராய் இருத்தல் உண்டு. ஆனால் அடிப்படையில் அவர்கள் இருவரைப் பார்க்கிலும் உலகப் போக்கில் சிறந்த அறிவுடையவர். வெர்சைல்ஸில் இருந்த கிளமென்சாவோடு போட்டிபோடக்கூடிய அறிவு நுட்பமுடையவர்.

ஐக்கிய மாகாணத்தின் பெரிய தலைவர்களுள் ஒருவராகப் பிராங்கிளின் ரூஸ்வெல்ட், சரித்திரத்தில் பேசப்படுபவர். தம்முடைய நாட்டை மிகத் தாழ்ந்த பொருளாதார நிலையிலிருந்து காப்பாற்றியதோடு தொழில் வளர்ச்சிக் காலத்தில் அதன் செல்வ வாழ்க்கையைச் சமுதாய நீதிக்

கொள்கைக்கு ஒத்த முறையில் நிலையான உருவு கொடுத்து அமைத்த பெரியாராக அவர் அறியப்படுபவர். இன்னும் உறுதியாகச் சொல்லக்கூடியது யாதெனில், ஐக்கிய மாகாணத்தில் உள்ள ஜனநாயக நிலையங்களுக்குப் புத்துயிர் கொடுத்து அவைகளில் நம்பிக்கை ஒழியக்கூடிய சமயத்தில் அவற்றில் பொது நம்பிக்கையை மீளவும் நிலைநாட்டினரென்பதே.

## ௯. முஸ்தாபா கேமால்

உலகப் போருக்குப் பிந்திய காலத்தில் மனித சமூகத்தின் விருப்பங்களை விளக்கி நிறைவேற்ற அரசியல் தலைவர்களுக்கு இயலாதிருந்த காலத்தில், அற்புதங்கள் செய்யும் இரகசியத்தைக் கண்டு பயன்படுத்திய அரசியல் வழிகாட்டியின் சிறு கூட்டத்துக்குச் சிறந்த பிரதிநிதியானவர்களுள் ஒருவர் முஸ்தாபா கேமால் என்று அவர் சரித்திரத்தில் அவர் நினைவு கூரப்படுகின்றார். இத் துருக்கித் தலைவரது பெயர் அவர்காலத்தில் வாழ்ந்த பெருந்தலைவர்களோடுசேர்த்து எண்ணப்படும். ருசியாவில் லெனினும், இத்தாலியில் முசோலினியும் ஜெர்மனியில் ஹிட்லரும் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் ரூஸ்வேல்டும் பாரசீக தேசத்தில் ரீசாஷா பேலவியும் இந்தியாவில் காந்தியும் சீனதேசத்தில் சன்யாட்சேன் என்பவரும் ஒரே காலத்தில் வாழும் பெரியார்கள். இந்த எண்மருடைய ஆள்திறனையும் செயற்றிறனையும் ஒப்பிட்டு உலக முழுவதிலும் இக்காலத்தில் உள்ள அரசியல் திமிர்வாதம் என்னும் தகட்டுக்குமேல் வைத்துப் பார்க்குங்கால், அவர்களுக்கெல்லாம் பொதுவாகிய சிறந்த முதன்மையான தன்மை என்னவென்று நாம் உடனே எடுத்துக் கூறலாம். அவர்கள் எல்லாரும் சாதாரண மக்களின் மனச்சாட்சிகளையும் உணர்ச்சிகளையும் எழுப்பி, அதனால்அவர்கள் எண்ணங்களில் அழுத்தமாகப் பதிந்து எழும்பிய ஆன்மசத்திகளை ஒன்றுசேர்த்துக், குறிப்பிட்ட சமுதாய நோக்கத்தை நிறைவேற்ற அவற்றை நடத்தினமையேயாகும். அவர்கள் செய்திருப்பது எதுபோல இருக்கிறதென்றால், ருட்யார்டு கிப்ளிங்ஸ் என்பவர் எழுதிய 'காட்டுப் புத்தகம்' என்னும் நூல்களிலுள்ள கதைகளிலொன்றில், மௌக்ளி யென்பவன் கீபர்

கான் என்னும் புலியை மிதித்து உயிர் போக்குவதற்காக உயிரோடு இருக்கிற பனிப்பாறை விழுந்தாற்போல எருமைக் கூட்டத்தை அதன்மேல் விழும்படி செய்ததை யொக்கும். அவனுடைய தூண்டுதல் இல்லாமற்போனல் எருமைகள் புலியின் வீரத்திற்கு அடங்கிக் கிடக்கும். புலி எருமைகளை அடித்துவிடும். ஒரு தலைவன் இருந்தமையால் அவைகள் தங்களுக்குள் அடங்கிக்கிடந்த பலத்தையெல்லாம் ஒன்று சேர்த்துச் செயலுக்குக் கொண்டுவந்து தங்கள் முன்னுள்ள எதையும் அடித்துக்கொண்டு போயின. ஒரு தலைவருக்கும் பெருந்திரளான மக்களுக்கும் உள்ள ஒற்றுமையால் அடங்கிக் கிடந்த ஆற்றல்கள் வெளிப்பட்டு அற்புதங்கள் செய்கின்றன. இருவகையாருஞ் சேராமல் அவைகளைச் செய்தல் இயலாது. இதுவே முன்கூறிய எட்டுத் தலைவர்களின் பொது இயல்பாகும். மற்றப்படி அவர்கள் இனத்தாலும் மதத்தாலும் இடத்தாலும் வேறுபட்டவர்கள். அவர்களுள் ரூஸ்வெல்டும் காந்தியும் சன்யாட்சென்னும் சமாதான முறையிற் செல்பவர்கள். மற்றவர்கள் பலாத்கார வாதிகள். லெனின் மக்கள் சமூகம் முழுவதற்கும் ஒரே நோக்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற கருத்தைத் தம்மைச் சேர்ந்தவர்களுக்குக் கூறியவர். காந்தி உட்பட மற்றவர்களெல்லாரும் சுயநாட்டுப்பற்றினர். லெனினும் காந்தியும் சன்யாட்சென்னும் தங்களுக்குச் சமமானவர்களோடு ஒத்துழைக்கும் பெருந்தகைமை யுடையவர்கள். மற்றவர்களில் மிகுதிப்பேர் தங்களைச் சேர்ந்தவர்களின் நன்மையையும் திறமையையுங் கண்டு பொறாமைப்பட்டுத் தமக்கு ஈடானவர்களைக் கழித்து நடுத்தரமாயிருப்பவர்களைத் தங்களைச் சுற்றி வைத்துக்கொண்டவர்கள். தங்கள் வாழ்க்கை வேலைகளுக்கே அது நன்மையானதன்று. ஏதேச்சாதிகாரிகளின் இக்குறை முஸ்தாபா கெமாலின் வாழ்க்கையிலும் மிகத் தெளிவாகக்

காணப்படும். ஆனால் பொதுமக்களுக்கு ஆர்வம் கொடுத்து அவர்களை எழுப்புவதில் அவரும் அற்புதச் செயலாளர்களுள் ஒருவரே. அவருடைய அற்புதம் யாதெனில் துருக்கி யென்னும் ஐரோப்பிய நோயாளியை அவனது மரணப் படுக்கையிலிருந்து எழுப்பி இளமைக்கும் சுகத்துக்கும் உரிய கிளர்ச்சியோடு குதிக்கவும் ஓடவும் ஆடவும் பாடவும் மகிழ்ச்சியோடு கூவவுஞ் செய்தமையே யாகும். முஸ்தாபா கெமால் இன்னொரு வரிசைப் பெரியாரிலும் வைத்து எண்ணப்படுதற்குரியர். அவர் மேலை நாட்டினரல்லாத அரசியற் பெரியாருள் மேலை நாட்டு முறையைக் கைப்பற்றிய அறிஞர்களுள் ஒருவர். ருசியாவில் இருந்த பெரிய பீற்றர் 1860-வது ஆண்டுக்குப்பின் ஜப்பானை மேலைநாட்டு மயமாக்கிய அந் நாட்டு மூத்த அரசியல் தலைவர். முஸ்தாபா கெமால், தமக்கு முற்பட்டுத் துருக்கியில் இருந்த சுல்தான் மூன்றாவது செலீம், சுல்தான் இரண்டாவது மாமூத், மாமூத் காலத்தி லிருந்த எகிப்து அரசியல் பிரதிநிதியாகிய மெமத்ஆலி என்னும் இவர்கள் கூட்டத்திற் சேர்ந்தவர்.

சென்ற நான்கு நூற்றாண்டுகளாக மக்கள் காரியங்களில் நிகழும் பெரியதோர் இயக்கமென்னவென்றால், மேலைநாட்டு நாகரிகம் உலகத்தில் மக்கள் வாழும் இடங்களெங்கும் கப்பல் செல்லும் கடல்களெங்கும் பரவி முதலிற் பொருளாதார வகையிலும் அடுத்தபடி அரசியற் றுறையிலும் முடிவாகக் கல்விப் பயிற்சித் துறையிலும் இப்போதிருக்கும் மற்ற எல்லா நாகரிகங்களையும் பண்டைச் சமுதாயங்களையும் தாக்கி அழுத்துவதேயாகும். மேலை நாகரிக அழுத்தம் பிறைபோல் வளர்வதால் அதன் தாக்கால் அச்சுறுத்தப்பட்ட மேல்நாட்டுக்குப் புறம்பாகிய சமுதாயங்களுக்குக் கீழ்வரும் மூன்றில் ஒன்றுசெய்வது கட்டாயமாயிற்று. (1) ஒன்றும் செய்யாமற் கீழேபோதல். அது யாதொரு நன்மையையும எதிர்பாரா

திருப்பதற்கு வழியாகும். (2) புதிதாய் வந்ததை உதைத் துத்தள்ளுதல். அது செயன் முறையில் நடவாததாகும். (3) மேலைநாட்டுச் சமுதாயங்கட்குப் பலந் தந்த முறைகளையும் நிலையங்களையும் கருத்துக்களையுந் தழுவித் தங்களுக்கு ஏற்ற படி பயன்படுத்திக்கொண்டு மேலை நாகரிகத்தை எதிர்த்துத் தங்கள் காரியங்களைப் போற்றிக்கொள்ளுதல். இதுதான் ஜப்பானியர்கள் கைக்கொண்ட எதிர்ப்பு வகை. இதுதான் வெற்றிபெறுதற்கு இடந்தருவது. துருக்கி அரசியல் வல்லா ராகிய முஸ்தாபா கெமால் இம்முறையைத் தழுவித் தம் முடைய உயிராற்றல் முழுவதையும் இதிலேயே செலுத்திச் சனங்களை நடத்துந் தகுதியினால் அவர்களை இந்தக் கடின மான முன் பழகாத பெரிய வழியில் திருப்பிவிட்டார். மேலைநாட்டு மயமாக்குதல் நீக்க முடியாத அவசியத் தீமை யென்று மாத்திரம் விசனத்தோடு கருதாது, அது விரும்பத் தக்க நன்மையே என்று கருதிய முதல் துருக்கியர் முஸ்தாபா கெமாலே. இந்த உணர்ச்சியின் பலத்தால் அரைகுறைத் திட்டம் வகுக்காமல் முழுத்திட்டம் வகுத்துக்கொண்டார். அவருக்கு முன் சென்றவர்கள் அரைகுறைத் திட்டத்தைப் பாதி மனத்தொடு வற்புறுத்தினதைப்பார்க்கிலும், அவர் எளி தாக எதிர்ப்பை வென்று தம் திட்டத்தை முற்றிலும் நிலை நிறுத்தினர்.

மேலைநாட்டு நாகரிகம் துருக்கியில் கெமால் பிறப்பதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னேயே தொடங்கிவிட்டது. 1768-74-வது வருடங்களில் ருசியாவுக்கும் துருக்கிக்கும் நடந்த சண்டையில் ருசியா தோற்றுப்போன கால முதல் தற்பாது காப்பின் அவசியத்திற்காகத் துருக்கிச் சேனையை மேலை நாட்டு முறையில் ஒழுங்குபடுத்த முயற்சி நடந்தது. சீர் திருத்தம் இராணுவத்தில் முதலில் தொடங்கியது. துருக்கி யின் பின் வரலாற்றுக்கு அது காரணமாயிற்று. முஸ்தாபா

உட்படச் சேனை உத்தியோகத்தர்களின் இளைஞர் கூட்டமென்று ஒற்றுமை அபிவிருத்திக் கழகம் ஸ்தாபித்து 1908-ல் சுல்தான் அப்துல்காமித் என்பவரின் தனியாட்சியை ஒழித்தது, துருக்கி இளைஞர் புரட்சிக்குக் காரணமாயிற்று. மேலை நாடுகளில் உத்தியோக வகுப்பினர், புரட்சிக்குச் செல்வதில்லை. அவர்கள் பழைய முறையில் இருப்பார்கள். 18-வது நூற்றூண்டிலும் 19-வது நூற்றூண்டிலும் துருக்கி இராணுவச் சீர்திருத்தக்காரர்கள் துருக்கிப் படையில் தொடங்கிய மேல்நாட்டு முறை, அவர்கள் எதிர்பார்த்து விரும்பியதைப் பார்க்கிலும் அதிகமாகக் காரியங்களைப் பாதிக்கலாயிற்று. தற்கால மேலைநாட்டுப் படை, காலத்துக்குப் பொருத்தமில்லாத அநாகரிகத்தின் எச்சமாகும். ஒருவகையாகப் பார்க்கும்போது தற்கால மேலை நாகரிகத்தின் பயனாக அஃது ஏற்பட்டிருக்கிறது. அது நாகரிகத்தின் தனி நன்மைகளுஞ் செயல்களுங் கலந்து ஏற்பட்டதானாலும், மனிதனது குண இயற்கையில் தள்ளத்தக்க பகுதியின் வடிவாகவே அஃது அமைந்துள்ளது. தற்காலப் படையை நன்ருக வைத்துக்கொள்ளவேண்டுமானால் மேலைநாட்டு உயர் முறையில் நிர்வாகமும், பொருளாதாரமும், சுகாதாரமும், கல்வியும் வேண்டப்படும். இந்த விரிந்த சமுதாய அடிப்படை இல்லாமல் அஃது இப்போது இருக்கும் நாடுகளில் நிலைபெறவும் முடியாது. இதற்குமுன் இல்லாத இடத்தில் ஏற்படுத்தவும் முடியாது. படைச் சீர்திருத்தத்தை மாத்திரங் கருதிப் பழைய துருக்கிச் சமுதாய உடம்பினுள் ஒன்றரை நூற்றூண்டுக்குமுன் புகுத்தப்பட்ட மேலைநாட்டுப் புளிப்பு, இராணுவப் பகுதியில் மாத்திரம் நிலைத்திராமல் சமுதாய உடம்பெங்கும் பரவுதலாயிற்று.

எகிப்தில் மெமத்தாலி அதிகாரத்தைக் கைப்பற்றி முப்பதாண்டு கழிவதற்குள், அலக்சாண்டிரியாவில் அவர் ஏற்

படுத்திய கடற்படை ஆயுதச்சாலையின் சுற்றுப்புறத்தில், நாட்டு எகிப்திய முஸ்லீம் பெண்களுக்காகப் பிரசவ மருத்துச்சாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குக் காரணம் மேலைநாட்டு வைத்தியர்களின் புது ஊக்கமும் தூண்டுதலுமாகும். மேலைநாட்டு வைத்தியர்கள் அங்கே எப்படி வந்தார்களெனில், சரியான மேலைநாட்டு முறையிற் கப்பற்படை தயாரிப்பதற்கு அத்தொழிலில் தேர்ச்சிபெற்ற வர்கள் அங்கே வரவழைக்கப்பட்டார்கள். அவர்களோடு வைத்தியர்களும் வந்தார்கள். பிற்காலத்தில் சுல்தான் அப்துல்காமித் என்பவர் மேலைநாட்டு நாகரிக வெள்ளம் துருக்கியினுட் பாயாது தடுப்பதற்காக மேல்நாட்டுப் படிப்பைக் குறைவுபடுத்தி அதற்கு இடங்கொடாதபடி, மேல்நாட்டுப் புத்தகங்களை இறக்குமதி செய்யக்கூடாது என்று விதித்த போது, இராணுவ உத்தியோகத்தவர்பொருட்டு அவ் விதியினை நெகிழ்த்தவேண்டியதாயிற்று. அவர்கள் மேலைநாட்டு யுத்த முறைகளைப் பயிலுவதற்குப் பிரஞ்சு ஜெர்மன் ஆங்கில நூல்களை வாசிக்கவேண்டி யிருந்தது. இல்லாமற்போனால் அபாயகரமான காலங்களில் துருக்கி தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. இராணுவக் கல்வியிலும் இளைஞர்கள் தாங்கள் அறிந்த மேலைநாட்டு மொழிகளிற் கற்ற இராணுவக் கல்வியோடு, ஜப்பானியர்கள் கூறுகிறபடி அபாயக் கருத்துக் களையுந் தெரிந்துகொண்டார்கள். பிரஞ்சு புரட்சிக் கருத்துக்களும் இளைஞர் மனத்திற் புகுந்தன. அத்தகைய கருத்துக்களை மனத்தில் நன்கு பதியவைத்துக்கொண்ட இளைஞருள் ஒருவர் முஸ்தாபா கெமால். அப்துல்காமித் பட்டத்துக்கு வந்த நான்கு வருடத்துக்குள் அவர் பிறந்தார்.

ஹிட்லருடைய தகப்பனரைப்போல முஸ்தாபா கெமாலின் தகப்பனர் ஓர் அற்ப சுங்க உத்தியோகத்தர். பிற்காலத்தில் அவர் உத்தியோகத்தை விடுத்து உத்திர வியா

பாரம் நடத்தித் தம்முடைய குமாரன் சிறுவயதாய் இருக்கும் போதே இறந்துபோனார். தகப்பனாருடைய சார்பைப் பார்க்கிலும் தாயாருடைய சார்பு கெமாலுக்கு அதிகம். பெற்றோரின் சார்பைப் பார்க்கிலும் அவர் பிறந்து வளர்ந்த இடத்திலுள்ள நிலைமைகள் அவரைப் பாதித்தன. அவர் சலோனிக்கா என்னும் நகரத்திற் பிறந்து வளர்ந்தார். அப்துல் காமித் காலத்தில் அந் நகரமானது சுல்தானது பிற்போக்கான கொடுங்கோன்மைக்கு அறிவுத் துறையிலும் அரசியல் துறையிலும் ஏற்பட்ட எதிர்ப்புக்கு ஊக்கமான நிலையமாய் இருந்தது. அவ்வூரில் பலவகைப்பட்ட மக்கள் இனத்தில் தனிப்பட்ட பெரிய குழுவாக 80 ஆயிரம் யூதர்கள் ஸ்பானியர் மொழியில் ஒருவகையினைப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஸ்பெயினிலிருந்து பதினைந்தாவது நூற்றாண்டில் மதக்கொடுமைக்குப் பயந்தோடி வந்தவர்கள். அவர்களில் ஒரு பகுதியார், இஸ்லாம் மதத்தில் சேர்ந்திருந்தார்கள். இஸ்லாம் யூதர்கள் பிற யூதர்களையும் துருக்கி நகரவாசிகளையுந் தொடர்புபடுத்தினார்கள். முஸ்தாபா கெமாலின் இரத்தத்தில் யூதக்கலப்பிருந்த துண்டென்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் வெளித் தோற்றத்தில் அவருடைய அழகிய தலைமயிரும் நீலக்கண்களும் வட ஐரோப்பிய இனத்தவராக அவரைக் காட்டும். ஹிட்லரையும் கெமாலையும் முன்னறியாதவர்கள் பார்த்தால் ஹிட்லரைத் துருக்கர் என்றும் கெமாலை ஆஸ்திரியர் என்றுங் கூறுதல்கூடும்.

இனக்கருத்துக்கள் ஒருபுறமிருப்ப, சலோனிக்கா நகரமானது துருக்க ஆட்சியிலிருந்து கிரேக்க ஆட்சிக்குப் போவதற்குமுன் அங்கே யூதர்கள் மிகுதியாயிருந்தமையால் உலகத்தில் அது பல இடங்களிலும் சம்பந்தமுடைய பல இனத்தவர் நிலையமாக விளங்கிற்று. மேலை ஐரோப்பாவோடு இருப்புப்பாதை வழியாய் அது தொடர்புற்றிருந்தது.

சலோனிக்காவில் இருந்து பெல்கிரேட் வழியாக இருப்புப் பாதை புத்தாபெஸ்டுக்கும் வியன்னுவுக்குஞ் சென்றது. அங்கிருந்து அது பாரிசுக்கும் பெர்லினுக்கும் போயிற்று. ஐரோப்பிய ரயில்வே முடிந்த சலோனிக்கா பகுதியில் துருக்கர் கூட்டம் குறைவாக இருந்தது. அங்கே தற்கால மேலை ஐரோப்பியக் கருத்துக்களும் நிலையங்களும் பலப் பட்டிருந்தன. தேசியம், குடியரசு, சட்ட மன்றத்தோடு கூடிய அரசாங்கம் என்பவற்றில் தேசியமே முதன்மையா யிருந்தது.

முஸ்தாபா கெமால் சலோனிக்காவிற் பிறந்த காலத்தில் பால்கன் தீபகற்பம் முழுவதும் பரவி அதற்கப்பால் மத்திய ஐரோப்பாவில் வியன்னு வரைக்கும் அகன்றிருந்த துருக்கிய ராஜ்யம், ஐரோப்பாவில் இரண்டு துண்டு நிலத்துக்குக் குறைந்துவிட்டது. கான்ஸ்டாண்டிநோபிலுக்குப் பின் இடத்திலுள்ள திரேசும் சலோனிக்காவின் பின்பாகத்தி லுள்ள மாசிடோனியாவுமே ஐரோப்பாவில் துருக்கியைச் சார்ந்திருந்தன. அவற்றைச் சுற்றியுள்ள அரசுகள், துருக்கி நிலத்திலிருந்து செதுக்கிச் சொந்தப்படுத்திய இடங்களே. பகையரசர் நாடுகள் தங்கள் எல்லைகளை இன்னும் அதிகப் படுத்தித் துருக்கியுள் மேலும் மேலும் பங்கெடுக்க விரும்பி னர். சலோனிக்காவுக்குத் தெற்கே கிரேக்க எல்லையும் வடக்கே செர்விய எல்லையும் கிழக்கே பல்கேரிய எல்லையும் இருந்தன.

துருக்கி இளைஞர் இயக்கத்துக்கு, உயிரான வீடாக இருந்தது சலோனிக்கா. அதே காலத்தில் சுற்றியிருக்கும் பால்கன் அரசுகளுக்குக் கண்ணைக் கவரும் பரிசாகவும் அஃது இருந்தது. அவை அதைப் பிடிக்கவேண்டுமேயென்று சண்டை யிடக்கூடியனவாயும் இருந்தது. இந்தப் புதிய அரசுகள் மேலைநாட்டு நிலையங்களையும் கருத்துக்களையும்

முற்றிலும் தழுவித் துருக்கியின் செலவில் தங்களுக்கு இடம் சம்பாதித்துக்கொண்டிருந்தன. கெமால் பிறப்பதற்கு நூறு ஆண்டுகளுக்குமுன் ஐரோப்பியப் படத்தில் இந்த அரசுகள் ஒன்றுங் கிடையா. அவைகளெல்லாம் துருக்கிப் பேரரசின் பகுதிகளாயிருந்தன. துருக்கரல்லாத பால்கன் மக்கள் மேலைநாட்டு நாகரிக வலிமையால் துருக்கி ஆதிக்கத்தை ஒழித்துத் தங்கள் சொந்த அரசுகள் அமைத்துக்கொண்டனர். கண் திறந்து பார்ப்பவர்களுக்குத், துருக்கியானது மேலைநாட்டு நாகரிகத்தை அருவருக்கும் மருந்துபோல் சிறிது சிறிதாக அருந்தாமல் உயிரைக் காக்கும் அமுதம் போல முற்றிலும் குடித்துக் கிரேக்கரையும் செர்வியரையும் பல்கரையும்போல மேலான நிலைக்கு வராவிட்டால், பால்கன் அரசுகள் துருக்கியின் செலவில் விரிவு பெற்றுத் துருக்கி குறைந் தொழியுமென்பது தெளிவாயிற்று. முஸ்தாபா கெமால் காலத்திருந்த மாசிடோனியத் துருக்கர்கள் இதனை நன்குணர்ந்தார்கள். அனட்டோலியாவில் இருந்தவர்களில் மிகுதிப்பேர் இதனை அசட்டை செய்தார்கள். அவர்களுக்குப் பால்கன் அரசுகளின் கெடுதி நன்கு விளங்கவில்லை. மாசிடோனியத் துருக்கர்கள் விரைவில் துருக்கி சீர்திருந்தாவிட்டால் சலோனிக்காவும்போய்த் துருக்கிக்குரிய ஆசிய நிலங்களும் தொலைந்துபோமென்று தெரிந்தனர். மாசிடோனியாவில் உள்நாட்டில் துருக்கிய இளைஞர் புரட்சி 1908-ல் பிரசாரம் செய்யப்பட்டது. அது தற்செயலாய் நடந்ததன்று. இளைஞர் அபிவிருத்தி சங்கம் இயற்ற முடியாததை வெற்றியாய் நடத்தி முடித்தது துருக்கத் தீர்க்கதரிசியாகிய முஸ்தாபா கெமால் சலோனிக்காவிற் பிறந்ததும் தற்செயலன்று.

முஸ்தாபா கெமாலின் இளமை வாழ்க்கை அவருடைய வயது, பிறந்த இடம், பள்ளிப் பயிற்சி என்பனவற்றின்

பயனுகவே அமைந்தது. அவர் இராணுவ இளைஞர் பள்ளிக்கூடத்திற் கற்றுப் புரட்சி அரசியற் கருத்துக்களைத் தழுவினுர். அவர் சிறந்த திறமையுடையவராய் இருந்ததால் அவருடைய புரட்சிக் கருத்துக்காக அவர் விலக்கப்படவில்லை. ஏனெனில் தக்க உத்தியோகத்தர் கிடைப்பது அரிதாக இருந்தது. அப்துல் காமித் தம் பொருட்டுத் துருக்கியைத் தியாகம் செய்யக் கருதியவராஞலும் அரசாங்க சம்பந்தமாகத் தக்கவர்களின் உழைப்பை இழக்கப் பிரியப்படவில்லை. ஆதலால் கெமால் 1904-ல் ஒழுங்காக நியமிக்கப்பட்டுத் தூரத்தில் உள்ள டமஸ்கஸ் என்னுமிடத்திலுள்ள படைக்குத் தலைமையாய் அனுப்பப்பட்டார். 1908-ல் நடந்த இளைஞர் புரட்சியில் அவர் மீட்டுந் தலைகாட்டினுலும் அவர் முன்னணியில் நிற்கவில்லை. அது, அவருடைய எதிர் கால வாழ்க்கைக்கு நன்மையாக இருந்தது. முன்னணியில் நின்ருல் கெடுதி ஏற்பட்டிருக்கும். முன்னணியில் நின்ற உத்தியோக இளைஞர்கள் 10 வருடத்துக்குப்பின் திடீரென்று நிகழ்ந்த அபாயத்தில் கெடுதியடைந்தார்கள். 'என்வர்' என்பவர் கெமாலை முன்னுக்கு வராமல் தடுத்துக்கொண்டிருந்தார். அவர் 1918-ல் துன்பமடைந்தார். 1908-ல்புரட்சியில் கெமால் சுறுசுறுப்பாகவே இருந்தார். 1911-12 சண்டையில் திரிப்போலியில் இருந்த இத்தாலியர்களுக்கு விரோதமாகப் போர் புரிந்தனர். 1913-ல் துருக்கிப்படை இரண்டாவது பால்கன் போர் முடிவில் அத்திரியா னோபிளில் தங்கியிருந்தபோது பல்கேரியர்களுக்கு விரோதமாக அவர் உழைத்தார். பிற்பாடு சோபியா என்னுமிடத்தில் துருக்கி ராணுவத் தூதர் துணைவராக அவர் நியமிக்கப்பட்டார். உலகப் பெரும் போரில் துருக்கி கலந்தபோது, அவர் டார்டா னெலிஸ் சண்டையில் எல்லா உத்தியோகத்தினரினும் அதிகமாகத் திறமை காட்டிக் கூட்டுக் கட்சிக்காரர்கள் முயற்சிகளுக்குத் தோல்வி

புண்டாக்கினர். காலிப்பொலி தீப கல்பத்திலும் அவர் திறமையோடு விளங்கினர். சண்டை முடிவில் புரட்சி ஒற்றுமை அபிவிருத்தித் தலைவராய் இருந்த என்வர், தலாத், ஜெமால் என்பவர்கள் அதிகாரமிழந்து ஓடினர். முஸ்தாபா கெமால் தப்பிக்கொண்டார். சூழ்ச்சிக்காரரோடு சேராமல் தெளிவாக நிலைத்த திறமையுடைய உத்தியோகத்தராக அவர் கருதப்பட்டமையால் எதிர்காலத்தில் முக்கியமான உத்தியோகம் அவருக்குக் கொடுக்கவேண்டுமென்று பலர் கருதினார்கள்.

1919-ல் துருக்கி மிகவும் சங்கடமான நிலையில் இருந்தது. அதற்குச் சொந்தமான ஆசிய நிலத்தில் அரேபியாவில் இருந்த பாதிப் பங்கு போய்விட்டது. வெற்றிபெற்ற கூட்டுக் கட்சியினர் டார்டா நெலிஸிலும் பாஸ்ப்போரஸ் கடலிலும் தங்கள் கப்பலை நிறுத்த உரிமை பெற்றனர். சிறிய ஆசியாவில் ஆட்டோமாத் துருக்கி மக்களுக்குச் சொந்தமாய் இருந்த அனட்டோலியா கோட்டை அபாய நிலையில் இருந்தது. ஏனெனில் சமாதானமாக நாட்டிலிருந்து விலகிய இத்தாலியைக் குறிப்பாய்த் தாக்கக் கருதிய கூட்டுக் கட்சியினரின் அனுமதிமேல் கிரேக்கத் துருப்புகள் 1914 மே 15ஆம் நாள் ஸ்மிர்ணவில் இறங்கின.

1918 அக்டோபர் 30-ல் சமாதான உடன்படிக்கை கையெழுத்தான நாள் முதற்கொண்டு ஸ்மிர்ணவில் கிரேக் கப்படை இறங்கியதுவரையில் துருக்கி ஜனங்கள் படுத்த நிலையில் இருந்தார்கள். வெற்றிபெற்றவர்களில் யாராவது ஓர் அரசு துருக்கியை விழுங்கிவிடும் என்று எண்ணப்பட்டது. பிரிட்டிஷ் அல்லது பிரஞ்சுப் பாதுகாப்பில் இருப்பது ஒரு வகை; கிரேக்கரால் வெல்லப்படுவது மற்றொரு வகை. கிரேக்கர் இறங்கிய செய்தி கேட்டதும் அனட்டோலியாவின் உள் நாட்டிலுள்ள துருக்கிச் சிப்பாய்களும்

குடியானவர்களும் உயிர்போனாலும் எதிர்க்கிற உணர்ச்சி யோடு கிளம்பினர். சமாதான உடன்படிக்கைப்படி ஆயுதங் களை அவர்கள் ஒப்புக்கொடுக்க மறுத்தார்கள். இது கூட் டுறவுக் கட்சியினருக்கும் சுல்தானுக்கும் இடைஞ்சலாகவே தோன்றியது. கூட்டுக் கட்சியாரின் உதவிகொண்டு சுல் தான் தம் தனியாட்சியைத் திரும்பப் பெறக் கருதினர். சுல்தான், முஸ்தாபா கெமாலை கான்ஸ்டான்டிநோபிளில் இருந்து கிழக்கு அனட்டோலியாவுக்கு ஒன்பதாவது படைக்குப் பரிசோதகராக அனுப்பி இந்தக் கலகத்தை அடக் கும்படி சொன்னர். அவருடைய நியமனத்தைக் கூட்டுக் கட்சியினரும் ஒப்புக்கொண்டனர். நியமிக்கப்பட்டவரோ ஒரு கருங் குதிரை. ஏனெனில் அங்கே போனதும் அங்கே யிருந்த துருக்கித் தேசீய எதிர்ப்பு இயக்கத்துக்குத் தாம் தலைவராய் அமர்ந்து அதனை ஊக்கப்படுத்திச் சாதனங்கள் மிகவும் குறைவாய் இருந்தாலும் அதனைப் பெரிய போர் வல்ல கட்சியாகச் செய்து மூன்றாண்டுகளில் அதற்குச் சிறந்த வெற்றியை அளித்தார். 1919 ஜூலை 11ஆம் நாள் கான்ஸ் டான்டிநோபிள் அரசாங்கம் முஸ்தாபா கெமாலைச் சட்டத் துக்குப் புறம்பாகத் தள்ளிவிட்டது. 1922 செப்டம்பர் 9-ல் அவருடைய துருக்கியத் தேசீயப் படை ஸ்மிர்னாவிலும் புகுந்து கிரேக்கர்களைக் கடலுக்குள் விரட்டியது. அதே ஆண்டில் நவம்பர் 20-ல் அவருடைய படையின் உத்தியோக முதல்வராகிய இஸ்மட்பாச்சா என்பவர் லாசானிக்குப்போய்த் துருக்கிக்கும் கூட்டுக்கட்சியாருக்கும் சமமான நிபந்தனைப் படி சமாதானம் செய்ய முயன்றார். அயல் நாட்டுச் சம்பந் தம் என்பதில் துருக்கித் தேசீயக் காப்பாளராகிய கெமால், ஹிட்லர் செய்ததைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன் னேயே எதிர்பார்த்தனர். முஸ்தாபா கெமால் இராணுவத்தி லும் அரசியலிலும் வெற்றிபெற்றதே, அவருடைய

வாழ்க்கை முழுவதிலும் மிகவும் உணர்ச்சி எழுப்பக்கூடிய செய்தியாகும். அதில் முக்கியமான செயல்கள் மூன்றாகும்.

முதலாவது தம்முடைய தலைமைக்குக்கீழ் விரும்பி ஒத்துழைக்கக் கூடிய துணைவர் சங்கமாகத் தேசத்திலுள்ள சிறந்த அறிவாளிகளையும் குணசீலர்களையும் சேர்த்துக் கொண்டார்கள். இஸ்மட், ஏப்பட், ஆலிபூவாட், நூரேடின், கியாசிம்பாரா, பெக்கீர், பெற்றி முதலிய சிறந்த போர் வீரர்களும், ரூப்டேபோன்ற கடற்படை உத்தியோகத்தர்களும், டாக்டர் அட்நான் அவருடைய மனைவி காலித்தேகெடில் முதலிய அரசியல் உத்தியோகத்தர்களும் சண்டைக் காலத்தில் அவருக்குப் பயன்பட்டார்கள். இஸ்மத்தைத் தவிர எல்லாரும் சமாதானம் ஏற்பட்டபின் தனிவாழ்க்கை நடந்த ஊருக்கு வெளியே தள்ளப்பட்டார்கள்.

இரண்டாவதாக, கீழை அனட்டோலியாவில் உள்ள துருக்கிப் பிரபுக்கள், கிரேக்கக் கூட்டுக்கட்சி வகையாருக்குக் கீழுள்ள இடங்களில் வசித்த எல்லாவகைத் துருக்கியர்கள், தேசீய இயக்கத்தில் சேர்ந்த துருக்கியர்கள் ஆகிய எல்லாருடைய ஆர்வமான ஆதரவைப் பெற்று அவர்களுக்குச் சண்டையின் நோக்கத்தைத் தெளிவாக விளக்கி ஊக்கத்தையும் ஆத்திரத்தையும் விளைவித்ததில் முஸ்தாபா கெமாலும் அவருடைய துணைவர்களும் வெற்றிபெற்றார்கள். யுத்த நோக்கங்கள் 1920 ஜனவரி 28-ல் கான்ஸ்டான்டிநோபிளில் கூடிய துருக்கிச் சட்டமன்றத்தின் அங்கத்தினரால் கையெழுத்திடப்பட்ட தேசீய உடன்படிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அந்த உடன்படிக்கைப்படி துருக்கியரல்லாதாருக்குச் சொந்தமான துருக்கிய இடங்களின்மீது துருக்கிய அரசு ஆட்சி செலுத்துவதில்லை. ஆசியாவிலுள்ள அராபிய நிலங்களும் ஐரோப்பாவிலுள்ள கிரேக்க செர்விய பல்கேரிய நிலங்களும் அத்தகையன. இனத்திலும் சரித்தி

ரத்திலும் முக்கியமாய்த் துருக்க சம்பந்தமுடைய இடங்கள் துருக்க அரசுக்குச் சொந்தமாகவேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. ஐரோப்பாவில் கான்ஸ்டான்டிநோபிளும் திரேசும் சிறிய ஆசியாவில் ஸ்மிர்னுவும் துருக்கருக்குரியன. இவைகள் 1923 ஜூலை 24-ல் கையெழுத்தான லாசானேயில் நடந்த சமாதான உடன்படிக்கைப்படி முழுவதும் அமுலுக்கு வந்தன.

மூன்றாவதாகத் துருக்கியரது சொந்த நாட்டைச் சிறந்த ராணுவ முயற்சியாற் பாதுகாப்பதைப் பெரிய நோக்கமாகத் துருக்கிய மக்களுக்கு அவர் தெரிவித்தார். அஃது அவருடைய வெற்றியின் இரகசியமாகும். நிலத்துக்காக மாத்திரம் சண்டையில் இளைத்துச் சோர்வடைந்த மக்கள் மறுபடி போர் புரிந்திருக்கமாட்டார்கள். துருக்கிய வாழ்க்கை முழுவதையுமே புதுப்பித்தற்கு ஒரு சமயம் வாய்த்ததாக அவர் கருதினர். சண்டைமுடியு முன்னேயே சமாதான காலத்தில் செய்யப்படத்தக்க வேலைகளைத் தொடங்கிவிட்டார். ஒரு பக்கம் கிரேக்கர்களைத் துரத்திக் கொண்டும் பிரிட்டிஷாரையும் பிரஞ்சுக்காரரையும் எதிர்த்துக் கொண்டும் போர் வேலை நடத்தினர். மற்றொரு பக்கம் துருக்கிச் சமுதாயத்தின் அடிப்படையையே புதுப்பித்துக் கட்டிக்கொண்டிருந்தார். இரு வேலைகளையும் ஏககாலத்திற் செய்வது அசாத்தியமே. முயற்சியின் துணிவும் விரிவுமே அவரை வெற்றிக்குக் கொண்டு சேர்த்தன. அவர் செய்த வேலைகள் பற்பல.

அரசியலில் துருக்கியானது பல தேசீய ஏகாதிபத்தியத்திலிருந்து ஒரு தேசீயக் குடியரசுக்கு மாற்றப்பட்டது. ஆட்டொமான் துருக்கிப் பேரரசை ஆதியில் உண்டாக்கி அதற்குத் தன் பெயர் கொடுத்த ஆட்டொமான் அரச குடும்பம் தள்ளப்பட்டது. புதிய துருக்கிக் குடியரசில் அரசுரிமை

கொள்கையளவில் பெரிய தேசீயசபை என்னும் சட்ட மன்றத்துக்குக் கொடுக்கப்பட்டாலும், செயலளவில் அச் சபையின் நிரந்தரத் தலைவராகிய ஒரு எதேச்சாதிகாரிக்கும் அது பொருந்தியதாயிற்று. முஸ்தாபா கெமால் அத்தகைய எதேச்சாதிகாரியானார். சண்டைக்குப் பின் போலண்டில் அத்தகைய நிகழ்ச்சி நிகழ்ந்தது. வீரன் என்னும் பொருள் படும் காசி என்ற பட்டம் கிரேக்கர்களை வென்றதற்காக அவருக்குக் கொடுக்கப்பட்டாலும் அன்னிய மதத்தினரை வென்ற மகம்மதிய சமய வீரருக்கு ஆதியிற் கொடுக்கப் பட்ட பட்டமாக அஃது இருந்தது. சமயத்துக்கும் அரசுக் கும் முழுப் பிரிவினை துருக்கியில் ஏற்பட்டது. மேலை நாட் டில் அத்தகைய வேறுபாடு இயற்கையாக ஒப்புக்கொள்ளப் படுவது. ஆனால் இஸ்லாம் மதத்தின் நோக்கத்திற்கு அது மாறுபாடானது. 1922 நவம்பர் 1-ஆம் நாள் பெரிய தேசீய சபை ஆட்டோமான் சுல்தான் பதவியை ஒழித்தது. 1924 மார்ச்சு 3-ல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தால் அட்டோமான் சமயத்தலைமைப் பதவியாகிய காலிப் (Caliph) பதவி ஒழிக் கப்பட்டது. 1925 நவம்பர் 2-ல் வெளியிட்ட மூன்று உத்திரவுகளால் இஸ்லாமிய சமயப் பிரிவுகள் ஒழிக்கப் பட்டன. 1928 ஏப்ரல் 9-ல் கொண்டுவந்த சீர்திருத்தத்தால் ‘துருக்கியின் அரசாங்க சமயம் இஸ்லாம் மதமாகும்,’ என்ற வாக்கியம் குடியரசின் அரசியல் அமைப்பிலிருந்து எடுக்கப் பட்டது. சட்டப் பகுதியில் சுவிஸ்ஸாவில் கூட்டம் அதிக மாற்றமில்லாமல் 1926 பிப்ரவரி 17-ல் தழுவிக்கொள்ளப் பட்டது. அந்த ஆண்டு மார்ச்சு ஒன்றில் சில மாறுதல்க ளோடு இத்தாலியக்கிரிமினல் சட்டம் தழுவப்பட்டது.

சுவிஸ்ஸாவில் சட்டத்தை ஒப்புக்கொண்டதால் பெரிய சமுதாய மாற்றம் ஏற்பட்டதாகும். பல தார மணம் ஒதுக் கப்பட்டது. துருக்கியில் பெண்கள் பண்டைய முறையி

லிருந்து தற்கால முறைக்கு மாற இடம் பெற்றனர். முக் காட்டினை எடுத்துவிடவும், தொப்பிக்குப் பதிலாகத் துணிக் குல்லா வைத்துக்கொள்ளவும், பொது வாழ்க்கையிலும் லாபத் தொழில்களிலுங் கலந்துகொள்ளவும் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. துருக்கியர் விளிம்போடு கூடிய தொப்பிகள் வைத்துக்கொள்ளும்படி வற்புறுத் தப்பட்டார்கள். அதைத் தரித்துக்கொண்டு தக்க முஸ்லீம் தம்முடைய வழிபாட்டைச் சரியாகச் செய்ய முடியாதென்பர்.

நெடுந்தூரம் பயன்தரும் மற்றொரு சமுதாய மாற்றம் என்னவென்றால், அரபி நெடுங்கணக்குக்குப் பதிலாக ரோமன் நெடுங்கணக்கு 1928-ல் தழுவப்பட்டது. எழுத்து மாற்றத்தால் பாரசீக அரபிய உயர் இலக்கியங்களுக்கு இருந்த ஆட்சி, தற்கால மேலைநாட்டு ஆங்கில பிரஞ்சு உள் நாட்டு இலக்கியங்களுக்கு மாறக்கூடியது. கடைசியாகத் துருக்கர்கள் உழவராகவும் சிப்பாய்களாகவும் உத்தியோகத் தர்களாகவும் இருப்பதோடு வியாபாரிகளாகவும் தொழில் வல்லார்களாகவும் உள்ள மக்கள் இனமாக மாறவேண்டு மென்று முஸ்தாபா கெமால் ஆசைப்பட்டார்.

இவ்வளவு அடிப்படையான எல்லாவற்றையும் உள் ளடக்கிய ஒரு புரட்சியை ஒரு தனி மனிதன் வாழ்நாட் களுக்குள் எத்தேசத்திலாவது, யாராவது செய்யக்கூடுமா என்றால், யாராவது செய்யக்கூடுமானால் அது முஸ்தாபா கெமாலே என்று சொல்லவேண்டும். அவரை நேருக்கு நேர் சந்தித்து எதிரியின்மேல் புலிபோல் பாயக்கூடிய அவர் போக்கையும், அப்போது அவர் புருவம் சுழிப்பதையும் கண்டவர் யாரும் அவருடைய முகத்தின் வடிவை மனத்தில் எண்ணினால், தாம் செய்துமுடிக்க நினைத்த எந்தக் காரியத் தையும் தம்முடைய எண்ணப்படியே நிறைவேற்றவல்ல அவ ருடைய ஆற்றலைப்பற்றி ஐயுறமாட்டார்கள்.

# ௫. ஜார்ஜ் பேர்னுட்ஷா

விக்டோரியா மகாராணியின் ஆளுகைக் காலத்தை ஓர் இலேசான வேடிக்கைக் காலமாகக் கருதுவதை நாமெல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால் அது தலைசிறந்த விண்மீன்களின் ஒளியோடு விளங்கியதென்று சொல்லவேண்டும். அந்நாட்களில் உயர்ந்த மன ஆற்றலுடையவர்கள் இருந்தார்கள். தெருவெங்கும் பாவலர்களும், கட்டிடக் கணக்கர்களும், ஓவியக்காரர்களும், அரசியல் வல்லார்களும், சீர்திருத்தக்காரர்களும், கதை சொல்பவர்களும், கல்விமான்களும், மருத்துவர்களும், சமூக போதகர்களும், உயிர்நூல் வல்லார்களும், பிறரும் நிறைந்திருந்தனர். எல்லாரும் தாங்கள் தெளிவாகக் கருதிய குறிக்கோளை நோக்கி மதிப்பான முறையிற் சென்றுகொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள், பெரியார் என்ற பட்டத்திற்குத் தகுதியுடையவர்களாயிருந்தார்கள். தக்க மனிதர்களுக்கு அது நல்ல காலமாயிருந்தது. தக்க மனிதர்களெல்லாரினும் முனிவர்களே சிறந்தவர்களாயிருந்தார்கள். டாக்டர் ஜான்ஸன் இறந்ததற்குப்பின் முதற்றரமான முனிவர் ஒருவர் இல்லாமலிருந்த ஆங்கில நாட்டின் மக்கள் போட்டிக்குப் பலபேரிருப்பது கண்டு, தலைமைப் பதவிக்கு ஸ்காட்லண்ட்காரராகிய தாமஸ் கார்லேயில் என்பவரைத் தெரிந்தெடுத்து ரஸ்கின் என்பவரையும் ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்பவரையும் அவருக்குப்பின் வாரீசாக வைத்தனர். முனிவர் என்ற பதவி மதிப்புள்ளதாயும் விக்டோரியா காலத்துக்கு ஒத்ததாயும் ஆங்கிலமுறையாயுமிருந்தது. முனிவரின் கொள்கைகளுக்கு மக்கள் இணக்கமாய் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அவற்

றைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டியதும் அவசியமில்லை. நம்முடைய மக்கள் பந்தயக் குதிரைகளுக்கும் மற்போர் புரிபவர்களுக்கும் காட்டுகின்ற மயக்கமான பாதி அன்போடு கூடிய மரியாதையை முனிவருக்குக் காட்டவேண்டியது அவசியமாயிருந்தது. முனிவர் என்ற அளவிலேயே ஒருவர் நாட்டின் உடைமை ஆய்விட்டார்.

1890 முதல் 1900 வரை உள்ள காலத்தில் வாழ்ந்த எவருக்காவது திரு. பேர்னர்டு என்பவர் உண்மையாக முனிவராவார் என்றால் வியப்பாக இருந்திருக்கும். அவர் சிவப்பு மயிரினர். ஆங்கிலேயனுடைய வெளிப்படையான கோயிற் சமயத்திற்கும் சிறப்பான இரகசியச் சமயத்திற்கும் அவர் மரியாதைக் குறைவு காட்டினர். வேடிக்கையான உடை உடுத்திருந்தார். அக்காலத்தில் இருந்தவர்களுக்கு அஃது எவ்வளவு துன்பத்தை மனத்தில் விளைத்திருக்குமென்று நாம் இப்போது உணர முடியாது. சொத்துக்கு அவர் பகைவர். அவர் ஐரிஷ் இனத்தவர். அவருடைய வேடிக்கைப் பேச்சு மக்களுக்கு விநோதமாயிருந்தது. ஏனெனில் அவர் பேச்சுக்கு உள்ளீடாக ஏதோ ஓர் அர்த்தமிருப்பதாகத் தெரிந்தது. சிறப்பாகப் பேசப்படாத துணைவர்களை உடையவர். அவருடைய தாயாரே அவர்கள் தக்க மனிதர்களல்லர் என்று அறிந்திருந்தாள். அவர் மரக்கறி (சைவ) உணவுடையவர். கடைசிக்கூத்தாக நல்ல உணவுக்குப் பின், பொழுது போக்கிடமாகவும் புனிதமாகவும் கருதப்படுகிற இசையரங்கிலும் நாடகமேடையிலும் அவர் இடைஞ்சல் விளைவிப்பவராகக் கருதப்பட்டார்.

திரு. ஷா ஆங்கிலத் தீவுகளில் தடைகூறமுடியாத ஞான போதகராகக்கூடும் என்ற உணர்ச்சி அக்காலத்தில் மிகத் தூரமாகத் தெரிந்தது. ஏனெனில் முனிவர்களுக்கு மதிப்புப் போய்த் தீர்க்கதரிசிகளின் தேவை ஏற்பட்டது. நீண்ட

இடைக்காலத்தில் ஜார்ஜ் மூரும் புது சில்பர்ட் செஸ்ட்டர்டன்னும் ஒருவாறு தீர்க்கதரிசிகள்போல் இருந்தார்கள். 'மூர்' தம்முடைய சொந்த அனுபவ விருப்பங்களிலிருந்து மேற்கோள் எடுத்துப் பேசிச் சனங்களின் நன்மதிப்புக்கு உரியவரானர். ஆனல் அவருடைய அறிவின் அளவு ஒடுக்கமானது. செஸ்டர்டன் ஆலோசனை செய்யத்தக்க எந்தப் பொருளைப் பற்றியும் அளவற்ற கருத்துக்களுடையவராயிருந்தார். ஆனல் அவர் ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தம் பாதுகாப்புக் குள்ளாக்கினமையால் மதிப்பிழந்தார். அக்காலம் திரு. வேல்ஸ் என்னுங் தீர்க்கதரிசியின் பெருநாளாய் இருந்தது. தீர்க்கதரிசிகள் மதிப்பில்லாமற் போகவில்லை யானலும், சமய மரியாதைக்குரியவரல்லர். உபயோகப்படாத நம்முடைய சமய மரியாதையெல்லாம், அநேகமாய் வாசிக்கமுடியாத கதைப் புத்தகங்களெழுதிய திரு. *தாமஸ் ஹார்டி என்னும் முதியவருக்குக் கொடுக்கப்பட்டது.

ஹார்டியின் மரணத்துக்கு முன்னே நாடகசாலையில் நடிக்கக்கூடிய நாடகங்களைத் திரு. ஷா எழுதினமையினலே அவர் சற்று மதிப்புப்பெறக்கூடிய ஆசிரியர் என்ற உணர்ச்சி மக்களுக்குள் மனவெறுப்போடு ஏற்பட்டது. ஐரோப்பாக் கண்டத்திலிருந்து அவர் †மாலியர் என்றவருக்குச் சமானமானவர் என்ற வார்த்தை வந்தது. இலக்கியத்துக்காக அவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. அவருடைய நாடகங்களில் ஆறு நாடகங்க்ள் லண்டனில் சனங்களை இழுக்கத் தக்கனவாயிருப்பது தெரியவந்தது. பலபடியான அறிவுடைய பொது மக்களெல்லாரும் ‡ சேன்ட் ஜோன் என்னும் நாடகம் தலைமையானதென்று ஒப்புக்கொண்டார்கள். §ஸ்விப்ட் காலத்துக்குப்பின் அவர் மிகவும் தாக்கான கண்டனத் துண்டுப் பத்திரிகை எழுதவல்லவர் என்றறிந்தோம். அவர் இப்

---

* Thomas Hardy. † Moliere. ‡ St. Joan. § Swift.

போது உயரமான வளைவுடைய பார்ப்பதற்கு மதிப்பான முதியவரானார். ஹார்டி இறந்தபின் 1928 தொடக்கத்தில் திரு. ஷா தம்முடைய இராச்சியத்துட் புகுந்தார். பிரிட்டனுக்கு ஒரு முனிவர் அமைந்தனர். முன்னே, சிம்மாசனங்களையும் அரச பதவிகளையும் அதிகாரங்களையும் செந்தாடியை உருவிப் புறக்கணித்தவரேதான் இப்போதும் இருக்கிறார். பொருள்கள் எவ்வாறிருக்கக்கூடாது என்று தாக்கும் அவருடைய கண்டனம் இப்போதும் ஒரேவிதமான துணிவும் கடுமையுமுடையன. ஆனால் தாம் செய்த அற்புதத்தின் மீட்சியினால் இப்போதும் அவர் வருந்துகிறார். அவர் பேசிய வேடிக்கையான பேச்சு இப்போது வேடிக்கையாயில்லை. அவர் தாம் நினைப்பதுபோல நம்மையும் நினைக்கும்படி செய்துவிட்டார். நம்முடைய முன்னோர்களைப் பொறிகலங்கும்படி செய்யக்கூடிய அவருடைய வாக்கியங்கள் சொல்லாமலே விளங்கும் தெளிவான பொதுஅறிவின் பயனாக நம்மால் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த ஒரு மனிதர் எவ்வளவு ஆழமாக நம்முடைய பார்வை நிலையை மாற்றியிருக்கிறாரென்பது ஐரிஷ் கேள்வி ஒன்றைமாத்திரம் ஆராய்ந்தாலே விளங்கும். சரித்திரத்தில் முதல்தடவை நாம் இப்போது அதைப்பற்றிக் கலக்கமுறுவதில்லை. தாம் சாதித்துள்ள அபிப்பிராயம் வேறுபாடுடையதாயினும் தவறாகப் பொருள்கொள்ளும் அறியாமையுடையவரெனினும் ஒரு முனிவர் பிறர் தம் சார்புறச்செய்யும் உரிமையுடையவர். திரு. ஷா அவ்வுரிமையைத் தாராளமாகப் பயன்படுத்தினர்.

அவர் தம்முடைய முயற்சியைச் சில அனுகூலங்களோடு தொடங்கினார். அவர் ஐரிஷ்காரராய் இருந்ததோடு பாதிரிச் சமநிலைக்கொள்கை உடையவராயிருந்தார். அவர் எளிய மத்திய வகுப்புக் குடும்பத்திற் பிறந்தவர். அக்குடும்பம் தக்க குடும்பங்களோடு சம்பந்தப்பட்டிருந்தது.

அவர் ஐரிஷ் பாதிரிவகையி லிருந்தமையால், நாக்கு வன்மையும் பயிற்சியுடைய சனநாயகச் சார்பான விசாரித்தறியும் மனப்பான்மையும் உடையவரா யிருந்தார். குடும்பங் காரணமாகச் சமுதாயத் தன்னம்பிக்கையும் எளிமை காரணமாக அதிருப்தியுமுடையவரா யிருந்தார்.

அவர் 1856 ஜூலை 26-ல் பிறந்தார். அவருடைய தகப்பனுர் ஜார்ஜ் கார்டடா என்பவர் நீதிமன்றத்தில் அவருக்குக் கலியாணமாகும்வரை வேலை பார்த்து வந்தவர். அவருக்கு 40 வயதிற் கலியாணமாயிற்று. நாட்டுக்கனவான் ஒருவருடைய மகளாகிய மிஸ் லூசிண்டா கர்லி என்பவளை மணந்தார். அவளுக்குத் தகப்பனுர் சொத்துப் பாத்தியதை இல்லாமற் போய்விட்டது. புலவரின் தந்தைக்கு வருடத்துக்கு 60 பவுன் உபகாரச் சம்பளம் கிடைத்தது. காரியசித்தி இல்லாத தானிய வியாபாரத் தொழிலையும் வாங்கினுர். மகன் தம்மை அறியக்கூடிய வயது வந்தபோது தம்முடைய மன உல்லாசத்திற்காகச் சாராயம் குடித்துக்கொண்டிருந்தார். அவருடைய மனைவி அவரையும், இரண்டு புதல்வியர்களையும், ஒரு புதல்வனையும் காப்பாற்றக்கூடிய அளவு சம்பாதித்துக்கொண்டிருந்தாள். ஓர் இசைப்போதகர் அவர்கள் வாடகையில் ஒரு பங்கு கொடுத்துக்கொண்டிருந்தார். அவ்வீட்டில் உயிரோடிருந்த பெரியாட்கள் அழகும் சுறுசுறுப்பும் பயிற்சியுமுடைய பெண்மாதும் சங்கீத ஆசிரியரும் தாய் மாமனுர் ஒருவரும் ஆவர். துரதிர்ஷ்டம் பிடித்த தந்தை ஓர் உயிர்நீத்த ஆவிபோல் இருந்தார்.

கால் நூற்றுண்டுக்கு முன்னே ஆசிரியர் * புரூட் என்பவர் ஓர் அதிசயமான கொள்கையை உலகுக்குத் தெரிவித்தார். சில மக்கள் தங்கள் தாயாரை நேசித்தமையால் அந்நேசம் அவர்கள் வாழ்க்கை முழுவதையும் உருப்படுத்

* Freud.

திற்றென அவர் கூறினர். அந்த அறிவியல் உண்மையை ஆராய்ச்சி செய்கின்றவர்களுக்குத் திரு. ஷாவினுடைய ஆன்மா தக்க ஆராய்ச்சியிடமா யிருக்கவேண்டும். தாய் வீட்டை ஆளுவதின் நின்று எவ்விதமான ஒழுக்கம் ஏற் படக்கூடுமென்று தேர்ச்சியில்லாத நாமே முன்னறிவிப்புச் செய்யக்கூடும். அவர் ஒரு சுத்தவாதியாய் இருப்பார். அதாவது பெண்களைப்பற்றிக் காதற் கருத்துக்கள் கலவாத மரியாதை மதிப்புடையவராயிருப்பார். காதற்கருத்தினல் சுகமுண்டா என்று ஆலோசித்தலுங் கூடும். பல சங்கதிகளுக்கு அவர் இடங்கொடுத்தாலும் இரண்டு காரியங்களுக்கு அவர் இடங்கொடுக்கமாட்டார். உழைத்துச் சம்பாதியாத அதிக லாபமும் கலைத்தொழிலில் தகுதியற்ற வேலைப்பாடும் அவருக்கு ஒவ்வா. தம்முடைய உதிரத்தில் ஆடம்பரத்தின் நஞ்சு இருப்பதால் ஆடம்பரக்காரருக்குப் பலாத்காரமான எதிர்ப்புடையவராக இருப்பார். பொறுமை அவர் வாழ்வதற்கு அவசியமானது. ஆதலால் எவ்வகையான கொடுமையையும் அவர் பொறுக்கமாட்டார். சொற்போரில் அவர் தேர்ச்சியுற்றவராய் இருப்பார். அதை விடாது பயிலுவதில் பெருமை கொள்வார். மதிப்புரையும் முகமனும் அவர் விரும்பக்கூடும். தம் தாயாருக்கும் சகோதரிகளுக்கும் தெரியக் கூடிய குறைகளைத் தாம் மனத்தில் எண்ணிப் பார்ப்பார். அதிகாரம், பதவி, செல்வம் முதலியவற்றை அவர் மதித்து அவற்றை அடைவதற்குக் கள்ளராயும் பொருளாளராயும் பிறவாதவர்களுக்கு அவசியமான சுற்று வழிகளால் அவற்றை அடைய முயல்வார். காதல் சம்பந்தமான கேள்விகள், கலக்கங்கள் என்பன ஒரு பகுதியும் விரவப்பெருத அவருடைய உணர்ச்சிகள், உணர்ச்சிகளை எழுப்புங் கருவியாகிய இசையினுற் பலப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுத் தாராளமாகத் தெரியும். அவர் பிடிவாதமாய் ஒன்றைக்

கேட்பவராயிருப்பார். ஏனெனில் முதலிற் கேட்ட உட னேயே அப்படிப்பட்ட வீட்டில் ஒரு சிறு பையனுடைய தேவைகள் கவனிக்கப்படுவதில்லை. அவர் கூச்சமுடையவ ராயும் அதை மறைக்கக்கூடிய வழி தெரிந்தவராயுமிருப்பார். அவர் தம்முடைய தனி இயல்பைப்பற்றிக் கூர்மையாய் உணர்ந்திருப்பார். அவர் ஒரு கலைஞனுய் இருக்க ஆசைப் படுவார். கடவுள் கலை ஆற்றல் கொடுத்திருந்தால், அத் தகைய நிலையில் பர்னுட்ஷாவைப்போல ஆதலும் கூடும்.

15 வயதில் பெர்னுட்ஷா டப்ளினில் ஒரு நிலமேற்பார் வையாளர்க்கு எழுத்தாளரானுர். அங்கே வியாபாரத்தைக் கையாளும் முறைகளிற் பயிற்சியும் தேர்ச்சியும் உடையவ ரானுர். அவையில்லாமல் வாழ்க்கை நன்கு நடத்தமுடியாது. அவருக்கு ஓரளவு தன்னம்பிக்கையும் ஏற்பட்டிருத்தல் கூடும். அஃதல்லாமல் எக்காலத்திலும் முதல்தரமான வேலை செய்ய முடியாது. 20 வயதில் அவர் லண்டனில் எடிசன் டெலிபோன் கம்பெனியில் வேலையிலமர்ந்தார். 23 வயதில் அந்தக் கம்பெனியை விட்டுத் தம்மைச் சுற்றி அலை வீசிக் கொண்டிருந்த அறிவு வெள்ளத்தில் நீந்துவதற்குத் தம் மைத் தகுதியாக்கத் தொடங்கினுர். நூல் நிலையங்களிலும் காட்சிச் சாலைகளிலும் பிரசங்க மண்டபங்களிலும் இசை யரங்குகளிலும் சித்திரச் சாலைகளிலும் அவர் வாழ்ந்து புதுக் கதைகள் எழுதுவாராயினர். அந்தக் கதைகளினுலே பிழைப்பதற்குப் போதிய ஊதியம் கிடைக்கவில்லை. ஆனுல் அவர் தாயார் அவருக்கு உணவும் இடமும் கொடுத்தமை யால் அவர் தம்முடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொண்டார். அவருடைய கதைகள் மக்களுக்கு விருப்ப மில்லாத நினைவுப் போக்கைக் குறித்ததால் மக்கள் அவற்றை விரும்பவில்லை என்று நம்பினுர். காதல் வாழ்க் கையை அவர் நன்குணராமையால் அதற்குத் தகுதியற்ற

அவர் எழுதுங் காதல் கதைகளைக் கதை வாசிக்கும் பொது மக்கள் விரும்புவார்கள் என்று எதிர்பார்ப்பது நியாய மன்று. ஒழுக்க வருணனைகளும் சொல்லணிகளும் சொல் நடையும் விளக்கமாக அவர் நூலிற் காணப்பட்டாலும், அவர் நூல்களிற் பிரியப்படக்கூடிய காதற் கதைகளொன்று மில்லை.

திரு. ஷா, லண்டனில் செலவழித்த தம்முடைய இள மைக் காலத்தின் முக்கியமான செய்தி, அவர் புதுக்கதை எழுதினதன்று. அடிப்பட்ட சீர்திருத்தக்காரர்களோடு அவர் பழகினமையேயாகும். டார்வின், வாலஸ் அக்ஸ்லி என் பவர்கள் பழைய சொர்க்கத்தை அழித்துவிட்டார்கள். சில ஆத்திரக்காரர்கள் சுறுசுறுப்பாக ஒரு புதுப் பூமியை அமைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஹார்வி, கன் னிங்ஹாம், கிரகாம் வில்லியம் மாறிஸ், யூபேர்ட் பிளாண்ட், விரிவாகிலி, அன்னிபேசண்ட் முதலியவர்களும் பிற்பாடு பிர புக்கள் பட்டம்பெற்ற சிட்னி ஒவியர், சிட்னிவெப் என்பவர் களும் இருந்தனர். திரு. ஷா ஒருவருடைய தன்மையை ரோபக்ராம்ஸ்டன் என்னும் பாத்திரமூலமாய்ப் படம் வரைந் தார். முழுமையும் மிகக் கூர்மையுமுள்ள படம், "நன்மை யாய் இராதபடி மிகவும் உண்மையாய் இருப்பது" என்னும் நூலில், மூத்தவர் என்னும் ஆளிற் காட்டப்பட்டது. 20-வது நூற்றூண்டு அனுபவத்துக்கு இது முற்றிலும் தூரத்தி லிருந்தமையால், கண்டனக்காரர்கள் நிலத்திலும் நீரிலும் இல்லாத ஒன்றை எழுதிக் காட்டினரென்று திரு ஷாவையும் திரு க.கி. எயிலிப் என்பவரையும் பலமாகக் கண்டித்தார்கள். உண்மையான புரட்சி ஏற்படுத்தினவர்களை மறதி முற்றிலும் மூடுவதுபோல வேறொன்றையும் மூடுவதில்லை.

புதிய, அதிக அளவுள்ள புரட்சிக்காரர்களில் திரு. ஷா வும் ஒருவர். அவர்களுடைய ஒன்றிரண்டு சமுதாயத் தன்மை

கள் திரு. ஷாவில் இன்றும் காணப்படுவதால் அவற்றை வரு ணிப்பதாற் பயனுண்டு. உலகிலுள்ள எந்தப் பொருளேப் பற்றியும் தெரியாதென்று சொல்வது அவர்களுக்கு வெட் கம். ஒவ்வொரு விஷயத்தையும்பற்றிப் புதுமையாயும் அதி காரத்தோடும் பேசுவதற்கு வேண்டுமளவு அவர்கள் கருத் துக்கள் சேர்த்துவைத்திருந்தார்கள். மிக முக்கியமான செய்திகளேப்பற்றித் தங்கள் அறியாமையை ஒப்புக்கொண்டு பிதற்றிக்கொள்ளும் தற்கால மனிதனைப் பார்க்கிலும் அவர் கள் மிகத் தாழ்மை காட்டினர்கள். தற்கால மனிதன் பிதற்றுவதற்குக் காரணம் தனக்குப் பிரியமான பொருள் களில் தீரத் தெரிந்தவனுகத் தன்னைப் பிறர் மதிப்பர் என்று நம்புவதேயாகும்.

1880,1890-இவற்றிற்குப் பின்வந்த காலங்களில் காலந் தாழ்த்துச் சாவதானமாய்ப் பேசுவது சில கற்றவர்களின் வழக்கம். அவர்களுடைய பேச்சு, கம்பீரமான கவர்ச்சி யுடையது. பள்ளிக்கூடத்துப் பையன் சொற்றொடர்கள், உடைந்த முற்றுப்பெருத வாக்கியங்கள், நெகிழ்ந்த கதைக் குறிப்புக்கள், குலேத்தல், உறுமுதல் போன்ற ஒலிகள் அவர் களுடைய பேச்சிற் காணப்படா. ஒவ்வொரு வாக்கியமும் இலக்கணப்படி அமைந்து தக்கபடி முடிவுபெற்றிருக்கும். ஒரு குறிப்பை ஓர் உதாரணக் கதையினுல் விளக்கவேண்டு மாயின், அக் கதையைப் பணத்திற்கு எழுதினுற் போலத் தெளிவாகவும் சாரமாயும் சுத்தமாயும் இருக்கும்படி செய்வ தற்கு அவர்கள் சிரமம் எடுத்துக்கொள்வார்கள். பேச்சின் நடை மிக மெதுவாக அல்லாமல் சாவதானமாயிருக்கும்படி அளவுபடுத்தப்பட்டிருக்கும். தன் விவகாரத்தைப்பற்றி ஒரு மனிதன் ஒரு சொற்றொடர் அமைத்துக் கூறினுல், அதற்கு மறுமொழி என்ன சொல்லப்பட்டது என்று கவனமாய்க் கேட்டு, தான் பதில் சொல்வதைக் கவனமாய் யோசித்துக்

கூறுதலுண்டு. கொச்சையான சொற்கள் அல்லது ஆபாச மான பேச்சுக்கள் இடங்கொடுக்கப்படுவதில்லை. மொழியின் மதிப்பை அது பாதுகாத்த காலமாயிருந்தது. இப்போ திருக்கும் அக்காலத்து மக்கள் ஏகதேசங்களில் உண வுக்குப்பின் பேசும் பேச்சில் நமக்கு அது தெரியவரும். திரு. ஷா இந்த விதிகளை அனுசரிக்கிறவர். அவருடைய டப்ளின் உச்சரிப்பின் அழுத்தமுறையும் சைகைகளின் சற்று மிகையான பகுதியும் அவருடைய பேச்சிற் காணப் படினும், அவருடைய மனமானது ஏகதேசம் பண்படுத்தப் பட்ட காட்டின் ஒரு பகுதிபோலில்லாமல் ஒரு செவ்விய தோட்டமாயிருத்தல் தெளியப்படும். 1880-வது ஆண்டு களில் தம்முடைய பயிற்சியில் தம்மை ஐரோப்பிய கனவா னுக்கக்கூடிய ஒரு வழியைப் பின்பற்றினர். ஐரோப்பிய கனவான் என்பது பக்கத்திலுள்ள துணைவர்களாலும் கீழானவர்களாலும் அதிகமாகப் புகழப்படுகிற ஆங்கிலக் கனவானின் வேறான நிலை.

1883-ல் திரு. ஷா மூன்றுவது தரம் தம் தொழிலை மாற்றினர். அவர் புதுக் கதை எழுதுவதை விடுத்துத் துண் டுப் பத்திரிகை எழுதுவோராயும் புரட்சியறிவு நூலின் பேராசிரியராயுமானர். இதைச் செய்யும்படி அவரை ஊக்கி யது ஹென்ரி ஜார்ஜ் என்பவரே. அவர் புதிய பொருளாதா ரக் கலைஞருக்கு ஷாவைப் போல முறையீடு செய்துகொண் டிருந்தார். C. H. டக்ளஸ் இக்காலத்தில் அதைச் செய் கிறார். பொது மக்களுக்குப் பேசிப்பழகியதில் ஷா சபையை ஒழுங்காக வைக்கப் பழகிக்கொண்டார். அவர் திறமை சான்ற சொல்லாளரில்லை. அவர் ஐரிஷ் சடை நாய் போலத் தோன்றுவர். "பாறைகளின்மேல்" என்னும் நூலில் பழைய ஹிப்னி என்பவரின் அழகிய பேச்சுக்கள், இந்த நல்ல காலத் தில் ஷா தம்மைப்பற்றியே பின்னேக்கிச் சொன்ன பகுதி

யைத் தெரிவிக்கும். முனிவருடைய கல்வி வளர்ச்சிக் காலமாக அக்காலத்தை எண்ணுவதைப் பார்க்கிலும் ஊக்கமும் பல கலப்புமுள்ள காலமாக அதனை எண்ணுவது முக்கியம்.

1888-ல் அவர் பிறப்புக்கு ஊதியம் தேடத் தொடங்கினர். 'உலகம்' என்னும் நூலின் கலை ஆராய்ச்சிக் கண்டனக்காரராகவும், 'உண்மை' என்பதின் இலக்கிய ஆராய்ச்சிக் காரராகவும் 'விண்மீன்' என்பதின் இசை ஆராய்ச்சிக்காரராகவும், அவர் எழுத்துவேலை முயற்சியை விருத்தி செய்யத் தொடங்கினர். அவருக்கு ஆராய்ச்சி மேற்கோள் அவருடைய சொந்த விருப்பமே. அந்த மேற்கோளைப் பலாத்காரமாக ஒவ்வொரு வாரத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் வற்புறுத்தி அதனை உயர்த்தினர். இசையில் இரண்டு எதிர்ப்பான முனைப்புக் கருத்துக்களுக்கு நடுவே அவருடைய மேற்கோள் அமைக்கப்பட்டது. மோசார்ட் வாக்னர் என்பவருடைய கருத்துக்கள் இசையில் ஒன்றோடொன்று எதிர்ப்பாய் இருந்தன. சாமர்த்தியமான வினோதச் சூழ்ச்சியினுலே தாம் அமைத்த மேற்கோளை ஷா பயன்படுத்துவார். அவருடைய நாடகங்கள் எழுதும் வேலையினுல் ஆர்ச்சர், வாக்லி என்னும் இருவரோடு அவர் நெருங்கிப் பழகவேண்டியிருந்தது. ஆங்கில நாடக சாலைக்காக நூல் எழுதுகிறவர்களை உண்மை வாழ்க்கையைக் குறித்து எழுதச் சொல்லலாமாவென்று பார்த்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில், அவர்கள் நாடகமேடையைப்பற்றி எழுதுவதும் பேசுவதும் கனவு காண்பதுமாய் இருந்தார்கள். 1885-ல் ஆர்ச்சர் ஒரு பிரஞ்சு நாடகத்தின் காட்சிகளை ஆங்கிலத்தில் தழுவி அமைத்தார். அது பொது ஜனங்களை இந்நாட்டில் கவருவதற்குமுன் எந்த வடிவத்தில் எதைப்பற்றி இருந்தது என்று சொல்லமுடியாது. அஃது எவ்வாறுயினும் அதைக்

காட்சிக்குரிய பேச்சுக்களை அமைக்கும்படி ஆர்ச்சர் ஷாவைக் கேட்டுக்கொண்டார். அவர் முதலில் எழுதின பாக்கள் அவர்கள் ஒத்துழைப்பைத் தூள் தூளாக உடைத்தன. அவர் இரண்டாவது எழுதின பாகம் ஆர்ச்சருக்குத் தூக்கத்தை உண்டாக்கியது. இரண்டு பாகங்களும் 1892 வரை ஒதுக்கி வைக்கப்பட்டன. ஆர்ச்சர் சிப்சனுடைய நூல்களைச் சாதாரண மாக மொழிபெயர்த்துச் செய்த புத்தகங்கள், ஏதாவதொன்று எழுதத் தெரிந்தவர்களுக்கு நாடகம் ஒருவிதமான வாயில் என்று காட்டின. ஷா, இப்சனியத்தின் சத்தான சார மென்று ஒரு நூல் எழுதி, நாடகமேடையில் தோன்றும் கொழுப்புப் பூசிய பிரபுக்களோடு அவருடைய நீண்ட வெற்றிகரமான சண்டையைத் தொடங்கினர். 1892-ல் சுயாதீன நாடக இயக்கமென்பதில் அவர் ஓர் ஆளாகச் சேர்ந்தனர்.

ஷா, 'விதவைகளின் வீடுகள்' என்னும் நாடகம் எழுதி முடித்தார். அதைத் திரு. ஜோடி கிரேயின் என்பவர் வெளிப் படுத்தினர். இந்த நாடகத்தின் மேற்படியான அமைப்பைப் பற்றிப் புதுமை யாதுமில்லை. ஆங்கில நாடக கண்டனஞ் செய்யுந் திறமையான கூட்டம், கொள்கைக் குப்பை அமைப்புக் களையெல்லாம் இதற்குமுன் ஒதுக்கித் தள்ளிற்று. 1890-க்கு மேற்பட்ட ஆண்டுகளில் நாடகம் எழுதுவோருக்கு அதற்கு முன் எழுதினவர்களுக்குப் போலக் கடுமையான கண்டன மில்லை. 'விதவை வீடுகள்' என்பதில் சந்தர்ப்பங்களெல்லாம் நன்கு வகுக்கப்பட்டுப் பழைய முறையில் உச்ச நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. செயற் பகுதிகளும் அவற்றிற்கு இடையிடைப் பிரிவுகளும் தக்க நீட்சியுடையனவாய் இருந்தன. இரண்டு பாலிலும் இரண்டு இளைய தலைவர்கள், சமுதாயத்தின் வெவ்வேறு வகுப்புக்குரிய இரண்டு வேடிக்கைப் பாத்திரங்கள், கனமான இதயமுள்ள ஒரு தகப்பனர் என்

னும் இவர்கள் கதையில் சேர்க்கப்பட்டிருந்தனர். பலமான காதற் கருத்தும் இருந்தது.

பிற்காலத்து விநோதங்களில் வகுத்துச் செய்யக்கூடிய புதுநயம் ஒன்றிருந்தது. அது பிற்காலத்தில் குறிப்பிடத் தக்க முறையிற் பெரிதாகவும் விருத்தி செய்யப்பட்டது. அதிற் குறைசொல்லக்கூடியது யாதுமில்லை. வாக்குவாதத்தின் நாடக நயத்தை முற்றிலும் பயன்படுத்துவதே அப் புதிய நயமாகும். ஒரு புகைவண்டியில் ஏதாவது ஒரு பொதுச் செய்தியைப்பற்றி இருவர் வாதித்துப் பேசத் தொடங்கினுல் அங்கே உள்ள மற்றவர்கள் மிகவும் ரசமான புத்தகங்களையும் செய்தித் தாள்களையும் கீழே வைத்துவிட்டு அதனைக் கேட்பார்கள். நாடகமேடையில் மற்போர் செய்கிற இருவர் கத்தியையும் ஈட்டிகளையும் வைத்துவிட்டு நீர் எலியை ஒழிப்பது போன்ற ஒன்றைப்பற்றித் தற்செயலாய் விவரிக்கத் தொடங்கினுல் பார்ப்போரெல்லாரும் அவர்கள் பேசுவதைப்பற்றிக் கவனமாகக் கேட்பது திண்ணம். அது குறை கூறத்தக்கதன்று. நன்றி யுணர்ச்சியோடு பார்க்கத்தக்க ஒரு புதுமையாகும். எவை கடினமாய்த் தோன்றினவெனின், நாடகத்தின் முக்கியப் பொருள், அந்தப் பாத்திரங்களின் ஒருவிதமான நடவடிக்கை, நன்மைக்கும் தீமைக்கும் தராசு போட்டுக்கொண்டிருக்கிற கண்டிக்கத்தக்க நீதிமுறை என்பனவே யென்க.

ஷாவின் நாடகத்தின் முக்கியக்குறிப்பு, அதற்குரிய விபசாரச் செய்தி, அல்லது தாக்கப்பட்ட கற்பு அல்லது வஞ்சகம், களவு, லஞ்சகம், கொலை என்பனவல்ல; அது மூலை முடுக்குகளில் நிலச்சுவானது ஆதிக்கத்தைப் பற்றியது. அஃது ஓர் ஊக்கந் தராத விஷயம். அதைவிடக் கேவலமாக, நாடகத்தில் வெறுக்கத்தக்க சுவையில், வேடிக்கைகள் நிறைந்திருந்தன. ஏனென்றுல் மூலைமுடுக்கு ஆதிக்கம், வேடிக்கை

யில்லாமல் வாதிக்கப்படவேண்டியது. உணர்ச்சிகளில் உயர்ந்த நிலைகளை நாடகம், எழுப்பத்தக்கதாய் இருக்கவேண்டும். எல்லாவற்றிலும் இழிவு யாதெனில், கேட்போரை ஓர் அளவு நீதியான கோபத்திற்குள்ளாக்கிவிட்டு அதற்குத் தக்கபடி யாரையாவது அடித்தல், கீழே எறிதல், அல்லது விளக்குத் தூணிலிருந்து தூக்குதல் முதலியன அமைத்தலே. அவை ஒன்றும் அமைக்கப்படவில்லை. கதாநாயகன் சரண் புகுந்ததும் எல்லாரும் நல்ல உணவுக்குப் போனதும் காட்டப்பட்டன. நாடகப் பாத்திரங்களின் நடையைப் பார்த்தால் அக்காலத்தில் அஃது எவ்வளவு துன்ப உணர்ச்சி விளைவித்திருக்கவேண்டுமென்று இப்போது உணர்தல் கடினம். அழகான நல்ல உடை உடுத்திய கதாநாயகி திடீரென்று பொய்ம்மையும் தீக்குணமும் கொடுமையும் தப்பு வளர்ச்சியும் ஆசையுமுள்ள இளம்பெண்ணாகத் தன்னைக் காட்டிக்கொண்டாள். 'லிக்கீஸ்' என்னும் வேடிக்கையாள் ஒரு சமுதாயத் திட்டத்தைப்பற்றி மிக உக்கிரமாய்க் கண்டிக்க ஆரம்பித்துவிட்டான். கதைப் போக்கிரியாயிருந்த தகப்பனிடத்தில் நல்ல முட்டாள் தனத்தோடு விவகாரத் தேர்ச்சியும் கலந்திருந்தது. விவகாரத்தில் வெற்றி அவனுக்குத் தான் கிடைத்தது. தக்க இடத்தில் அமைக்கப்பட்ட இதயமுடைய கதாநாயகன் ஒரு தரம்கூடத் தன் கைவலிமை காட்ட அல்லது சிறந்த பேச்சுப்பேச இடமில்லாமல் தன் பகுதியை முற்றிலும் செய்யும்படி விடப்பட்டான். அது மிகவும் அதிருப்திகரமானது. திரு. ஷா. தொடக்கத்தில் சரியாயிருந்தாலும், அவருக்கு வழக்கமான பாத்திரங்களென்று மூட சனங்கள் சொல்லுகிற ஆட்களை நாடகத்திற் புகுத்தினர்.

எப்போதும் அவரைப்பற்றிய கண்டனம் யாதெனில், உயிரற்ற, நல்ல நிறமற்ற பேச்சு யந்திரங்களைப் படைத்து உயர்ந்த அணிகள் உள்ள சொல்நடையில் தன் குரலோடு

அவற்றைப் பேசும்படி செய்கின்ருர் என்பதே. இது மறுக்க முடியாத அர்த்தமற்ற கண்டனம். ஒரு துணியின்மேல் எழுதிய மலை, உண்மையில் அழகாகக் கட்டியமைத்த மலையைப் பார்க்கினும் அதிக மகிழ்ச்சி தருவது. உண்மையான மக்கள் தங்களுடைய நம்பிக்கைகளையும் அச்சங்களையும் பற்றிப் பேசுவதை நாம் கேட்கிருேமென்ற உணர்ச்சி ஒரு சந்தர்ப்பம். அப்போது பேசும் பேச்சு எல்லாவற்றையும் நேரே வாழ்க்கையிலிருந்து படம் எடுப்பதால் மாத்திரம் உண்டாவதில்லை. நாடகமக்களுக்குத் தனிப்பட்ட ஒருவித வாழ்க்கையுண்டு. அது நாடக ஆசிரியரும் நடிப்பவரும் சேர்ந்து உழைத்து உண்டாக்கத்தக்கது. நம் பக்கத்து வீட்டுக்காரர் நாம் உண்டபின் பேசுவதற்காக வரும்போது நாடகத்திற் பேசுவது போல அவர் பேசுவதில்லை. அவரை நாம் நன்கறிவதற்கு வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள் செல்லுகின்றன. ஆனல் நாடகப் பாத்திரமாக வருகின்றவர், இரண்டு மூன்று மணி நேரத்தில் அவருடைய முழு வாழ்க்கையும் காட்டவேண்டும். அவர் உயிரோடு வருகிருரா என்பதுதான் சோதனை. நாம் நாடகத்தில் வருகிறவர்களைப்போல ஒருவரையும் பார்க்கவில்லை. நம்முடைய நண்பர்கள் நீண்ட சொற்ருெடர்களையும் சட்டதிட்டமா யமைந்த வாக்கியங்களையும் பேசுவதில்லை. நம்முடைய நண்பர்களிற் பலர் அகவலிற் பேசுவதில்லை. ஆனல் ஹாம்லட்டும் ஜாண்டானரும் நாடகமேடையில் வந்து உண்மை மனிதர்கள்போல நம்முடைய மனத்தைக் கவர்வதினல் அவர்களை நினைவில் வைத்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் நினைவைப்பற்றி ஆலோசனை செய்கிருேம். இஃது ஒரு சூழ்ச்சியால் அமைவது. அஃது எப்படிச் செய்யப்படுகிறது என்பது வேருேர் ஆராய்ச்சி. இந்தச் சூழ்ச்சியை ஷா செய்யக்கூடுமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. அவருடைய நாடகப் பாத்திரங்களில் 24

ஆட்களை நாம் எடுத்துக்கூறலாம். அவர்கள் பிற எந்த நாடகக் கவியின் நாடகங்களிலுள்ள 24 பாத்திரங்களைப் பார்க்கிலும் அதிக வேறுபாடும் புதுமையும் காட்டுவதை நாமறியலாம். இந்தத் தொகையை இருமடங்குப்படுத்தலாம். பெரிய சார்லஸ் டிக்கன்ஸ்கூட இவ்வளவு வகைவகையான பாத்திரங்களைப் படைத்திருக்க முடியாது.

"விதவை வீடுகள்" என்பதில் மிகவும் தொந்தரவான குறிப்பு அதன் நூலாசிரியருடைய நீதியான நிலையே. அவர் குற்றஞ்சாட்டுகிற பக்கத்திலிருந்து பேயின் வக்கீலாக மாறுகிறார். ஒவ்வொரு வேளையில் அவர் ஒவ்வொரு பக்கஞ் சாரலாம். அவருடைய நோக்கமென்னவென்று நாம் தெரியவேண்டும். கண்டனக்காரர்கள் ஆசிரியருக்கு எதிரிடையான பக்கஞ் சேர்ந்து தத்துவமாய்ப் பேசுவதற்கு இடமில்லாமற் செய்துவிடுகிறார். ஓர் ஆசிரியர் தாம் சொன்னதற்கே மாறுகச் சொல்லக்கூடியதைத் தாமே மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறினால் ஒரு கண்டனக்காரன் அவரை எப்படித் தாக்கமுடியும்? ஒரு கட்சியை முக்கியமாக எடுத்துப் பேசுகிறவன், அதன் பலமற்ற கேலிபண்ணக்கூடிய பகுதியையும்பற்றிப் பேசினால் அதற்காக யார் உயிர்விட முடியும்.

டேஸ்மாண்டமக்காரத்தீ என்பவர் இந்த ஒரு வகையான மனநிலையைப்பற்றிப் பாதி உண்மை தெரிவிக்கும் ஒரு வரலாறு கூறுகின்றார். அவர் சொல்வதாவது: "அன்று மாலை நேரங் கழித்துப் பர்னட்ஷா தம்முடைய தாயார் இழவுச்சடங்கு முடித்து அப்போதுதான் வந்தார். அந்தச் சடங்குகளைப்பற்றிய இராணுவப் போக்கினைப்பற்றி அவர் குறித்துப் பேசினார். கல்லறைக்குப் போகும்போது ஒரு மரியாதையான வேடிக்கையற்ற சங்கீதம் வேண்டும். திரும்பி வரும்போது ஒரு கிளர்ச்சி ஓசை வேண்டுமென்றார். அவர் இப்படிப் பற்றற்றுப் பேசுவதைப் பார்த்து நான் சிறிது

ஆச்சரிய முற்றதுபோல எண்ணினேன். அவர் என் பக்கம் திரும்பித் தற்செயலாய்ச் சொல்வதுபோல, நான் சனங்களை மறைக்கிறவனென்று நீங்கள் எண்ணவேண்டாமென்று அவர் சொன்னது, என் மனத்தில் அழுத்தமாய்ப் பதிந்தது. அஃது உண்மையென்றே நான் உடனே உணர்ந்தேன். எனக்கு அதில் மனம் பிணித்தது. அஃது அவர் இதய உணர்ச்சி இல்லாதது போல் சொன்ன குறிப்பு வார்த்தையன்று. அவர் கலைத்திறத் தின்மீது அது வீசிய ஒளியேயாம். உணர்ச்சிகளை நோக்கும் போது அசாதாரணமான முறையில் தற்சார்பின்றி நிற்கும் நிலையே அவருடைய நாடகங்களின் சிறந்த ஊடுருவிப்பாயுந் திறத்திற்குக் காரணம், பலவகைப்பட்ட ஆட்களிடத்தில் அவர் ஒத்த உணர்ச்சி காட்டினாலும் அவர்களுடைய எண் ணத்தின் அளவைக் கண்டுபிடித்து எழுதுவதற்கும் அதுவே காரணம். அக் கதையானது இளமையிலும் வயதுவந்த போதிலும், தம்முடைய உணர்ச்சிகள் தம்மை அச்சுறுத்து கின்ற முதலாளிகளாய் இருக்கலாமென்று கண்டுணர்ந்தவர்க ளுடைய நடத்தையை அது மதிப்பாக விளக்கிக் காட்டு கிறது. உணர்ச்சிகளுக்கு வேருக நின்றுதான் அவற்றை ஆராய்வதற்கு அவர் தம்மைப் பழக்கிக்கொண்டார். அவைகள் மீது சவாரி செய்தால் தம்மைத் தூக்கிப்போடக் கூடுமென்ற அச்சத்துக்கு இடமில்லாமல் அவர் இருந்துகொள்வார். ஒரு நாடகம் எழுதுகிறவன் தன்னுடைய உரைநடையிற் காட் டுங் குரல்கள் மாறுவேடம் பூண்ட அவனுடைய சொந்த உணர்ச்சிகளின் ஓசையே யாகும். அவற்றை அடக்கி ஒழுங்கு படுத்துகின்ற முறையும் அவன் ஆவியின் இயக்கத்தை அவன் சொந்தமாக நடத்தும் முறைக்கு அறிகுறியாகும்.

திரு. ஷா நடுவு நிலையில் இருப்பதற்கு வேறொரு காரண முண்டு. 1892-வது ஆண்டிலேயே மனச்சாட்சிக்குத் தக்க படி நடக்கும் முனிவராகத் தாம் இருக்கவிரும்பினர். இப்

போது தாழ்ந்த நிலைக்குப் போகாத நாகரிக வாசிகள் நடுவே தானிருந்தாலும் அந்த விருப்பம் குறைவுபடவில்லை. காலஞ் சென்ற திவான்ஷயர் பிரபுவைப் போன்ற மனநிலை அவருக்கில்லை. அவர் ஒரு பொதுப்பேச்சுப் பேச முன் தன் வாய்க்குள் சொல்லிக்கொள்வதாவது ; என் வாழ்நாளில் இவ்வளவு முட்டாள்தனமான பேய்க் கூட்டத்தை நான் பார்த்ததில்லை என்பதே. திரு. ஷா எல்லாரையும் இன்புறுத்தவே விரும்புவார். அல்லது நல்லறிவைக் கொடுக்க விரும்புவார். அவர் எவ்வளவும் சோதித்தாலும் அவர் ஒரு பகுதி காட்சிப் பொருள் காட்டுகிறவர் ; ஒரு பகுதி பள்ளிக்கூடப் போதகாசிரியர்; இரண்டு வேலைகளின் மதிப்பான முறைகளை அவர் உறுதியாகப் பற்றுகின்றவர் என்பது விளங்கும். அவர் தம்முடைய கட்டளைகளை உண்மையான பொறுப்புணர்ச்சியோடு வெளிப்படுத்துகின்றவர் மத அதிகாரப்போக்கில் தாம் பேசினால் பத்துக் கட்டளைபோலத் தம் சொல்லை ஒருவரும் மதிக்கமாட்டார்களென்று அவர் உணர்ந்தவர். ஏகதேசத்தில் சாவதானமான அவர் மூளையில் அந்நியச் செய்தி நுழையும். அதற்குதாரணம் ருஷியாவைப் பற்றி அவர் பேசியதாகும். வெளுப்பானும் சிவப்பானும் ருஷிய சம்பந்தம் எல்லாச் சம்பந்தத்தாலும் மூளைக்கு அதிக வேலை கொடுப்பது. நீண்ட சாவதானமான நேரஞ் செலவழித்து உழைப்போடும் அறிவோடும் ஒரு கேள்வியின் இரண்டு பக்கத்தையும் ஆராய்ந்து சொல்லிக் குறைவாக மாறுதல் உள்ளதை நாம் தெரிந்தெடுக்க விடுவது அவர் சொல்லின் போக்கு. நாம் அதற்கு அவருக்கு நன்றி கூறவேண்டும்.

1925-ல் *" சனிக்கிழமை ஆராய்ச்சி " என்னும் பத்

---

* Saturday Review.

திரிகைக்குப் பிராங்ஹாரீஸ் என்பவருடைய பாதுகாப்பில் அவர் நாடகக் கண்டனக்காரராய் வேலைபார்த்தார். ஹாரீஸ்ஷா வின் பெயரை உபயோகப்படுத்தித் தம்முடைய இரண்டு முன் முக்கிய வேலைகளைப்பற்றி ஓர் ஆபாசமான புத்தகம் எழுதிக்கொண்டார். நாடகமேடையைப் பற்றிய ஷாவின் கட்டுரைகள் உண்மைச் சார்புடைய நாடகமென்று சொல்லப்படுகின்றவற்றின் சார்பாகவும் சமுதாயக் கொள்கையின் சார்பாகவும் முறையற்ற பிரசாரஞ் செய்தன. அவைகளில் அவர் நாடகங்களுக்கு எழுதும் முன்னுரைகளின் உறுதியும் சுருக்கமும் காணப்படமாட்டா. இடத்திற்குப் பொருத்தமில்லாத படிப்பு மிகுதியை அவைகள் காட்டின. அவைகள் நாடகமேடை மேற்பார்வையாளர் கூட்டத்துக்கு என்ன இடம் கொடுக்கவேண்டுமோ அதனையே கொடுத்தன. மேற்பார்வையாளராயிருந்து நடிப்பவர்களுக்கு விரோதமாக ஆத்திரத்தோடு எழுதியவைகள் அவை. அவைகள் குறிப்பிடும் ஆட்கள் இறந்தபின்னும் வாசிப்பதற்கு அவை இன்பமாயிருப்பன. அவைகள் மதிக்கிற நாடகங்களும் கண்டிக்கிற நாடகங்களும் இப்போது இருட்டில் மறைந்துபோனுலும் அவைகள் மதிக்கத்தக்கனவாய் வாசிக்கப்படுகின்றன. திரு. ஷா, தம்முடைய தொழில் முறையைப் பொது இடத்திலிருந்து நாடகங்களைக் கேட்டு உருப்படுத்திக்கொண்டார். நாடகமேடையில் அதனுடைய ஒளிமயக்கம், காட்சியின்பம் என்பவற்றுல் உணர்ச்சிகள் அங்குமிங்கும் மோதுறப்பெறுமல் தம்முடைய மூளையைக் கலங்கா நிலையில் அவர் வைத்துக்கொண்டார். திரு. எல்லன்பேரி என்பவளோடு தபால் மூலமாய்க் காதற் கருத்துக்கள் பேசுவது ஊக்கத்தைத்தராலாமெனினும் ஷா எதையும் தன்னடக்கத்தோடும் காரியத்திற் கண்ணேட்டத்தோடுஞ் செய்கின்றவர். அவர் திரு. சாரலட் பெயின் டவுன்செண்ட் என்னும் மாதினை மணந்தார். அந்த

மாது கூரிய அறிவும் நல்லியற்கையும் மேனி அழகும் உடையவர். அவருடைய வாழ்க்கைக்குத் தக்க துணையா யிருந்தாள்.

திரு. ஷா, இளமை முதற்கொண்டு நாடகமேடையின் அரசராய் இருக்கத் தயார் செய்து கொண்டாரேயொழிய அதன் அடிமையாய் இருக்கவில்லை. உணர்ச்சி காட்டுமிடத்திலும் அவர் அறிவோடு வேலை செய்பவர். விதிகளையெல்லாம் அவர் அனுசரித்து வசதிக்குத் தக்கபடி அவர் கையாளுவார். உவிஸ்லருடைய படங்கள்போல அவருடைய நாடகங்கள் உயர்ந்த வடிவமைப்புடையன. உணர்ச்சி எழுப்புவதற்குப் பொய்யான முறையீடுகளை * உவிஸ்லர் விலக்குவதுபோல, ஷாவும் விலக்குவார். உவிஸ்லருடைய படங்களில் அவைகளுக்கு அபூர்வமான தனிப் பெயர்கள் கொடுத்தாலும், வடிவத்திலும் நிறத்திலும் பொருத்தமான விதிகளை அனுசரித்து, ராபேல் படங்கள்போல் அவைகள் அமைக்கப்பட்டன. தன்னோடு ஒத்த காலத்தில் இருந்தவர்களைப் பார்க்கிலும் விதிகளில் முக்கியமானவைகள் எவையென்று அவர் மிகத் தெளிவாக அறிந்தவர். ஷாவும் அத்தகையரே.

நாடகத்தொழிலிற் புரட்சி ஒன்றும் ஷா உண்டாக்கவில்லை. நாடக நயத்தோடமைத்த துண்டுப் பத்திரிகையொன்றே மிக விரும்பத்தக்க நாடக வகையென்று அவர் கூறியது மறந்த உண்மையைத் திருப்பிக் கூறுவதேயாகும். அவருடைய உரையாடல் நயத்தைக் காட்டும். † "பாறைகளின்மீது" என்னும் நாடகம், இரண்டாவது ரிச்சர்ட் என்னும் நாடகம்போல அதிசயமான முறையில் அதன் அதிசயங்களை இயக்கிக் காட்டுவது. ‡ ஆப்பிள் வண்டி என்பதும் அப்

---

* Whishlar. † On the Rocks. ‡ Apple Cart.

படிப்பட்டதே. 'இதய உடைப்பு வீடு' என்பதில் புதிய ஐதீகம் புகுத்தப்பட்டிருக்கிறது. குடி விருந்துக்குப்பின் தட்டோட்டிக் கம்பிகளைப் பிடித்துச்செல்வதுபோல *சேக்கோ வின் விதிகளை ஷா பின்பற்றினுர். அதில் அவர் தம் தாழ்மையைக் காட்டினும் தம் அறிவுத்திறத்தை அவர் குறுக்கினுர். அவர் பதிக்கக் கருதிய உயர்ந்த உண்மைகளை வாய்மொழி பேசுகிறமுறையில் தம் சொந்த வாயிலாக அவர் கையாளுகிறுர்.

களிப்பு நாடகத்தின் பெருமுதல்வர்களின் தொடர்பில் திரு. ஷா ஒருவர் என்பது தடையின்றி விளங்கும். அவர் தத்துவ ஞானி என்பதற்கு உரிய சான்றுகள் பிரிட்டானியத் தீவுகளில் அவர் அடைந்த முனிவர் பதவியைப் பாதுகாப்பன. அவர் எந்த உண்மையை மக்களுக்குக் கூறவந்தாரோ அதைக் கூற அவருக்குப் பாதி நூற்றுண்டுகளுக்கு மேலாயினும் இன்னும் அது பூர்த்தியாகவில்லை. அஃது எவ்வளவு சொற் றிறமையோடும் தெளிவாகவும் சிறப்பாகவும் நீண்ட முறையிலும் சொல்லப்படவேண்டுமோ அம்முறையில் அது சொல்லப்பட்டுள்ளது. அதைச் சுருக்கிக் கூறவேண்டுமென்றுல் அவரே நெடுநாட்களுக்குமுன் சுருக்கிக் கூறியிருப்பார். முக்கியமாக அது சமய சம்பந்தமான தூது. ஷா, மிகவும் அழுத்தமான மதவாதி; ஆனுல் சீர்திருத்த முறையைச் சேர்ந்தவர். ஒரு கிழவி 'கருநங்கை' யென்ற நூலின் புத்தகத்தைப் புத்தகம் விற்றவன் கண்முன்னே கிழித்தெறிந்தாளாம்; அது ஜனங்களுக்கு ஒரு தனி முறையாகத் தோன்றியதுபோல, மக்கள் ஷா செய்ததைப் பார்த்து அஞ்சலாம். திரு. ஷா ஒரு பொதுப் பிரசங்க மேடையில் தம்முடைய கைக்கெடியாரத்தை எடுத்துக் காட்டி நான்

* Checko.

சொல்வது பொய்யானல் எல்லாம் வல்லவர் இன்னும் இரண்டு நிமிடத்தில் என்னைச் சாகவைப்பாராகவென்று அறை கூவினர். அவருடைய சமய உணர்ச்சி அவருடைய இலக்கிய வீரனகிய * பணியன் என்பவர் உணர்ச்சியோடு ஒத்தது. கடவுளுடைய ஆவி மனிதனுக்குள் தங்கி அவனை இயக்குகின்றது என்று அவர் நம்பினர். அந்த ஆவிக்குக் குறுக்காக நாளுக்கு நாள் தலைமுறைக்குத் தலைமுறை அச்சம், பகை, பேராசை, மூட நம்பிக்கை, பொருமை, கொடுமை என்பன மாருய்ச்செல்லுகின்றன. அவை பொது இடத்திலும் தனிமையாகவும் தோன்றுங் காலங்களில் அவற்றைப் பலமாயிகழ்ந்து பரிகசிப்பார். பலமாய் இகழ்தல் ஐரிஷ் மக்களின் தனிச்சிறப்புப் போக்கு. கடவுளுடைய இராச்சியமென்பது ஏமாற்றுதல், வம்பு பேசுதல், கொலை செய்தல் முதலியன இல்லாமல் துன்பமும் அவமானமும் பசியும் இல்லாமல் வாழ்க்கை நடத்தக் கூடிய உலகம் என்பது. பயனைப் பார்க்கிலும் சாதனத்தைப் பெரிதாக அவர் கருதுவதில்லை. சமுதாயக் கட்சியில் அவரோடொத்த சமயவாதிகளுக்கு அது பிடியாது. அந்த விஷயத்தில் மதத்திற்குப்புறம்புபோல அவர் தோன்றுவார். ஏசு வரலாற்றில் செயல் முறையில் தக்க அரசியல் வல்லார் ஏசுவோ, சுயபாஸ் என்பவரோ ஒன்றும் அவருக்கு நிச்சயமில்லை. பரபாஸ் பணத்துக்காக ஓடுகிருனென்ருல் அஃது இயற்கை என்பது அவர் கருத்து. கிறிஸ்துவராய் இருப்பதே அவர் விருப்பம். ஆனல் அதிசயமான பலி, ஒன்று ஒன்ருய் மாறுதல் முதலிய கிறிஸ்துமத மூடு பனியை அவர் பகைக்கிருர். புது ஏற்பாட்டு நூலில் தப்புணர்ச்சி இல்லாத மதத்திற்குப் பொருத்தமான பாறை அடிப்படை இருப்பதாக அவர் கண்டார். தம்மை ஆர்வமும்

* Banyon.

அன்புமுடையவராகக் கருதி அப்பாறையில் ஒட்டிக்கொள்ளுகிறார்.

அரசியல் துறையில் தம்மைப் பொது உடைமைக்காரரென்று சொல்லிக் கொள்ளுகிறார். சிலகாலமாகப் பொது உடைமைக்காரர்களோடு உண்மையான தொடர்பு யாதும் அவர் வைத்துக் கொள்ளவில்லை. தற்காலப் பொது உடைமைக் கொள்கை இன்னதென்று அவர் முற்றிலும் அறியாதிருக்கலாம். இந்த விளைதத்தோடு நம்முடைய முனிவர் வரலாறு முடிகிறது.

---

# ரு. சர். ஆலிவர் லாட்ச்

சர். ஆலிவர் தாம் எழுதிய தமது வாழ்க்கை வரலாற்றில், "ஒருவர் தம்முடைய பெற்றோர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்வது மிகவும் அவசியமானது. ஏனெனில் புதுக்கரு அப்பொழுது நன்றாக உருவெடுக்கும் என்பது பாதி வேடிக்கையாகச் சொல்லப்பட்டிருக்கிறது" என்று எழுதியிருக்கிறார். அதற்குப்பின் அந்தக் கருத்தில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்று வினவி அப்படியே நினைக்கத் தமக்குத் தோன்றுகின்றது என்று விடைகூறியிருக்கிறார். இக்கருத்தை நாம் வேடிக்கையாகக் கருதினாலும் உண்மையாக எடுத்தாலும் அவர் தம் பெற்றோரைத் தெரிந்து கொண்ட பாக்கியவானென்றே நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனெனில், அதிகாரமும் கவர்ச்சியுமுடைய ஓர் உடம்பில் அவருடைய உயர்ந்த மன ஆற்றல்கள் போர்க்கப்பட்டிருக்கின்றன. அவர் ஆறடி மூன்றங்குலம் உயரம் உடையவர். பதினைந்து கல் அளவு கனமுடையவர். அவர் நடை எளிதாயும் மதிப்புள்ளதாயும் இருப்பது. அவருடைய பார்வை நட்பும் அறிவும் காட்டுவது. காலம் அவருடைய உறுப்புக்களை மென்மையாகச் செய்திருக்கிறது. அவர் பிரியப்பட்டுப் போற்றிய கருத்துக்கள் அவருடைய காலத்து அறிவு நூலார் பலரால் இகழப்பட்டதுபற்றி அவருடைய தன்மை சோர்வடையவில்லை. சாதாரணமாகப் பார்ப்பவரை மாத்திரமல்லாமல் மனிதநூற் கலைவல்லார் கவனத்தையும் அவருடைய தோற்றம் பிணிக்கவல்லது. அவருடைய எடுப்பான கனத்த தலையும் தலையோட்டின் நேரான பின் பாகமும், கி. மு. இரண்டாயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்னே

பிரிட்டனில் படையெடுத்துச் சென்று தங்கிய நெட்டை மனிதர்களின் வடிவத்தை நினைவூட்டும். "தண்ணீர்க் கிண்ண" இனமென்று அச் சாதியார் பேசப்பட்டனர். ஏனெனில், களிமண் கிண்ணமொன்று அவர்கள் கல்லறையிற் காணப்பட்டது. அந்த இனத்தாருடைய வடிவ அமைப்பு ஆங்கில மக்களுள் இடையிடையே காணப்படும். 1902-ல் ஏழாவது எட்வர்டினுடைய முடிசூட்டு விழாவில் 'சர்' பட்டம் பெற்றவர்கள் வரிசையில் சர். ஆலிவர் பெயரைச் சேர்ந்த சாலிஸ்பரி பிரபு இவ்வினத்தாரின் ஒரு பிரதிநிதி யாவர். அவருடைய மருமகனாகிய பால்பர் பிரபு* அத் தகைய வடிவ அமைப்புடையவரே. சர். ஆலிவரின் ஆராய்ச்சிகளில் அவரும் பிரியப்பட்டுக் கலந்தவர். பழைய இனத்தாரின் தற்காலப் பிரதிநிதிகளுள் நன்றாகப் பேர் பெற்றவர் சார்ல்ஸ் டார்வின் என்பவர். அவருக்கு அவ்வினத் தாரின் எடுப்பான புருவ ஓரங்களும் தாழ்ந்த நெற்றியும் உண்டு. சர். ஆலிவருக்குப் புருவ ஓரங்கள் மென்மைப்பட்டு நெற்றி உயர்ந்து பூரணமாய் இருக்கும். தண்ணீர்க் கிண்ண இனத்தாரின் இரண்டு பிரதிநிதிகளும் தாங்கள் வாழ்ந்த பேருலகின் இயற்கையை அறிவதற்குத் தைரியமான முயற்சி செய்தவர்கள். அதற்கே தங்கள் வாழ்நாட்களைத் தத்தஞ் செய்தவர்கள். ஒருவர் கருத்துக்கும் மற்றவர் கருத் துக்கும் நேர் எதிர்ப்பு அமைந்திருத்தல் அனுசரிக்கத்தக்க எதிர்ப்பாகும். டார்வின் நிலத்தின்மீது தம் பார்வையை நிறுத்தி மனிதனையும் விலங்கையும் உருவாக்கிய எல்லாவகை ஆற்றல்களையும் அங்கே கண்டார். சர். ஆலிவர் மேலேபார்த்து உயிருள்ளதும் இல்லாததுமாகிய எல்லாவகைச் சடவடிவங் களையும் படைத்தாளுகின்ற சத்திகளை வான்பூதத்திற் கண்

* Lord Balfour.

டார். சர். ஆலிவர், வாழ்க்கையும் மனத்தையும்பற்றிக் கூறும் விளக்கம் டார்வின் கூறுவதிலிருந்து வேறுபட்டிருந்தாலும், டார்வினது பொருள் வளர்ச்சிக் கொள்கையைச் சர். ஆலிவர் தள்ளிவிட்டார் என்று எண்ணக்கூடாது. சர். ஆலிவர் மனிதத் தோற்றத்தைப்பற்றி டார்வின் கூறும் கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் சார்லஸ் டார்வினைப் பொறுமையோடு பொருள்களை ஆராய்பவராகவும் ஆழ்ந்த நினைப்பாளராகவும் பேசியிருக்கிறார்.

சர். ஆலிவர், ஒரு மனிதனுக்கு அவன் பெற்றோர்கள் மூலமாக வருவதிற் பார்க்கிலும் அவனுடைய இயற்கைத் தன்மையிலேயே அதிகம் நாம் அறியத்தக்கன உள்ளன என்று கூறுவர். அவர் இயல்பில் அவருடைய உயர்ந்த ஆற்றல்களுக்குக் கொடிவழி முறைகள் எவ்வளவு தூரம் அனுசரணையாய் இருந்தன என்பதை நாம் விசாரிப்பது பயன்படும். 1851 ஜுன் 20-ஆம் நாளாகிய அவர் பிறந்த நாளன்று அவருடைய தகப்பனார் ஆலிவர் லாட்சுக்கு வயது இருபத்தைந்து. அவருடைய தாய் கிரேஸ்ஹீத் என்பவளுக்கும் வயது இருபத்தைந்தே. இருவரும் வடக்கு ஸ்டாபோர்டுஷயரில் வசித்துக்கொண்டிருந்தனர். ஸ்டொக்கான் டிரேண்ட் என்னும் ஊரைச் சார்ந்த பேன்குல் என்னுமிடத்தில் குயக்குடிக்குச் சமீபத்தில் அவர்கள் வீடு இருந்தது. இக்காலத்தில் அவருடைய தகப்பனார் அங்குள்ள இருப்புப் பாதைச் சங்கத்தின் உத்தியோக நிலயத்தில் பொருளாளராக வேலை பார்த்து வந்தார். அவருடைய தகப்பனார் எசக்ஸ் என்னுமிடத்தில் முதலிலும் பின்னர் கேம்பிரிச்ஷயரிலும் பாதிரியாக வேலைபார்த்து வந்தார். பாதிரியார் ஐரிஷ் இனத்தினர். பொருளாளரின் தாயாரும் ஐரிஷ் இனத்தினரே. பாதிரியாருக்குப் பிறந்த இருபத்தைந்து பிள்ளைகளில் பொருளாளராய் இருந்த ஆலிவர் இருபத்து மூன்றாவது பிள்ளை.

பொருளாளர் ஆலிவருக்கு எட்டுப் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் ஏழுபேர் ஆண் மக்கள். அவ்வெழுவரில் மூத்தவரே நாம் பேசும் ஆலிவர். அவர்களுள் கடைசியாய் இருந்தவர் சரித்திர ஆசிரியராயும் வெஸ்ட்பீல்ட் பள்ளிக்கூடத்துத் தலைவராயுமிருந்த கான்ஸ்டன்ஸ் லாட்ச் என்பவர். பிள்ளைகள் எல்லாம் உயரத்தில் நெடியவர்கள். நாலாவது குமாரராகிய சர். ரிச்சர்டு லாட்ச் என்பவர் ஆறடி ஐந்தங்குலம் உயரமுடையவர். அவருடைய பிள்ளைகள் அவரிலும் உயரமுடையவர்கள். அவர் சரித்திர ஆசிரியர். இன்னும் இரண்டு பேர் உயர்ந்த கணக்கு வல்லமையுடையவர்கள். அவர்கள் யாரெனில் சர். ஆலிவரும், அவருடைய தம்பி ஆல்பிரட் என்பவருமாவர். இத்திறமை அவர்களுக்குத் தகப்பனார் வழியாக வரவில்லை. தாய் வழியாக வந்ததாகும். அவள் அண்ணன் மகன் கணக்கில் கீர்த்திபெற்றவன். அவளும் பாதிரிக் குடும்பத்தவளே.

சர். ஆலிவருக்கு உரிய காலத்தில் திருமணம் நடந்தது. 1877-ல் அவரும் அவருடைய மனைவியாகிய மேரி மார்ஷல் என்பவளும் ஒன்றாக வாழ்க்கை தொடங்கினர். அவர்களிருவருக்கும் அப்போது வயது இருபத்தாறு. லாட்சுகளுடைய முன் பரம்பரை வழக்கம் அவர்களையும் விடவில்லை. அவர்களுக்கும் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். நாம் எண்ணுவதுபோல சர். ஆலிவர் பிறப்பைப்பற்றி எண்ணுவதில்லை. அவர், பிறப்புச் செய்திகளைப்பற்றி வைதிகமுறையிற் பொருள் கொள்ளாதிருப்பதை நாம் உணர்ந்தாலன்றி, அவர், தமது சுயசரித்திரத்தில் தம்முடைய பிள்ளைகளைப் பற்றிப் பேசுவதை நாம் கேட்டால் நமக்கு வியப்பும் மனக் குழப்பமும் உண்டாகும். அவர் சொன்னதாவது: "அவ்வளவு மகிழ்ச்சி தரத்தக்க மக்கள் எங்கள் கூடவந்து வாழ நினைத்தார்களே என்று நான் பாதி வேடிக்கையாய் நன்றியுணர்ச்சி

கூறுவதுண்டு. கடைசியாகப் பிறந்த இரண்டு பெண் குழந்தைகள் அங்ஙனம் கடைசியாக வந்ததைப்பற்றிக் குறை கூறுவதுண்டு. கதவடைக்கப் போகிற சமயத்தில் இவ்விரட்டைப் பிள்ளைகள் எப்படியோ கசங்கி நுழைந்துகொண்டார்களே என்று சொல்வது உண்டு. ஆனால் அவர்கள் அவ்வளவு மதிக்கத்தக்கவர்களாய் எப்படி ஆனார்கள்? அஃது என் செயலன்று. பிள்ளைகளைக் கவனிக்காதபடி வேறு காரியத்தில் சுறு சுறுப்பாய் இருப்பது நல்லதன்று. ஆனாலும் நான் அநேகமாய் அப்படித்தான் இருக்க நேர்ந்தது. அவர்களுக்கு அவர்களுடைய தாயாரது சார்பே மிகுதி." புதியதும் கடுமையுமான அறிவு வழிகளை விருத்திசெய்வதில் சர் ஆலிவர் தம் முழு உள்ளத்தையும் செலுத்தியதைக் கவனிக்கும்போது அவருக்கு வீட்டுப் பொறுப்பும் எவ்வளவு இருந்திருக்க வேண்டுமென்பதை நினைத்தால் அவருடைய வேலையின் பெருமையையும் வெற்றியையும் நாம் நன்கு மதியாமலிருக்கமுடியாது.

சர். ஆலிவரின் இளமைக் காலத்திலேயே அவருடைய தகப்பனார் ஸ்டாப்போர்டு இருப்புப்பாதை நிலையத்தில் வேலை பார்ப்பதைவிட்டுச் சொந்தத்தொழில் செய்யத்தொடங்கினார். தலைமைக் குயவனுக்கு வேண்டிய சாமான்கள் சேர்த்துக் கொடுக்கும் வேலையை அவர் மேற்கொண்டார். அதில் அவர் விருத்தியடைந்தார். சர். ஆலிவரின் தாயார், கணக்குகளைச் சரியாக வைத்துக் குடும்பக் காரியங்களை நன்கு கவனித்து வந்தாள். பையன்கள் வளர வளர அவர்கள் தொடக்கப் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும்படி விடப்பட்டார்கள். சிராப்ஷியரிலுள்ள நியூப்போர்ட் இலக்கணப் பள்ளிக்கூடத்துக்கு ஆலிவர் எட்டு வயதிற் போனார். அங்கே தமது சிறிய தாயாரை மணஞ்செய்த ஒரு பாதிரியார் வீட்டில் உணவுகொண்டார். பதினாறு வயதில் அவருடைய பள்ளிக்

கூடப் படிப்பு முடிந்தது. பின், அவர் தம் தகப்பனர் தொழிலிற் கலந்துகொண்டார். எல்லாப் பேரறிவாளரை யும் போலத் தம்முடைய பள்ளிக்கூடத்தையும் உபாத்தி மாரையும்பற்றி அவர் கண்டித்துப் பேசுவதுண்டு. தரை நூல், சரிதம், நிலஅளவை என்பன அவருக்குப் பிரிய மானவை. பள்ளிக்கூடத்தில் உள்ளவர்கள் அவருக்கு இலக்கணமும் உயர்ந்த இலக்கியமும் கற்பித்தார்கள். அவ ரைப்போன்ற தனிப்போக்குடைய மக்களுக்குத் தற்பயிற் சியே முக்கியமானது. அவர் தமக்குத்தாமே உபாத்தியாய ராய் இருந்தார். அவருடைய தற்பயிற்சியே அவர் உல கில் உயர்ந்த பதவி அடைவதற்குக் காரணமாயிற்று. 'சாமுவேல் ஸ்மைல்ஸ்' என்பவரின் *'தன்னுதவி' என்னும் நூலை விருப்பமாக அவர் கற்றார். தம்மைப்போன்ற இளை ஞருக்குப் பிரியமான கதைகளில் ஒரு பகுதியையும் அவர் படித்தார். வானநூல் அவர் மனத்தைக் கவர்ந்தது. அறுப்புக்காலத்துச் சந்திரோதயத்தைக் காட்டுவதற்கு வீட்டில் உள்ள சாமான்களைக்கொண்டு அடையாள உருவங் கள் அவர் செய்வதுண்டு. அவருடைய அறிவின் தனிப் போக்கை அது காட்டிற்று.

அவர் தம் தகப்பனரோடு குயக்குடிகளுக்குப் போய்ச் சாமானுக்கு உத்தரவு வாங்கிக்கொண்டும், நிலுவை சேர்த்துக்கொண்டும் வருங் காலத்தில் தகப்பனருக்கு ஒத்த போக்கில் அவர் இல்லை. தகப்பனர் கவனமும் கூரிய நோக்கமும் உடையவராய்த் தெருவில் நடக்கும் எல்லாச் செய்திகளையும் கவனித்து ஒவ்வொருவரோடும் பேசி அவரவர் பெயரையும் நினைவில் வைத்துக்கொண்டிருப்பார். மகன் ஒன்றையும் பார்ப்பதுமில்லை. நினைவில் வைப்பதுமில்லை.

---

* Self-help.

அவர் உள்நோக்கமுடையவராய் இருந்தார். அவர் வெளித் தோற்றங்களின் காணப்படாத காரணங்களைத் தமக்குள் ளேயே ஆராய்ந்துகொண்டிருந்தார்.

1873 வரை அவர் வீட்டில் இவ்வாறு காலங்கழித்தார். அப்போது அவருக்கு வயது இருபத்திரண்டாயிற்று. சில செய்திகளின் காரணமாக அவர் வீட்டை விட்டுப் போக நேர்ந்தது. சில ஆண்டுகளுக்கு முன்னே லண்டனுக்கு அவர் போயிருந்த சமயத்தில் ஆசிரியர் திண்டல் என்பவர் "சூடு ஒருவிதமான அசைவு" என்பதைப்பற்றிப் பிரசங் கஞ் செய்ததைக் கேட்டார். அங்கே தம்முடைய சிறிய தாயார் வீட்டிலேயே தங்கியிருந்து வேறு பிரசங்கங்களையுங் கேட்டார். மின்சாரத்தைப்பற்றி அவர் அறிய விருப்பங் கொண்டார். வீட்டுக்குத் திரும்பியபோது ஒழிந்தநேரத்தில் வீட்டில் உள்ள கருவிகளைக்கொண்டு பூதநூற் கலவைநூற் பரிசோதனைகள் செய்வதிலும் அறிவுநூற் கல்விக்குரிய பத் திரிகைகளையும் நூல்களையும் வாசிப்பதிலும் ஈடுபட்டார். *பர்சிலம் என்ற இடத்தில் உள்ள வெட்ஜுவுட் நிலையத்தில் அவர் கலவைநூற் சார்பாகவும் அதன் சம்பந்தப்பட்ட பாடங்களின் சார்பாகவும் நடந்த வகுப்புக்களைக் கவனித்து வந்தார். மறுபடியும் லண்டனுக்குப்போய் லண்டன் பல் கலைக் கழகத்தின் பிரவேசப் பரீட்சையில் அவர் தேறினர். பர்சிலத்தில் அறிவுநூலின் சார்பாகவும் கலையின் சார்பாகவும் பரீட்சைகள் நடத்தப்பட்டன. அவர் எட்டுப் பாடங்கள் எடுத்து எல்லாவற்றிலும் முதற்றரமாகத் தேறினர். அவர் பரிசோதனைகளை உண்மையாக அனுபவித்தார். சூடு, ஒளி, ஓசை, காந்த சத்தி, மின்சாரம், தொழிற் கணிதம், எழுத் துக் கணிதம், நில அளவை, நீராவி என்பவற்றில் தேறி

* Burslem.

அரசாங்கத்தில் உதவித் தொகை பெற்று லண்டன் கென்சிங் டன் என்னும் இடத்திலுள்ள அறிவுநூல் அரசகல்லூரியிற் படிக்குந் தகுதியை அவர் அடைந்தார். அதற்கு அவர் தகப் பனார் விருப்பமில்லாது சம்மதித்தார். அக் கல்லூரியில் அக்சி லிக்குக் கீழாக அவர் வேலை பார்த்திருக்கலாம். அவர் அவ் வாறு செய்யாது கலவை நூல் வல்லராகிய *பிராங்லண்ட் என் பவரிடம் பயின்று வந்தார். அவருக்குக் கைவிரல்கள் வேலைக் குத் தகுதியாக அமைந்திருந்தமையால் கையினாற் பொருள் களை ஆராய்வதில் திறமை பெற்றார். பொருள்களைப் பகுத் துணர்வதில் மிகவும் கூர்மையான திட்ப நுட்பமுடையவ ரானார். அவைகளில் கீழ்வாய் இலக்கங்களிற் கூடியவரை துல்லியமாக அளவிடுவார். அதே காலத்தில் லண்டன் பல் கலைக் கழகத்தில் பி. எஸ். ஸி. பட்டம் பெறுதற்கு வேண் டிய முதற் பகுதியில் அவர் பரிட்சை தேறினர்.

ஸர். ஆலிவர் மாரிக்காலத்தில் லண்டனில் சுறுசுறுப் பாக இருந்துவிட்டு 1873 கோடையில் தம் ஊருக்கு வந் தார். அங்கே நடந்த செய்திகளால், அவர் தகப்பனாரின் வேலையை விடுத்து அறிவுநூற் றுறையிற் சேர்ந்து ஊதியம் பெற்றுவாழக் கருதினர். அவ் வருடம் செப்டம்பரில் அவருடைய தகப்பனார் தம் தொழில் காரணமாக யார்க் ஷயருக்குப் போகவேண்டிய திருந்தது. பிராட்போர்ட்டில் அறிவுநூல் விருத்திக்குரிய பிரிட்டானிய சங்கம் கூட்டங் கூடுவதை அறிந்து அங்கே போய்க் கணக்கும் பூதநூலும் சேர்ந்த (ஏ) பகுதியிற் கலந்து கூட்டங்களைக் கவனித்தார். அக்காலத்திற் சிறந்த கணிதநூல் வல்லாரின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. சேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் என்னும் ஆசிரியர் ஆலிவருடைய ஆர்வத்தைக் கொழுந்து

* Frankland.

விட்டெரியும்படி செய்தார். அப் பிரிவின் தலைவர் இளைஞரின் அறிவுத் திறத்தை அறிந்து அவரோடு பேசி அவருக்கு அளவற்ற மகிழ்ச்சியை உண்டாக்கினர். அப்பொழுது ஆலிவர் லாட்ச், அவர்களில் ஒருவராகத் தாம் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். சில ஆண்டுகள் கழித்து அவர் அப்டாரிலின் அமைச்சரானர். 1891-ல் அஃதாவது நாற்பது வயதில் அவர் அப் பிரிவுக்குத் தலைவரானர். 1913-ல் அவர் முழுச் சங்கத்துக்குத் தலைவரானர்.

1873 முடிவில் லண்டனுக்கு ஆலிவர் போனதை, அவர் வேலையிலிருந்து ஓடிப்போனதாக அவர் தந்தை கருதினர். அவர் தம்பிகளிருவருக்கும் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் அப்போது சம்பளமின்றிப் படிக்கும் பதவி கிடைத்தது. கணித ஆசிரியர் நிலையமாகிய கேம்பிரிட்ஜில் தாம் அத்தகைய பதவி பெறுவதையே ஆலிவர் எதிர்பார்த்தார். அப்பதவி இன்னொருவருக்குக் கொடுக்கப்பட்டதால் 1874 ஜனவரியில் லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியில் பூதநூல் என்னும் பகுதியிற் சேர்ந்து படித்து லண்டன் பல்கலைக் கழக பி. எஸ். சி. பட்டத்துக்குரிய பரிட்சைகளை முற்றிலும் முடிக்க அவர் கருதினர். அப் பல்கலைக் கழகத்தில் அவர் எதிர்பாராத ஒரு நன்மை ஏற்பட்டது. பூதநூற் பேராசிரியராகிய *காரிபாஸ்ட்டர் என்பவர் ஆலிவரை மாணக்கராகச் சேர்க்காமல் ஆண்டுக்கு ஐம்பது பவுன் சம்பளத்தில் பரிசோதனை காட்டுபவராயும் போதகராயும் அவரைப் பதிவு செய்துகொண்டார். பல்கலைக் கழக வாழ்வில் முக்கியப் பகுதியை நடாத்தற்குரிய அவர் எந்தப் பல்கலைக் கழகத்திலும் தங்கும் மாணவனுக இருக்கவில்லை. காரிபாஸ்ட்டருடைய பரிசோதனை அறையில் ஆராய்ச்சி செய்து

* Carey Foster.

கொண்டும் போதித்துக்கொண்டும் அவர் தம் நாட்களைக் கழித்தார். இரவுகளில் காம்டன் பட்டினத்தில் உள்ள குறைந்த வாடகையுடைய இடங்களில் தங்கிப் படிப்பிலும் நினைவிலும் ஆழ்ந்திருந்தார்.

அவர் காரி பாஸ்ட்டர் பரிசோதனை அறைக்குப் போவதற்கு முன் வெளியான கிளார்க் மாக்ஸ்வெல்லின் "மின்சாரமும் காந்த சக்தியும்" என்ற புத்தகம் அவரது அறிவியற் பிரமாண நூலாய் இருந்தது. கிளார்க் மாக்ஸ்வெல் அந்தப் புத்தகத்தில் மின்சார ஓட்டங்களைப்பற்றிப் பாரடே சொல்லிய கருத்துக்களைக் கணித நூற்படி பொருத்திக் காட்டினர். கிளார்க் மாக்ஸ்வெல், கொள்கையில் இருப்பதாகக் காட்டிய காந்த அலைகள் உண்மையில் இருப்பதாக ஆலிவர் ருசுப்படுத்தினர். அதே காலத்தில் தனி ஆராய்ச்சி செய்து செர்மனியில் *எயிண்ரிச் ஹேர்ட்ஸ் என்பவர் அவ்வலைகளைக் கண்டு பிடித்தார். லாட்சைப் பார்க்கிலும் ஹெர்ட்ஸினிட மிருந்து தான் மார்க்கோனி அவ்வலைகளைப்பற்றி அறிந்து ஆர்வங் கொண்டனர்.

பல்கலைக் கழகக் கல்லூரியில் ஆலிவர் புகுந்தபின் காரி பாஸ்ட்டரோடு சேர்ந்து அவர் செய்ய எடுத்துக் கொண்ட முதல் ஆராய்ச்சி, இரண்டு மின்சார முனைகள் ஒரு பரப்பிலே வைக்கப்பட்டபொழுது அவற்றிற்கு இடையே மின்சாரசக்தி ஓடும் வழியை அறிய முயன்றதேயாகும். அவ்வழிகளை முதலில் உத்தேசமாக வகுத்துக்கொண்டு பிற்பாடு பரிசோதனை மூலமாக உத்தேசஞ் சரியாவென்று பார்த்தார்கள். பாரடே, கிளார்க் மாக்ஸ்வெல் முதலியவர்கள் கண்டு பிடித்த உண்மைகள் இளைய ஆலிவர் மனத்தில் தாக்கினமையே இவ்வாராய்ச்சிக்குக் காரணமாயிற்று. மாக்ஸ்வெல்

---

* Heinrich Hertz.

கொள்கைப்படி மின்சாரசக்தி உலோகங்களின் வழியாகவும் மின் வகுப்புக்குரிய சாமான்கள் வழியாகவும் மின்சாரசக்தி ஓட்டமில்லாத பொருள்கள் வழியாகவும் நுண்ணிதிற் பாய் வதை நேராக விளக்கக்கூடிய கருவியொன்றை அவர் செய் தார். மாக்ஸ்வெல்லின் கொள்கையை அவர் சிறப்பாக ஆராய்ந்தார். அதனை அறிந்து மின் தோற்றங்களை விளக்கு வதற்குப் பயன்படுத்திய காரணமாக 1877-ல் லண்டன் பல்கலைக் கழகத்தில் *அறிவுநூற் பெரும் புலவர் என்ற பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. காரிபாஸ்ட்டரோடு பரிசோதனை செய்பவராகவும் துணைவராகவும் 1874 முதல் 1881 வரை ஏழு ஆண்டு உழைத்தபின் டாக்டர் ஆலிவர் லாட்ச் லிவர்ப்பூலில் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகக் கல் லூரியில் பூதநூற் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் வாழ்க்கையில் லிவர்ப்பூல் பகுதி சுறுசுறுப்பும் வெற்றியு முள்ளதாய்ச் செழிப்பும் ஒளியும் நிறைந்திருந்தது.

லண்டனில் அவர் வாழ்க்கைப் பகுதியைப்பற்றி இங்கே சொல்வது பொருத்தமாகும். அறிவு நூலுக்கு உழைக்கின்ற இன்னொருவரைப் பொறுத்து வாழ்க்கை நடத் தும் இளைஞன் ஒவ்வொருவனுக்கும் முதலில் உணவுக்கு வழி தேடுவது பெரிய காரியமாய் இருந்தது. 1877-ல் அந்தக் காரியம் ஆலிவருக்குக் கடினமாய்விடவே கலியாண மில்லாது அறிவு நூலுக்காகவே தன் வாழ்க்கையை முற்றி லும் பயன்படுத்துங் கருத்தினை அவர் கைவிட்டு மேரி மார் ஷல் என்பவளை மணம்புரிந்து தம் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார். வருடத்துக்கு நானூறு பவுன் காட்டினு லொழியக் கலியாணத்தை நடத்த முடியாது என்று மேரியின் காப்பாளர் கூறினர். அதில் அவர் கோபங்கொண்டு ஆத்திர

---

* Doctor of Science.

மாக முயற்சி செய்து பல்கலைக் கழக வேலையோடு பெட்போர்டு பெண்கள் கல்லூரியில் பூதநூல் ஆசிரியராகவும் அமர்ந்து பொருள் ஈட்டினார். பரிட்சைத்தாள்கள் திருத்துவதற்கு ஒரு திட்டம் பேசி அவ்வழியாகவும் பொருள் சேர்த்தார். பல வகையாக முயன்று அவ்வருடத்தில் காப்பாளன் சொன்னதற்கு இரட்டிப்பான பங்கு பணம் காட்டி மணஞ்செய்ய உரிமைபெற்றார்.

எக்கருத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதில் அவர் ஒப்பற்ற தேர்ச்சியுடையவர். அவர் கருவிலே போதிக்கும் வன்மை பெற்றவர். அவர் லண்டன் பல்கலைக் கழகத்தில் இருக்குங் காலத்தில் இரண்டு நூதனக் கருவிகள் தோன்றின. அவையாவன: கிராகாம் பேல்மேன்னின் மின் பேச்சுக் கருவியும், எடிசனுடைய ஒலியெழுத்துக் கருவியுமாம். இவ்விரண்டின் நுட்பதத்துவங்களை அவர் பல்கலைக் கழக மேடையில் விளக்கியபோது ஆர்வமிக்க கூட்டம் அதிகப்பட்டது. தன் காலத்துப் பொதுஜனப்பிரியச் சொற்பொழிவாளரில் அவர் தலைவரானார்.

அவருடைய வாழ்க்கையில் மற்றொரு விசேடம் என்னவென்றால், தாமெடுத்துக் கொண்ட அறிவு நூலிற் சிறப்புப் பெறுவதோடு அவர் பொதுக் கல்வியிலும் பயின்ற மனிதன் என்ற பெயர் படைத்தார். கல்வி என்பது அறிவு தேடுவது மாத்திரமன்று. மனிதவாழ்க்கை, முயற்சி என்பவற்றின் எல்லாப் பகுதியையுங் கூர்ந்து உற்று நோக்குவது ஆகும். *சான் ஸ்டூவேர்ட் மில்லின் தத்துவக் கொள்கையைப் பார்க்கிலும் சான் ரஸ்க்கின் என்பவரது தத்துவக் கொள்கையே அவருக்கு அதிகமாகப் பிடித்தது. அவர் பெரிய உள்ளத்தோடு பிறந்தவர். அவர் தம்மைச் சேர்ந்தவர்களுடைய

* John Stuart Mill.

துன்பத்துக்கு இரங்குபவர். பொதுநோக்க முடையவர். அற்பப் பொறாமையும் முன் பின் என்பதைப்பற்றிச் சண்டையும் அவரிடம் கிடையா. எப்போதும் தமக்குத் தோன்றியபடி உண்மையை எடுத்துக் கூறுவதில் உறுதி கொண்டவர்.

லிவர்ப்பூலில் அவர் தங்கத் தொடங்கியபோது அவருக்கு வயது முப்பது. 1881 முதல் அந்த நூற்றூண்டு முடிவுவரை அவர் லிவர்ப்பூலிலே தங்கும்படி ஏற்பட்டது. ஒரு பைத்தியக்கார மருத்துவச் சாலையாய் இருந்த இடம் பள்ளிக்கூடக் கட்டிடமாக மாற்றப்பட்டது. நோயாளிகள் இருந்த இடம் அவருடைய பரிசோதனை அறையாக மாறிற்று. அவருடைய பெருந் தொழில் செய்யு மிடமும் விரைவில் உலகமெங்கும் தெரியலாயிற்று. மின்சார வளர்ச்சி தொடங்கிற்று. பாரடே கண்டு பிடித்த உண்மைகள் கைத் தொழிலில் அமைத்துக் காட்டப்பட்டன.

மின்சக்தி உண்டாக்குங் கருவிகள் விருத்தியாகவே மின்சாரம் எளிதாகத் தோற்றுவிக்கப்பட்டது. தோன்றிய சக்தியை எதில் அடைத்து வைப்பது என்ற தீர்மானமே பெரிதாயிற்று. மின் சக்தியைச் சேர்த்து வைக்குங் கருவிகளை வகுத்து அவற்றை வியாபாரத்துக்குப் பயன்படுத்தும் வழியை ஆசிரியர் லாட்ச் வெற்றியுடன் கண்டு பிடித்தார். செயல் முறைகளில் நேரும் இடர்ப்பாடுகளை நீக்கும் வழியை அவ்வப்போது அவர் கண்டு உடனே வெளியிடுவார். அவர் ஒன்றையும் இரகசியமாக வைப்பதில்லை.

லிவர்ப்பூலில் முதலிற் செய்த ஆராய்ச்சிகளில் ஒன்றுவது, **திண்டல்** கண்டுபிடித்த உண்மை ஒன்றினை விளக்கியதாகும். ஒரு மின்னொளிக் கதிரில் ஒரு சூடான உலோகத் துண்டை வைத்தால் அதிலிருந்து கரும்புகை எழுவதா

கத் தோன்றும். அப்படித் தோன்றுவது சூடான சாமானி லிருந்து எழுகின்ற சூட்டுக் காற்றணுக்கள் அப்பொருளி லுள்ள புழுதித் துகள்களைத் தாக்கி ஓட்டுவதே என்பதை ஆசிரியர் லாட்ச் கண்டுபிடித்து விளக்கினர். அப்படிப் புழுதியை ஓட்டுவதால் அந்தச் சாமானைச் சுற்றிப் புழுதி இல்லாத இடம் ஏற்படுகிற தென்றும் அதன் வழியாகப் போகும் ஒளி சிதறுமற் செல்வதால் அவ்விடம் கறுப்பாய்த் தோன்றும் என்றும் அவர் காட்டினர். சூடான காற்று, குளிர்ந்த பொருளைச் சுற்றியிருந்தால் இதற்கு மாறுன செய்தி நிகழும். அஃதாவது அச்சாமான்களின் பக்கத்தில் உள்ள புழுதித் துகள்கள் சூடான பொருளின் மேற்பரப்புக்கு நேரே செலுத்தப்பட்டு அதன்மீது தங்கும் வாயு அடுப் புக்கள் முதலியன சுவரின்மீது சாத்தி வைக்கப்பட்டபோது அது நிகழ்வதைப் பார்க்கலாம். பிற்சாலத்தில் இவ்வுண்மை அவருடைய மக்கள் ஒருவரால் வியாபாரக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.

ஆசிரியர் லாட்ச் சில ஆண்டுகள் லிவர்ப்பூலில் தங்கிய பிறகு கலையின் அரசக் கழகத்தார் லண்டனில் மின்னல் செலுத்திகளைப்பற்றி ஒரு சொற்பொழிவியற்ற அவரை வரவழைத்தார்கள். மின்னலை ஏற்றுச் செலுத்தும் உலோ கத் தடி ஒரு கட்டிடத்தை மின்னலின் கெடுதியினின்று எப் படிக் காப்பாற்றுகிறது என்று சனங்களுக்குக் காட்டப் பரி சோதனை முறைகள் அவர் வகுத்திருந்தார். அப்போது மூன்று அடிப்படையான உண்மைகளை அவர் கண்டுபிடித் தார். (1) லெயிடன்சாடி ஒன்றிலிருந்து புறப்படும் மின் சாரம் பிரசங்க மேடையைச் சுற்றிச் செல்லும் பாது காக்கப்பட்ட செலுத்திகளில் எவ்வாறு மின்னலைகளை எழுப்புகின்றன என்று காட்டினதோடு அவ்வலைகளையும் அளந்து அவற்றின் நீளத்தையும் அளந்து காட்டினர்.

(2) மின் ஓட்டம் உண்டாகாதபடி இலேசாகத் தொட்டுக்கொண் டிருக்கிற இணைக்குமிழ்கள் நுட்பமான பொறி செல்லும் வேளைகளில் ஒன்றோடொன்று ஒட்டுவதைக் காண்பித்தார். லிவர்ப்பூலில் தம் பரிசோதனை அறையிலே கம்பி இல்லாது செலுத்தும் அலைகள் உண்டென்பதையும் அவை உண்டென்பதைத் தெரியும் முறையையும் அவர் கண்டார். (3) கம்பியில்லாத் தந்தியிலும் ஒலி பரப்புக் கருவியிலும் உள் ஒலி யுண்டாவதை அவர் உணர்ந்து காட்டினார். விவிலிய நூலில் சால் என்பவர் தம் தகப்பனாருடைய கழுதைகளைக் கண்டுபிடிக்கப் போய் ஓர் இராச்சியத்தைக் கண்டுபிடித்தார் என்று கூறுவதுண்டு. ஆலிவர் லாட்ச் மின் செலுத்திகளின் வேலைகளைக் கண்டுபிடிக்கப் போய் ஒரு புது உலகத்தின் செய்திகளைக் கண்டு பிடித்தார். மின்னல் செலுத்திகளைப்பற்றிய அவருடைய சொற்பொழிவு 1888 ஆகஸ்டில் தத்துவப் பத்திரிகை என்பதில் வெளியாயிற்று. கம்பிகள் மூலமாகச் செலுத்தப்பட்ட மின்சார அலைகளை அவர் அளந்தமை அக் கட்டுரையின் முடிவிற் கூறப்பட்டது. அதனால் அவர் மகிழ்ச்சி யடைந்தார். அதனால் வரக்கூடிய ஏதாவது ஓர் இலாபத்தை அவர் கருதவில்லை.

ஒரு காலத்தில் கிளார்க் மாக்ஸ்வெல் ஒளியையும் மின்சாரத்தையும்பற்றிக் கொண்ட கொள்கையின் உண்மை தெளிவாக ருசுவாகக் கூடுமென்றே அவர் களிப்புற்றார். லாட்ச் தாம் கண்ட உண்மை செயல்முறையில் என்ன பயன் தருமென்று யோசனை செய்யாது டைரோலுக்குச் சென்று விடுமுறை நாட்களைக் கழிக்கப் புறப்பட்டார். புறப்படுவதன் முன் தம்முடைய நண்பராய்ப் பெர்லினில் சில ஆண்டுகளுக்கு முன் தாம் சந்தித்த ஹெயின்ரிச் ஹெர்ட்ஸ் என்பவர் ஹெல்ம் ஹோல்ட்ஸ் என்பவருக்குத் துணையாக மின்

சக்தி பரவுவதைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார் என்றும், அஃது அலை வடிவமாக வானிடத்திற் பாய்வதை அவர் கண்டுபிடித்தார் என்றும் அறிந்தார். அவர் அதைப்பற்றி யாதும் பெருமை கொள்ளாது அவருடைய பெயரால் அவ்வுண்மைகள் இங்கிலாந்தில் பரவும்படி செய்தார்.

லிவர்ப்பூலில் ஆலிவர் இருந்தபோது கோல்ப்* என்னும் பந்து விளையாட்டத்தில் அவர் பழகினார். அப்போது பந்தை அடிப்பதோடு நில்லாது அடித்தபின் அதைத் தொடர்ந்தும் செல்லுவார். அறிவுநூல் ஆராய்ச்சி என்னும் பெரிய விளையாட்டில் அவர் தொடர்ந்து செல்லுகின்ற வழக்கத்தை வைத்துக் கொள்ளவில்லை. கம்பி இல்லாத் தந்திக்கு வழியைத் தாம் திறந்துகாட்டி அதன் செயல் முறையைப் பிறர்க்கு விடுத்தார். 1894-ல் அஃதாவது மின் அலைகளைப்பற்றித் தெரிந்த ஆறு ஆண்டுகட்குப்பின் அவ் வலைகளின் உதவியாற் கருத்து அறிவிக்கும் ஒரு முறையை லண்டனிலும் ஆக்ஸ்போர்டிலும் அவர் நடத்திக்காட்டினார். 1896-ல் பிரிட்டானிய சங்கம் அதன் வருடக் கூட்டத்தை லிவர்ப்பூலிற் கூட்டியபோது சர் பிரீஸ் என்பவர் ஹெர்ட்ஸ், லாட்ச் என்பவர்கள் செய்த ஆராய்ச்சியைப்பற்றி யாதுந் தெரியாது மார்க்கோனி என்பவர் ஒருவர் இத்தாலியிலிருந்து இதுவரை தெரியாத வான்தந்தி முறையைப் புதிதாகக் காட்டும்பெட்டி ஒன்று கொண்டுவந்ததாகக் கூறினார்.

ஆலிவர் அதைப்பற்றிச் சிறிது மனம் வருந்தியது இயற்கையே. மின்சாரக் கருவியாளராகிய பிரீஸ் என்பவர், சர். ஆலிவர் தமதாகக் கொண்ட நகரத்தில், அவர் ஆராய்ச்சியைப்பற்றி யாதுந் தெரியாமல் இவ்வாறு பேசியது பொருத்த

---

* Golf.

மற்றதே. ஆனால் ஆலிவர் தாமும் ஹெர்ட்சும் கண்ட உண்மைகளைப் பயன்படுத்தி அவற்றிற்கு மேலும் மார்க்கோனி தம்மறிவாற் கண்ட செய்திகளின் மிகுந்த முக்கியத்தைக் கொண்டாடுவதில் முதன்மையாக இருந்தார்.

கிளார்க் மாக்ஸ்வெல்லின் கொள்கையை அனுபவத்திற் காட்டி மின்னலைகள் இருப்பதை வெளியாக்கிய பின், சர். ஆலிவர் எவ்விடத்திலும் நிறைந்து ஒளியும் மின்காந்த அலைகளும் செல்வதற்கு வாயிலாக இருக்கும் வான்பூதத்தைப்பற்றி முழுக்கவனம் செலுத்தினர். வான்பூதம் ஒன்றுண்டென்பது கொள்கையிலும் செயலிலும் எதிர்மறைமுகமாகவே காட்டப்பட்டது. லிவர்ப்பூலில் அவர் செய்த விரிந்த ஆராய்ச்சிகள் வான்பூதத்தின் உண்மையை நேராகக் காட்ட முயன்றன. அதுவே தம் வாழ்க்கையில் மிக முக்கியமான பகுதி என்று சர். ஆலிவர் எண்ணினர். ஜியார்ஜ் ஜோசப் என்னும் ஒரு நண்பருடைய தாராளப் பொருளுதவி கொண்டு, "வான் சுழல் யந்திரம்" என்ற ஒரு விலையுயர்ந்த கருவித் தொகுதியை அவர் அமைத்தார். அதிலும் உடன்பாடான சான்றுகள் கண்டுபிடிக்க முடியாது தவறினமையை அவர் ஒப்புக்கொண்டார். இன்னும் அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று 1931-ல் அவர் கூறினர். பூதநூல் ஆசிரியர்களில் இளைஞர்கள் அதன் உண்மையைக்கூட ஒப்புக்கொள்வதில்லை. வான்பூதத்திற்கு ஆலிவர் லாட்ச் கூறும் தன்மைகள் உயிர்நூலாரால் நம்பத்தகாதன. மனமும் அறிவும் அதிலிருந்து வந்தனவாக அவர் நம்புகிறார்.

சர். ஆலிவர் லாட்ச் இதுவரை பூத நூலுக்குச் சேர்த்த நிதிகளைப்பற்றிப் பேசினேம். இன்னும் அதற்கு வேறுபட்ட ஆன்ம தத்துவக் கொள்கையைப் பற்றிய அவருடைய ஆராய்ச்சிகளைக் கவனிப்போம். பூதநூல், ஆன்மநூல்,

உடல், உள்ளம் என்பவற்றின் முடிவான இரகசியங்கள் வான்பூதத்தில் மறைந்து கிடப்பதாக அவர் நம்புகிறார். லிவர்ப்பூலில் அவர் வந்து சேரும்வரை அறிவியல் நூலால் பலர் கருதுகிறபடி உடம்பும் மனமும் பிரிக்கப்படாதவை யென அவர் நம்பியிருந்தார். லண்டனில் ஆவி ஆராய்ச்சிக் கழகத்தை அமைத்த மயர்ஸையும்* கர்னியையும்† அவர் சந்தித்தார். அப்போது அவர்கள் ஆராய்ச்சியில் அவர் ஈடுபடவில்லை. லிவர்ப்பூலில் வந்து சிறிது காலத்துக்குப்பின் ஒரு மனத்திலிருந்து இன்னொரு மனத்துக்கு எண்ணங்கள் பாய்வதைக் காட்டும் பரிசோதனைகளை ஆராய்ச்சி செய்ய அவர் அழைக்கப்பட்டார். நீண்ட ஆராய்ச்சியின் பயனாக அவர் மனத்திற்பட்டது என்னவென்றால் கண், காது என்பவற்றின் வாயிலாக அல்லாமல் ஏதோ ஒரு தெரியாத வழியில் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குக் கருத்துக்கள் செல்லக்கூடும் என்பதே. இக்கொள்கையினாலே முதலில் உயிர் நூலார் கருத்துக்களை அவர் கைவிடவில்லை. 1889-ல் திருமிடு பைப்பர் என்னும் அமெரிக்க மாது நெடுநாட்களுக்கு முன் இறந்துபோன தன் அத்தையோடும் பிறரோடும் தான் தொடர்புபடுவதைக் காட்டியபோது, வேறு விண் உடலுடைய ஒன்று இவ்வுடம்புக்கு வேறாக இருப்பதாகவும் அது உடம்பை விட்டபின் தன்மை மாறாது வானகத்து இருப்பதாகவும் அவர் நம்பினார். வருடந்தோறும் இவ்வழிகளில் அவர் ஆராய்ச்சி செய்து வெளியிட்டு வருவதை அறிவியல் வழியில் அவரோடு ஒத்தவர்கள் அதிகமாகக் கருதுவதில்லை. சனங்களுடைய கருத்திலே காணப்படாத உலகத்திலிருந்து அவர் கண்டு சொல்பவைகளை வைத்தே இவருக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள்.

---

* Myers.　　† Gurney.

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் பர்மிங்காமின் பல்கலைக் கழகத் தலைவராக அவரைச் சோசப் சேம்பர்லேன் நியமித்தார். அவர் அவ்வேலையை ஒப்புக்கொள்வதற்கு முன் அவருடைய பூதநூல் ஆராய்ச்சிக்காக ஒரு பெரிய பரிசோதனை அறை இருக்கவேண்டுமென்றும் அதில் பன்னிரண்டு இளைஞர்கள் கல்வி பயின்று ஓர் இளைய பல்கலைக் கழகம் உண்டாக்க வேண்டுமென்றும் அவர்கள் பொருளாதார முறைகளை நன்கறிந்து அவற்றின் தீர்வைகளுக்கு முடிவுகாண வேண்டுமென்றும் நிபந்தனை செய்துகொண்டார். ஆனால் அங்கே அவர் செய்த ஆராய்ச்சிகள் லண்டனிலும் லிவர்ப்பூலிலும் செய்தவைகளைப் பார்க்கிலும் குறைவுபட்டனவே. பல்கலைக் கழகப் படிப்பைப்பற்றியும் பூதநூலின் அபிவிருத்தியைப்பற்றியும் அவரை அடிக்கடி அரசியலார் கலப்பதுண்டு. நினைவுத் தெளிவிலும் பேச்சுத் தெளிவிலும் அவருக்கு இணையாவார் இல்லை. நாள் செல்லச் செல்ல அவர் ஆவி ஆராய்ச்சிக் காரியங்களில் அதிகமாக அழுத்தமுற்றுர். பெரும் போரில் அவர் தம் பிரியமான மகனுகிய ரேய்மாண்ட் என்பவனை இழந்தார். அவன் பேரால் வெளியாக்கிய புத்தகமொன்றில் அதிசயிக்கத்தக்க காட்சிகள் பேசப்படுகின்றன.

சண்டை முடிவில் அறுபத்தொன்பதாவது வயதில் பர்மிங்காம் பல்கலைக் கழகத் தலைமையை விடுத்துச் சர். ஆலிவர் சாலிஸ்பெரி சமபூமியில் ஸ்டொன்ஹெஞ்சுக்கு அருகில் தாம் ஆறுதல் பெற்றிருக்க ஒரு வீடு அமைத்துக்கொண்டார். ஆறுதல் காலத்திலும் நூல் எழுதுவதிலும் சொற்பொழிவு செய்வதிலும் அவர் சுறுசுறுப்பும் வெற்றியும் உடையவராயிருந்தார். 1927-ல் அவரும் அவர் மனைவியும் தமது மனை வாழ்க்கையின் ஐம்பதாவது ஆண்டினைக் கொண்டாடினுர்கள். இரண்டாண்டு கழித்து அவர் மனைவி

இறந்தாள். அவளை அறிந்த அனைவராலும் அவள் மிகவும் நேசிக்கப்பட்டாள்.

சர். ஆலிவர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் பற்பல: அவை விரிப்பிற் பெருகும். அவர் லிவர்ப்பூலில் தங்கிய பத்தொன்பது ஆண்டுகளில் அவர் வெளியிட்ட அறிவுநூற் பத்திரிகைகளின் தலைப்புக்கள் அரசாங்கத்தின் அறிவுப் பத்திரிகை வரிசைப் புத்தகத்தில் ஐந்து கலங்கள் நிறைய அச்சிடப்பட்டன. அவர் வாழ்க்கையைப் பற்றிய நூல்களாவன:—சென்ற ஆண்டுகள், சுயசரிதம் (1931), ஆநுதர் ஜில் என்பவர் எழுதிய சர் ஆலிவர் லாட்சிடமிருந்து வந்த கடிதங்கள் (1932), என் தத்துவக்கொள்கை (1933), வளரும் அறிவு நூல் (1931) என்பவை. தொடக்கத் தொழிற் கணித மென்னும் நூல், அறிவுநூல் சம்பந்தமாக 1876-ல் அவர் முதல் முதல் வெளியிட்ட புத்தகமாகும். அதற்காக அவருக்கு நூறுபவுன் கிடைத்தது. அடுத்த ஆண்டில் அவர் மணம் புரிந்தபோது அஃது அவருக்கு அதிகப் பயன் பட்டது. அறிவியல் சம்பந்தமாவன:—மின்சார சக்தியின் தற்காலக் கொள்கைகள் (1884), மின்னல் செலுத்திகள் (1892), அறிவுநூல் முற்போக்காளர் அணுக்களும் கதிர்களும் நாலாவது பதிப்பு (1931), எளிய கணிதம் முக்கியமாக எண் கணக்கு என்பன. ஆவி ஆராய்ச்சி சம்பந்தமாக அவர் இயற்றியவை அதன் கழகப் பதிப்புக்களிற் காணப்படும். நூல்களாவன: வானும் உண்மையும் (1925), ஆவிச் சுவர்கள் (1929), நான் ஏன் அழியாமையை நம்புகின்றேன் (1928), மனிதனது உடலின் பின் வாழ்வு (1909), உயிரும் சடப் பொருளும் (1905), மனிதனும் அகிலமும் முதலியன.

## ௬. ருதர்போர்ட் பிரபு

பிரிட்டனில், * ருதர்போர்ட் பிரபு தற்கால அறிவியலில் முக்கியமான தலைவராகவும் பூதநூற் பரிசோதனையில் இப்போது இருப்பவர்களில் மிகப் பெரிய தேர்ச்சியாளராகவும் எவ்விடத்திலும் மதிக்கப்படுகிறார். ஏவல்கொள்ளும் அவருடைய ஆள்திறன் பார்ப்பவருக்குத் தெளிவாக விளங்கும். அவர் நியூசிலண்ட் உழவருடைய பலமான உடம்பும் உரத்த குரலும் தனிச்சிறப்புடைய ஊக்கமும் உடையவர். இத்தன்மைகள் அவருடைய அறிவியல் வேலையைப்பற்றி ஒன்றுந் தெரியாதவர்களுக்கும் நன்கு விளங்கும். அவரோடு சிறிது பழகினால் சாதாரண மக்களிற் காணப்படாத அளவு திறமைகள் அவரிடத்தில் உண்டென்பது தெரியவரும். அவருடைய ஆள்திறனையும் வேலையையும் நன்கு அறிபவர்களுக்கு † எஸ்கைலஸ் என்ற கிரேக்கப் புலவரின் அறிவொளிபோலப் பிரகாசிக்கிற ஒளிமுன் தாம் நிற்பதாக மனதிற்படும். இவ்விருவருடைய தன்மைகள் பல வகையில் ஒத்திருப்பன. இருவரும் பெரிய முறையில் வேலை செய்தவர்கள். மசாச்சு செட்ஸில் உள்ள கீர்த்திபெற்ற தொழிற்கலை நிலையத்தின் தலைவராகிய டாக்டர் காரல்டிகாம்ப்டன் என்பவர் 1914-ல் போரின்பொழுது தண்ணீர்க்குட் செல்லும் கப்பலின் இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு அந்த வேலையில் நியமிக்கப்பட்ட பிரிட்டானிய அமெரிக்க அறிவு நூலார்களின் நன்மையின்பொருட்டு ஒரு பிரஞ்சு உபாயத்தைத் தெளிவாகக் காட்டும் வேலை தமக்குக் கொடுக்கப்பட்டபோது ருதர்போர்ட் கூறியதைத் தெரிவித்திருக்கிறார். "ருதர்

* Lord Rutherford. † Aeschylus.

போர்ட் பிரிட்டன் தேர்ச்சியாளருள் ஒருவர். அவர் அந்தக் காட்சியை வந்து பார்ப்பதற்குச் சிறிது காலம் தாழ்க்கு மென்றும், அதற்குக் காரணம் நீர்வாயு அணுக்களை இருபங் காகப் பிரிப்பதற்குத் தாம் செய்யும் பரிசோதனையை முடிக்க வேண்டியிருப்பதே யென்றும் காலஞ்சென்ற ஆசிரியர் டும்ஸ் டெட் என்பவர் மூலம் அவர் சொல்லி அனுப்பினார். இஃது உண்மையாகுமானால் அதன் முடிவான முக்கியம் போரின் முக்கியத்தைவிடப் பெரியது என்று சொன்னார். அறிவி யல் ஆராய்ச்சிக்குரிய கவனத்தோடு அவர் இன்னும் தாம் கொள்ளும் விளக்கத்தைப்பற்றித் துணிவு பெருமையால் இந்தச் செய்தியை இரகசியமாய் வைத்துக்கொள்ளும்படி கேட்டார். அவர் சொன்னது சரியே. ஏனென்றால், அவர் பின்செய்த வேலையினால் அவர் நீர்வாயுவின் அணுக்களை உடைக்கவில்லை என்று தெரிந்தது. ஆனாலும் அவர் கண்டு பிடித்தது அதற்கீடான முக்கியமுடையதே. அவர் வெடி யுப்புவாயு, அலுமினியம் முதலியவற்றின் இலேசான அணுக்களிலிருந்து மின்னணு என்னும் பகுதியைப் பிரித்து விட்டார். கலவை நூலின்படி ஒரு தனிப்பொருளை மற் றொரு தனிப்பொருளாக மாற்றுவதற்கு மனிதன் நெடுநாள் வருந்திச் செய்த முயற்சிகளில் கிடைத்த முதல் வெற்றி இதுவேயாகும்".

'சண்டையைப் பார்க்கிலும் அதிக முக்கிய'மென்று ருதர்போர்ட் சொன்னது தீக்கொண்டு வந்த பிராமித்தியசின் குரல்போல இருந்தது. ருதர்போர்டினுடைய அறிவியற் கருத்துக்கள் இப்பொழுதுதான் கண்டுபிடித்த இயற்கையி லிருந்து அவற்றின் தெளிவோடும் ஆற்றலோடும் பறித் தெடுத்தவைபோலத் தோன்றின. இப்பொழுதுதான் கண்டு பிடித்த மனிதன் பேசுமுறையிலிருந்து சூட்டோடும் கம்பீ ரத்தோடும் பிரித்தெடுத்தவைபோல எஸ்கைலஸின் பாடல்

கள் தோன்றின. எஸ்கைலஸைப்போல் ருதர்போர்டும் கல்வி வளர்ச்சியின் ஒரு முக்கிய தருணத்தில் சரித்திரத்துட் புகுந்தனர். கதிரியின் ஆற்றல் (ரேடியோவின் செயல்கள்) கண்டுபிடிக்கப்பட்டபோது அவருக்கு வயது 25. இதைக் கண்டுபிடித்ததால் அறியக்கூடிய அளவற்ற அறிவு நிலையங்கள் அவர்முன் காணக்கிடந்தன. அவற்றுட் புகுந்து காரியங்களைத் தெரியவல்ல முழுவயதும் பயிற்சியும் அவருக்கு இருந்தன. இந்த அபூர்வமான நிலையங்களைத் தைரியமாகப் பிடிப்பதால் பெரிய கருத்துப் பரிசுகள் அவர்க்குக் கிடைப்பனவாய்த் தோன்றின. அஃது எதுபோலெனில் உரையாடல் என்னும் நிலத்தை எஸ்கைலஸ் படையெடுத்தபோது அவர் முன் தோன்றின பெரிய செல்வப் பொதிகள்போல வென்க.

ருதர்போர்ட், எஸ்கைலஸ் என்பவர்களுடைய கருத்துக்கள் தனி இயற்கையும் பெருமையுமுடையன. அவற்றின் புதுமையும் அளவும் தெளிவும் மற்றவர்கள் கருத்தைப் பார்க்கிலும் உண்மைக்குச் சமீபத்தில் இருப்பனவாய்த் தெரிவதால், அவை நெருங்கிய ஒற்றுமை உடையனவாகத் தோன்றின. அவைகள் அறிந்து முயன்று விருத்திசெய்தவை; மற்ற அறிஞர்களுடைய கருத்துக்கள்போலல்லாமல் இயற்கையாக உண்டாகிய நினைவு அல்லது ஆர்வத்தின் பயனாகப் பேசப்பட்டன. இஃது ஒரு பொய்த்தோற்றம். அடிப்படையான நினைவாளர்கள் புது நிலங்களில் வேலைசெய்கிறார்கள். நெருக்கமான அதிசயமான உண்மையின் முக்கியத் தன்மைகளை அவர்கள் முதலிற் கண்டுபிடித்தல் நேர்கின்றது. சுற்றிலுமுள்ள பொருள்களைக் கூர்ந்த மதியின் முடிவிடத்திற்குள் கொண்டுவரத்தக்க ஆற்றலுடையவர்களாய் அவர்கள் இருக்கிறார்கள். அதிசயமான இடத்தில் ஏதோ இருக்கிறதென்று அவர்கள் பார்க்கத் தக்கவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள்

அநேகமாகத் தங்கள் கருத்துக்களைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டிருப்பது போல அவைகளுக்கு அவ்வளவு நெருக்கத்தில் இருக்கின்றார்கள். சாதாரணமாய் நினைக்கின்றவன் தன்னுடைய அறிவின் முடிவுக்குள் அதிசயமான இடங்களின் நெருங்கிய தன்மைகளைக் கொண்டுவரக் கூடாதபடி சுருக்கப் பார்வையுடையவனா யிருப்பதால், அடிப்படையான நினைவுடையவர்களின் மனம் உண்மையை இயற்கை அறிவினால் அல்லது உள்ளுணர்ச்சி விவகாரத்தால் கண்டுபிடிப்பதாக எண்ணுகிறான். ருதர்போர்டினுடைய தெளிந்த கருத்துக்கள் ஆற்றலுடையனவாய் இருப்பதற்கும் மற்றவர்களுடைய கருத்துக்கள் ஆற்றல் இல்லாதிருப்பதற்கும் அஃது ஒரு வேளை காரணமாயிருக்கும். அவர்களுடைய கருத்துக்களில் வெவ்வேறு பக்கங்கள் உண்மைக்கு மிக நெருக்கமாய்ச் சாதாரண மக்கள் மனப்பார்வையில் அகப்படாமல் இருப்பதால், அவைகள் எளியனவாகத் தோன்றலாம். உண்மையென்று எண்ணமுடியாதபடி அவருடைய கருத்துக்கள் அடிக்கடி எளியனவாய்த் தோன்றுவதற்கும் அதே காலத்தில் அபரிமிதமான முக்கியமுடையனவாய்த் தோன்றுதற்கும் அது காரணமாகலாம்.

ருதர்போர்ட் நியூசிலண்டிற் பிறந்து கல்வி பயன்றவர். அவருடைய கலாசாலைப் படிப்பு முடியுந் தருணத்தில் கேம்பிரிட்ச் பல்கலைக் கழகம் அறிவுவளர்ச்சிக்கு ஏதுவான ஒரு புதிய விதிவகுத்து, இங்கிலாந்திலும் வெளியேயு முள்ள மற்றப் பல்கலைக் கழகங்களின் முற்றிய படிப்புள்ளவர்களை ஆராய்ச்சி மாணவர்களாக அது சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்தது. அந்த ஏற்பாட்டின்படி சேர்க்கப்பட்ட முதல் மாணவர்கள் நியூசிலண்டிலிருந்து வந்த ருதர்போர்டும் டப்ளினில் இருந்து வந்த டவுன் சேன்டுமோவார். ஒருவருக்குப் பின் ஒருவர் சில மணி நேரத்துக்குள் 1895 - அக்டோ

பரில் வந்து சேர்ந்தனர். ருதர்போர்ட் நியூசிலண்டில் தாம் கண்டுபிடித்த கதிரி அலைகளைத் தெரியும் புது வழியினைத் தொடர்ந்து, ஆராயும் ஆராய்ச்சியை முதல்முதல் கேம்பிரிட்சில் தொடங்கினர்.

அங்குமிங்கும் அசைகிற மின்னோட்டங்கள் உருக்குக் கம்பியில் ஏற்றப்பட்டுள்ள காந்த சக்தியின் அளவைத் திடீர் என்று குறைக்கக்கூடும். அப்படிக் குறைப்பதனால் கதிரி அலைகள் உண்டென்று தெரியவரும் என்று அவர் கண்டுபிடித்திருந்தார். அவருடைய கதிரி காட்டி என்னும் கருவியினால் கேவேண்டிய பரிசோதனைக்காரர்கள் அப்போது அதிகமென்று கருதப்பட்ட இரண்டு மைல் தூரத்தில் கதிரி உண்டென்றறியக் கூடியவர்களாய் இருந்தனர். கதிரி மூலமாய்ப் போக்குவரவு செய்வதைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் பல அறிஞர்களுக்கு ருதர்போர்ட் இந்த ஆராய்ச்சி முறையை விடுத்து, வாயுக்கள் வழியாக மின்சார சக்தியைச் செலுத்துவது பற்றி ஆராய்வதில் ஜே. ஜே. தாம்சன் என்பவருக்குத் துணை செய்தார்.

கேம்பிரிட்சுக்கு ருதர்போர்ட் வந்த வருடத்தில் ராண்ட்ஜேன் என்பவர், எக்ஸ் கதிர்கள் என்பவற்றைக் கண்டுபிடித்தார். அவற்றின் அபாரமான கீர்த்தியைப்பற்றி ருதர்போர்ட் வருணித்திருக்கிறார். அவைகள் புது வகையான காட்சி நயமுடையன. 19-வது நூற்றாண்டு பூத நூலில் அவை கிடையா. அவை அபாரமான செயல்களைச் செய்ய வல்லன. தசைக்குள்ளிருக்கின்ற எலும்புகளை அவை காட்டும். உருக்குக்குள்ளிருக்கும் நிழற் படங்களை அவை பதிவுசெய்யும். 19-வது நூற்றாண்டில் வான்பூதம் என்பதைப் பற்றிப் பயிற்சிசெய்து அலுத்த பூதநூலார்க்கு ஒரு மனத் திகிலை உண்டுபண்ணிப் புது ஊக்கத்தோடு அவற்றை ஆராய்ச்சி செய்யத் தூண்டின.

எக்ஸ் கதிர்களின் குறிப்பிடத்தக்க பல தன்மைகளில் காற்றில் மின்சார சக்தியை ஏற்றுகின்ற ஆற்றல் ஒன்று. அஃது அறிவு நூல் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது. அதற்கு முன் வாயுக்களில் வசதியாக மின்சார சக்தியை ஏற்றத் தெரியாதிருந்தது. ருதர்போர்டும், ஜே. ஜே. தாம்சனும் சேர்ந்து மின்சார சக்தியைக் காற்றில் ஏற்றும் முறையைத் திட்பமாகத் தெரிந்து, காப்மென், வைச்சர்ட், தாம்சன் முதலானவர்கள் 1897-ல் *மின்னணுக்களைக் கண்டு பிடிப்பதற்கு வழி வகுத்தனர்.

1895 முதல் 97 வரை மூன்று ஆண்டுகளில் ருதர் போர்ட் கேவண்டிஷ் பரிசோதனை அறையிலுள்ள நுட்பங்க ளெல்லாங் கற்று மாக்ஸ்வெல், ரெயிலி, தாம்சன் முதலியோ ருடைய அறிவுத் திறமையை உணர்ந்து தேர்ந்த அறிவு நூல் வல்லாராயினர். மின்னணுவுக்கு வழிகாட்டியதுடன் கதிரியின் செயற்றிறன் அறிவதற்கும் எக்ஸ் கதிர்கள் இடங்கொடுத்தன. ராண்ட்ஜென் எக்ஸ் கதிர்களைக் கண்டு பிடித்த பிற்பாடு அத்தகைய ஒளிக்கதிர்கள் இயற்கையில் இருக்கின்றனவா என்று பல அறிவியல் நூலார்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள். இருட்டில் பிரகாசிக் கும் நெருப்புக்கற் சத்துப் பொருள்களைப் பரிசோதனை செய் வது ஒரு வகை. 1896-ல் பெக்கரல் என்பவர் கனத்த லோகமாகிய யூரேனியம் வெளியிடுங் கதிர்கள் சாதாரண ஒளி பிரவேசியாத சரக்குகளின் ஊடு சென்று நிழல் படத் தகட்டைத் தாக்கக் கூடியனவென்று கண்டுபிடித்தார்.

1898-ல் ருதர்போர்ட், மாண்டிரீலிலுள்ள மக்ஜில்ப் பல் கலைக் கழகத்தில், பூத நூலின் மாக்டோனல்டின் போதகாசி ரியாராக நியமிக்கப்பட்டார். தாம் தெரிந்தெடுத்த எந்தப்

---

* Electrons.

பொருளேயும்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு அவருக்கு உதவி செய்ய ஒரு கலேப் பிரிவின் வசதிகள் முழுவதும் கிடைத்தன. அவர் கதிரியின் செயலாற்றல் என்னும் அதிசயக் காட்சியை ஆயத் தீர்மானித்தார். கதிரிச் செயலாற்றல்களேக் கண்டுபிடித்த பிரஞ்சு அறிஞர் கலவை நூற்கருத்துக்களின் தொடர்புபற்றி அதனே ஆய்ந்து எவ்வழியாக அதனேக் கண்டு பிடித்தார்களோ அவ்வழியாக அதனே விசாரிக்கத் தொடங்கினர். அவர்கள் கண்டுபிடித்தவழி நிழற்பட முறையாகும். இம் முறைகளால் அதன் தன்மைப் பகுதிகளேக் கண்டார்களே யொழிய அதன் அளவுப் பகுதியைக் காணக் கூடவில்லே. கதிரிச் செயலாற்றலின் பல்வேறு வகைப்பட்ட தன்மைகள் பிரஞ்சு முறைகளில் வசதியாய்ப் பகுத்தறியத் தக்கனவல்ல என்று ருதர்போர்ட் தெரிந்தார். அவர் மின்சார முறைகளே விருத்தி செய்யத் தொடங்கினர். அம்முறையில் அதனே அளத்தல் மிகவும் நுட்பமாக நிகழும். அவர் கதிரி காட்டி என்னுஞ் சிறந்த மின்சாரக் கருவியை முன்னமே உண்டாக்கியிருந்தார். வாயுக்களின் மின்சார்வான தன்மைகளே ஆராய்ந்து அறியும் முறையையும் நன்ருகப் பழகியிருந்தார். ஆதலால் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு அவர் மிகவுந் தகுதியுடையவரானர். அதற்குத் தாம் முற்றிலும் நேரம் செலுத்தியதனல் அந்தப் புதுக் கலேயை ஆராய்ச்சி செய்ய அவருக்கு மிகச் சிறந்த ஆற்றலும் அறிவும் இருப்பது உறுதிப்பட்டது. அவரும் அவருடைய ஆராய்ச்சியும் உலகத்தில் ஒன்றுபட்டுத் தோன்றின.

1898-ல் கியூரி குடும்பத்தவர் ரேடியம், பொலோனியம், என்னும் தனிப் பொருள்களேக் கண்டுபிடித்தனர். *ஸ்கிமிட் என்பவர் தோரியத்தின் கதிரிச் செயலேக் கண்டுபிடித்தார்.

---

* Schmidt.

இந்த அதிசயமான நுட்பங்களால் அறிவியல் நூலார் வியப் புற்றனர். ஆனால் கதிரிச் செயலாற்றலின் இயற்கையையும் அமைப்பையும் பற்றிய விளக்கம் தெளிவாக ஏற்படவில்லை. பலர் பலவாறு அதனைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தனர். பிரஞ்சறிஞர் கதிரித் தன்மையுடைய பொருள்களின் அணுக் களிலிருந்து கதிரி ஆற்றல் வெளிப்படுவதாகக் கூறினர். ஆனால் அவ்வணுக்கள் எப்படி அத்தன்மையைக் காட்டுகின் றன என்று தக்கமுறையில் அவர்கள் விளக்கக் கூடவில்லை. அவ்வணுக்கள் வான்பூதத்தி லிருந்து சக்தியை எடுத்துத் தொகுத்து அதனைக் கதிர்களாக வெளியிடுகின்றன வென்று குறிப்பிக்கப்பட்டது.

1900-ல் தோரியத்தி லிருந்து ஒரு வாயு வெளிப்படுவ தும் அதுவே கதிரியின் ஆற்றல் உடையதாகவும் ருதர் போர்ட் கண்டுபிடித்தார். இதுவரை கதிரித் தன்மையுடைய பொருள்களிலிருந்து வீசப்படுங் கதிர்களில் மின்னணுக்க ளும் இன்னது என்று தெரியமுடியாத கதிர்களும் காணப் பட்டன. ருதர்போர்ட் தாம் கண்டுபிடித்த வாயுவைக் கலவைநூற் சார்பாகப் பார்க்கும்போது ஹீலியம், *ஆர்க்கன் முதலியன போன்ற இயக்கமில்லா வாயுக்களின் தொகு தியை அது சார்ந்தது என்று அவர் வாதித்தார். கதிராற்ற லுடைய பொருள்கள் சத்தான சடநுட்பப் பொருள்களை வீசுகின்றன என்று கண்டமை கதிரிச் செயல் அமைப்பின் இயல்பை அறிவதற்குத் தக்க பெரிய முதற்படியாக இருந் தது. கதிரியாற்றலுடைய அணுக்களிலிருந்து சற்றுப் பெரிய சடப்பொருள்கள் வெளிப்பட்டால் அவைகள் உடை படுதல் இயல்பே. வான்பூதத்திலிருந்து ஏற்படும் சத்து பெரிய துண்டுகளாகத் தொகுக்கப்படுதல் இயலாததாகும்.

---

* Argon.

கதிரியாற்றலின் வீச்சுக்களைப் பகுத்தறிந்து ருதர் போர்ட் வெற்றிபெற்ருர். சில ஆண்டுகளுக்குள் உண்மை யைக் காட்டக் கூடிய அளவிறந்த பரிசோதனைகள் செய்து பார்த்தார். 1902-ல் அவர் வெளியிட்டவைகள் தத்துவப் பத்திரிகையில் உள்ளன. அவை அவருடைய தனிப்பட்ட சிறந்த ஊக்கத்தைக் காட்டுகின்றன.

1899-ல் யூரேனியப் பஸ்மத்திலிருந்து இரண்டு வகை யான கதிர்கள் வெளிப்படுகின்றன என்று ருதர்போர்ட் காட்டினுர். ஒருவகையை ஆல்பாக் கதிர்களென்றும் மற் ருெரு வகையைப் பீட்டாக் கதிர்களென்றும் பெயரிட்டனர். ஆல்பாக் கதிர்கள் அவ்வளவு துளைக்கிற ஆற்றல் உடையன வல்ல. எளிதாக விலகுவனவு மல்ல. பீட்டாக் கதிர்களி லிருந்துவரும் மின்னணுக்கள் கனத்தபொருள்களைத் துளைக் கும் ஆற்றல் உடையன. அவை காந்தப் பரப்பைக் கண்டு விலகுந் தன்மையன. அக்கதிர்களில் ஹீலியம் அணுக்களின் ஓட்டத்தை அவர் கண்டார். ஒரு மெல்லிய கண்ணுடிக் குமிழை ஆல்பாக் கதிர்களைக் கொண்டு தாக்கினுல் அதில் நிறங்காட்டி வழியாகக் கண்டுபிடிக்கக் கூடிய ஹீலியம் தொகு வதைக் காணலாம். இன்னொரு வகையான கதிர்கள் எக்ஸ் கதிர்களுக்குச் சமானமாய்க் காணப்பட்டன. 1914-வரை காமா கதிர்க ளென்னப்பட்ட அவைகள் எக்ஸ் ரேயைப் போன்ற ஒரே இனமென்று தெரியவில்லை. அவ்வருடத்தில் ருதர்போர்ட் சிறு பளிங்குத் தகடுகளால் அலைக் கதிர் களைப் பிரிக்கும் வான்லா என்பவருடைய முறையை அனு சரித்து அதனைக் கண்டுபிடித்தார்.

1902-ல் ஆல்பாக் கதிர்களின் தன்மை இன்னதென்று தெளிவாக அறியப்படுமுன், ருதர்போர்டும், *சாடி என்பவ

---

* Soddy.

ரும் தெரிந்த செய்திகளை விளக்கக் கூடியதும் தெரியாதவற்றைக் கண்டுபிடித்ததற்குத் துணையாய் அமையக் கூடியதுமாய ஒரு விதாயக் கொள்கையை, அவர் எடுத்து மொழிந்தார். அவ் வருடத்துக்குரிய தத்துவப் பத்திரிகைகளில் புதுப்பரிசோதனைகளும் முந்தி உள்ள செய்திகளும் விளக்கப்பட்டன. அதில் அவர் எழுதியதாவது: "கதிரிச் செயலாற்றலென்பது அணுக்காட்சியாய் இருப்பதாலும், அது கலவை மாற்றங்களேற்பட்டுப் புதுவகையான சடப் பொருள்கள் உண்டாவதற் கேதுவாதலாலும் அம் மாற்றங்கள் அணுவுக்குள்ளேயே நிகழ்ந்துகொண்டிருக்க வேண்டும். கதிரிச் செயற் றன்மையுள்ள தனிப்பொருள்கள் தாமாகவே வடிவமாற்றம் அடைந்துகொண்டிருக்க வேண்டும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட முடிவுகளால் இந்த மாற்றத்தின் வேகம் வெளி நிலைமைகளால் பாதிக்கப்படவில்லை. அதனால் தெளிவாகத் தெரிவதென்னவென்றால், அணுவில் நடக்கும் மாற்றங்கள் கலவை நூலிற் பேசப்படும் மாற்றங்களினின்று வேறான தன்மையுடையனவாய் இருக்கவேண்டும். நாம் இப்பொழுது கவனிக்கிற காட்சிகள் இதுவரை தெரிந்த அணு ஆற்றல்களின் எல்லைக்கு அப்பாற் பட்டவை. ஆதலால் கதிரிச் செயலென்பது அணுவுக்கும் அப்பாற் பட்ட மாற்றத்தின் தோற்றமாகும்." இங்ஙனம் தெளிவான சிறப்புடன் சடப்பொருளின் உற்பத்தியைக் காணுதலாகிய பெரிய செய்தியை அவர்கள் வருணித்தார்கள். அவர்களுக்குமுன் புது அறிவு நிலையங்கள் தோன்றின. தெளிவான பார்வையுடனும் உறுதியான நம்பிக்கையுடனும் அவர்கள் மேற்சென்றுகொண்டிருந்தார்கள். கலவை நூற்படியுள்ள அணுவினுள் நடைபெறும் நுட்பச் செயல்களைப் பற்றி அறிவதற்குக் கதிரிச் செயல் வழிகாட்டுவதாக எதிர் பார்ப்பது பொருத்தமே என்று அவர்கள் கூறினர்.

கதிரிச் செயற் காட்சியின் பல பகுதிப்பட்ட தன்மையைப் பார்த்தால் அது மிக அதிசயமாய் இருக்கும். யூரேனியத்தினது தனிப்பகுதியின் செயலாற்றல் 4 லட்சத்து 70 ஆயிரங்கோடி வருடத்துக்குப்பின் அதன் பாதி அளவுக்குக் குறைவுபடும். உடைக்கப்பட்ட யூரேனியத்தின் மிச்சம் கதிரிச் செயலுடைய ஒரு பொருளாய் இருக்கிறது. அதன் பாதி ஆயுள்காலம் 24·6 நாட்கள். அஃது உடைபட்டால் அதில் மிஞ்சுவது $1\frac{1}{4}$ நிமிஷத்துக்கு இருக்கக்கூடிய ஒரு பொருள். பல வகைப்பட்ட பொருள்களாக யூரேனியம் தானுகப் பிரிவுற்றுச் சிதறுகிறது. ஒன்று 20 லட்சம் ஆண்டுகள் இருக்கக்கூடியது. இன்னென்று 69 ஆயிரம் ஆண்டுகள் நிற்பது. இன்னென்று $3\frac{5}{8}$ நாட்களும், மற்ருென்று 3 நிமிடமும், வேருென்று 268 நாளும், இன்னென்று 19.5 நாளும், இன்னென்று ஒரு விஞடியில் 10 லட்சத்து ஒரு பங்களவும், இன்னென்று நிச்சயமில்லாத கால அளவும், மற்ருென்று 1605 நாளளவும், இன்னென்று 5 நாள் அளவும், இன்னென்று 136 நாள் அளவும், கடைசி மிச்சம் நிலைவரமான தனிப் பொருளாகவும் நிலைபெறுவன. கடைசியிற் சொன்னவற்றைத்தவிர மற்றவற்றிலிருந்து வெவ்வேறு வகையும் பலமும் உள்ள கதிரிகள் வீசப்படுகின்றன. ஒரு சாமானின் பாதி சில நிமிடங்களில் வேறு பொருளாக மாறக் கூடியதாய் இருந்தால் அதைக்கொண்டு பரிசோதனை செய்வது எவ்வளவு கடினமென்று யோசித்துப் பார்க்கவேண்டும். பொருள்களும் கதிரிகளும் மாற்றங்களும் அபரிமிதமாய்க் கலந்து பரிசோதனைக்கு மயக்கம் விளைவிப்பதைப் பொருட்படுத்தாது வேலை செய்யும் ருதர்போர்ட், சாடி என்பவர்களின் மொழியால் விளங்கும் தன்னம்பிக்கை அசாத்தியமல்லவா?

1907-ல் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் பூதநூலுக்கு லாங்க்வொர்த்தி ஆசிரியப் பதவிக்கு ருதர்போர்ட்

நியமிக்கப்பட்டார். 1908-ல் 37-வது வயதில் அவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. அஃது எதிர்பார்த்தபடி பூதநூலுக்காகவன்று; கலவை நூலுக்காகவே. அக்காலத்தில் பல இடங்களில் கதிரிச் செயல் பூதநூல் காட்சியாகக் கருதப்படாமல் கலவைநூற் காட்சியாகக் கருதப்பட்டது. கதிரிச் செயலின் அமைப்பைத் தெளிவுபடுத்துவது சம்பந்தமாக ருதர்போர்டு செய்த ஆராய்ச்சியின் முதற் காலம் முடிவு பெற்றது. 1898 முதல் 1908 வரை உள்ள பத்து ஆண்டுகளில் அவர் செய்து முடித்தவை அறிவியற் சரித்திரத்தின் தலைவர்களுக்குள் அவர் பெயர் அமைவதற்குப் போதுமானவையாயின.

அவர் ஆராய்ச்சியின் இரண்டாவது காலம் மான்செஸ்டருக்கு 1907-ல் வந்து 1919-ல் போகும்வரை உள்ள பகுதியாகும். இக்காலத்தில் கலவை அணுவினுள் நுட்பங்களைக் காணுவதற்குக் கதிரிச் செயல் வழிகாட்டுமென்று 1902-ல் அவர் எதிர்பார்த்துக் கூறியதை அனுபவத்தில் ஆய்ந்து பார்ப்பதற்கு ருதர்போர்டு தம்முடைய சிறந்த அறிவைச் செலுத்தினர். இக்காலம் முந்தியதைப் பார்க்கிலும் முக்கியமானது.

கதிரி ஆற்றல் என்பது அணுக்களில் தானே நிகழுகின்ற பிரிவினை என்று விளக்கிய பின் மூன்று வகையான கதிர் வீச்சுக்களைப்பற்றி அவர் விபரமாக ஆராயத் தொடங்கினர். 1899-ல் ஆல்பாக் கதிர்களை அவர் கண்டு பிடித்தார். அவற்றைப்பற்றிப் படிப்பதிலேயே கவனஞ் செலுத்தி அவற்றின் விவரமான தன்மைகளையுங் கண்டார். ஹீலியம் என்பதன் அணுவோட்டங்கள் அல்லது கருத்துகளாகக் காணப்பட்டவைகள் ஒவ்வொன்றிலும் இரண்டு பங்கு இணக்க மின்னேற்றம் இருந்தது. பீட்டாக் கதிர்கள் எதிர்ப்பு மின்னேற்றம் ஒரு பங்குடைய மின்னணுக்களின்

ஓட்டமாக இருந்தன. இரண்டு வகையான கதிர்களுக்கும் வேறுபாடுகள் அதிகம். ஹீலியத்தின் கருத்துகள் மின்னணுவைப்போல சுமார் 8000 பங்கு கனமுள்ளது. அதிலுள்ள மின்னேற்றம் மின்னணுவிலுள்ளதற்கு எதிர்த் தன்மையதாயும் இரண்டு பங்கு அளவு பரிமாணம் உள்ளதாயுமிருப்பது.

கலவை அணுவின் உட்பக்கத்தைத் துகள்களின் கதிர்களாலும் அலைகளாலும் சோதனை செய்யும் கருத்து J. J. தாம்சன் என்பவரால் மிக வெற்றியோடு பயன்படுத்தப்பட்டது. 1904-ல் பலவகையான அணுக்களிலுள்ள மின்னணுக்களின் எண்ணம் அவ்வணுக்களின் சத்தானது, துகள்களைச் சிதறுகின்ற முறையில் வைத்தும் அதன் வழியாக அலைகள் எறியப்படுகின்ற முறையில் வைத்தும் எப்படிக் கண்டுபிடிக்கப்படலாமென்று 1904-ல் அவர் காட்டினார். ஓர் அணுவிலுள்ள மின்னணுவின் தொகைக்கும் கலவைத் தனிப் பொருள்களின் அட்டவணையில் அதன் தானத்திற்குமுள்ள சம்பந்தங்களைத் தெளிவாகக் காட்டுவதில் தாம்சன் வெற்றியுடையவரானார். ஆனால் அந்தக் காலத்தில் ஓர் அணுவின் அமைப்பைப்பற்றித் திருப்திகரமான உதாரணம் ஒருவராலும் மனதில் அமைத்துக்கொள்ளப்படவில்லை. அதற்கு அதிக விவரங்கள் தெரியவேண்டியதாய் இருந்தது. ஒளியினாலும் எளிதாக விளக்கப்படும் மின்னணுக்களினாலும் அறியக்கூடாத விவரங்களைக் கனத்த உக்கிரமான ஆல்பாக் கதிர்கள் தெரிவிக்கலாமென்று ருதர்போர்டு கண்டார். மற்ற அணுக்களிடத்தில் ஆல்பாத் துகள்களைத் தாக்கி எறிவித்து அணுவமைப்பைச் சோதனை செய்ய அவர் ஏற்பாடு செய்தார். லெனார்ட் என்பவர் நெடுநாளைக்குமுன் மின்னணுக்களிற் கண்டதுபோல சில துகள் எளிதான அடுக்கின் வழியாக வளையாமல் நேரே பாய்கின்றன. மற்றவைகள்

அவற்றின் போக்கில் நின்று இலேசாக வளைந்து செல்லுகின்றன. இன்னுஞ் சில பந்துபோலப் பின்னோக்கிப் பாய்கின்றன. இவைகள் கொஞ்சம் தொந்தரவு கொடுத்தன. *நீல்ஸ் போர் என்பவர் மான்செஸ்ட்டரில் பரிசோதனை யறையில் அவர் வேலை செய்ய வந்தவுடன் அங்கே முன்னமே இருந்த ஹெவிசி, ருதர்போர்டு மோசிலிக்குச் சொன்னதைத் தமக்குச் சொன்னதாகக் கூறினார். அஃதாவது, கெய்க்கரின் விசுவாசமான உதவியோடு முந்தின வருடங்களில் சிரமப்பட்டு ஆராய்ச்சி செய்தபின் ஆல்பாக் கதிரின் போக்கைப்பற்றி நன்கறிந்திருக்கலாம். ஆனால் அதற்குத் தடையாக ஆல்பாக் கதிர்கள் தாக்குஞ் சடப்பொருளின் மேற் பரப்பிலிருந்து இக் கதிர்கள் திரும்பினமையே ஆகுமென்றார். திரும்பின துகள்களின் எண்ணம் குறைவாய்த் தோற்றத்தில் பொருட்படுத்தத் தகாதனவாய் இருந்தாலும் அணுவின் அமைப்பைப்பற்றித் தற்காலத்திலுள்ள கருத்துக்களோடு அஃது ஒத்துவராமையை ருதர்போர்டு உணர்ந்தார். ஆல்பாக் கதிர்களின் துளிகள் கனமும் சத்தியும் உடையன. அவற்றின் செலவை மாற்றி வந்த வழியில் திருப்பக் கூடியது எதுவோ அது தக்க தடையாய் இருக்கவேண்டும்; மேலும், சரக்கின் அடுக்கு வழியாக வெளிவரும் ஆல்பாக் கதிர்கள் எதிர்பார்த்ததைப் பார்க்கிலும் குறைவாக வளைந்திருந்தன. இதனால் வளைவுகளை உண்டாக்கிய தடையின் மேற் பரப்பு எதிர்பார்த்ததைப் பார்க்கிலும் குறைவாகவிருக்க வேண்டும். காணப்பட்ட வளைவுகளின் அளவையும் பகுப்பையும் வைத்துத் தடையின் மேற்பரப்பைக் கணித்தறியலாம். அஃது ஒரு மின்னணுவின் குறுக்களவிலும் மிகக் குறைவாகவே உள்ளது. தடைப் பொருள் மின்னணுவைப் பார்க்கிலும் சிறியதாயும் கனமாயுமுள்ளது. 1911-ல் அத் தடை அணு

* Niels Bohr.

வினுள் இருக்கும் ஒரு நடுத்துகள் என்ற கொள்கையை ருதர் போர்டு எடுத்து மொழிந்தார். அணு என்பது அதன் கன முழுவதையும் அநேகமாக அடக்கிய மிகச் சிறு நடுத்துகள் என்று அவர் கருதினர். அது மின்னணுக்களின் தொகையால் சூழப்பட்டுள்ளது என்றும் அம் மின்னணுக்கள் நடுத்துகள் களிலிருந்து சிறிது சிறிது தூரங்களிலுள்ள வட்ட வழி களிற் சுழன்றன என்றுங் கருதினர். நடுத்துகளிலுள்ள மின்னேற்றம் இணக்கத் தன்மையுடையது. அணுவின் வெளிப் பாகங்களிற் சுற்றிவரும் மின்னணுக்கள் எத்தனை உண்டோ அத்தனை பங்கு மின்னேற்றம் நடுத்துகளில் இருந்தது. நடுத்துகளின் திண்ணமும் இணக்க மின்னேற்ற மும் தன்மீது வந்து பலமாகத் தாக்கும் ஆல்பாத் துகள் களை எதிர்த்துத் தள்ளும் ஆற்றலுடையனவா யிருந்தன. இந்தப் பெரிய கருத்தைத் தெளிவான விளக்கத்தோடும் விட்டுக் கொடாத நம்பிக்கையோடும் ருதர்போர்டு எடுத்துக் கூறினர். ஆராய்ச்சித் துணிபுடைய பிற எந்தப் பூத நூலா சிரியரும் அவ்வளவு குறைவான சாட்சியத்தைக் கொண்டு அவ்வளவு மிக முக்கியமான கருத்தை எடுத்துக் கூறமுடி யாது. ஒரு பகுதி சான்றில் வைத்து முழுப் பொருளையும் கண்டு உண்மையை மேற் புகுத்திக் கூறும் ஆற்றல் ருதர் போர்டினுடைய வியப்பான சத்திகளிலொன்று. மற்றொருவ ரும் போதுமென்று கருதாத சாட்சியத்தை வைத்துப் பிழையற்ற கொள்கைகளை அவர் அடிக்கடி எடுத்துச் சொல்லி யிருக்கிறர். இது மற்றவர்கள் அறிவியற் செய்திகளைப் பற்றுவதைப் பார்க்கிலும் அவர் மிக அழுத்தமாகப் பற்றக் கூடியவர் என்று காட்டுகிறது. அவர் மற்றவர்களுக்குக் கால் வைப்பதற்குப் போதாத தடத்திற் கால்வைத்து ஏறு கிற மலை ஏறுபவனைப் போல்பவர். அவர் இந்தத் திறமை யோடு பிழைகளை நீக்கும் ஆற்றலும் உடையவர். பெரிய

ஆராய்ச்சியாளரில் அவரைப்போல மிகக் குறைவான தப்புச் செய்தவர்களில்லை. போதுமான தடம் இல்லாவிட்டாலும் அதிற் கால் வைத்து அவர் நழுவுவதில்லை.

அசைவின் சாதாரண விதிகளுக் கொத்த முறையில் அவர் அணுவின்மையைப் பற்றிய கொள்கையை வகுக்கவில்லை. நியூட்டன் நிலைநாட்டிய இயற்கைச் சட்டப்படி அவர் கூறும் அணுப்பகுதிகள் வேலை செய்வதில்லை. அத்தகைய அணுமுறை யமைப்பைக் கண்டு ருதர்போர்டு பேசுவது தற்கால அறிவியலில் மிகவும் தைரியமான செயலென்று எடிங்டன் கூறுகின்றார். ருதர்போர்டின் அணுக்கொள்கை அணுக்களின் திரட்சி முதலிய இயற்கைத் தன்மைகள் கலவைச் செயல்களால் பாதிக்கப்படா திருப்பதற்குக் காரணம் விளக்குவன. கலவை மாற்றங்கள் அணுவின் வெளிப்பாகத்திலுள்ள மின்னணுக்களையே பாதிப்பன. அதன் நடுத்துகளைப் பாதிப்பதில்லை.

மான்செஸ்டரிலுள்ள பூதநூற் பரிசோதனை அறை, அறிவியற் சரித்திரத்தில் மிக அதிசயமான காட்சிகளில் ஒன்று. அங்கே ருதர்போர்டு தம் அறிவின் உச்சத்தில் இருந்தார். அவருடன் ஒத்து உழைத்தவர்களில் நீல்ஸ் போர், கெய்க்கர், மோஸ்லி, டார்வின், ஹெவிசி, சாட்விக் என்பவர்களிருந்தார்கள். இளைய டேனிஷ் அறிவியற் கொள்கைக்காரர் இவ்வளவு விளக்கத்துக்குக் காரணமாகிய உதாரண அமைப்பை அறிந்தும் அதை வேலைசெய்யக் கூடாமல் அதை எப்படிப் பயன்படுத்துகிற தென்று காண முயன்றார். ருதர்போர்டு கூறும் அணு, நியூட்டனுடைய அசைவு நூல் விதிப்படி வேலைசெய்யா தென்றும் அளவு அசைவு நூலின் விதிப்படி அது வேலைசெய்யு மென்றும் காட்டினார். அவ்விதி யாதெனில், அணு மாற்றங்கள் தொடர்ச்சியாய் வித்தியாசப்படுகிற அளவில் நிகழாது குறிப்பிட்ட அளவுகளில்

நிகழும் என்பதே. அவர் கூறிய முறையிற் பார்க்கும்போது நிறங்காட்டி வாயிலாகக் காணப்படும் பல விபரங்களுக்குக் காரணம் தெளிவாகின்றது. அவர் உண்டாக்கிய இயற்கைத் தோற்றங்களின் தத்துவ விளக்கம் அணுப்பூத நூலில் கொள்கை ஆராய்ச்சிகள் வளருதற்குரிய வாய்ப்பினை அமைத்தது.

ருதர்போர்டினுடைய இளந் துணைவர்கள் அவர் அறிந்து கூறிய கருத்துச் சரக்கை வைத்துப் புது வழிகள் வகுத்தனர். அவர் தம்முடைய கருத்துக்களையும் முறையையும் தம்முடைய தனிப்போக்கிலே பயன்படுத்துவாராயினர். ஆல்பாக் கதிர்கள், வெடி உப்பு வாயு அலுமினியம் முதலிய இலேசான அணுக்களுடைய பொருள்களிற் செலுத்தப்பட்டால் ஒரு தனி நயம் காணப்படுவதைக் கண்டார்.

சில வேளைகளில் தாக்குகிற ஆல்பாக் கதிர்களின் எல்லைக்கப்பாலுள்ள இடங்களில் சிறு துகள்கள் புலனாகின்றன. அவற்றைப் பற்றி அழுத்தமாக ஆராய்ச்சி செய்யுங் காலத்தில், சர். J. J. தாம்சன் கேம்பிரிட்சில் பரிசோதனைப் பூத நூல் கேவண்டிஷ் பேராசிரியர் பதவியினின்று விலகிய பின் அப்பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டார். கேம்பிரிட்சில் தம்முடைய ஆராய்ச்சியை முடித்து அச் சிறு துகள்கள் வெடி உப்பு வாயு அலுமினியம் முதலியவற்றின் அணுக்களிலிருந்து ஆல்பாக் கதிர்களாற் பிரிக்கப்பட்ட துண்டுகள் என்று காட்டினர். 1919-ல் மிகவும் கீர்த்திபெற்ற பரிசோதனையாகிய ஓரணு மற்றொன்றாக மாறுதல் என்பதைப் பற்றி அவர் தம் கருத்துக்களை வெளியிட்டார். அவருக்கு அப்போது 48 வயது. பெரிய உண்மைகளைக் கண்ட இரண்டு காலப் பகுதிகள் முடிவுற்றன.

மூன்றாவது பெரிய காலப்பகுதி தொடங்குமோ என்று நம்புவது கடினமாயிருந்தது. 1920-ல் அரசக் கழகத்

தின் பேக்கரியன் பிரசங்கம் அவர் செய்தார். அணுமாற்ற வெற்றியின் ஒளியில் அணுவின் நடுத்துகளைப்பற்றி அறியப்பட்டவற்றை நன்கு விளக்கினார். இந்தப் பிரசங்கத்தில் மின்னேற்றமில்லாத நடுத்துகள் இருக்கலாமென்றும் அதன் தன்மைகள் இன்னவையாய் இருக்கவேண்டுமென்றுங் குறிப்பித்தார். அது சடப்பொருளிற் கட்டுப்பாடு இல்லாமல் அசையக் கூடுமென்றும், அதை முத்திரைபோட்ட பாத்திரத்தில் அடக்கிவைக்க முடியாதென்றும், அஃது அணுவின் அமைப்புக்குள் உடனே புகுந்து நடுத்துகளோடு சேரும் அல்லது பிரிவுபட்டு மின்னேற்றமுடைய நீர்வாயு அணு அல்லது மின்னணு அல்லது இரண்டும் வெளிப்படுதற்கு ஏதுவாமென்றும், அப்படிப்பட்ட அணுக்கள் கனத்த தனிப்பொருள்களின் நடுத்துகளை உருவாக்குவதற்கு அவசியமிருக்கவேண்டுமென்றுங் கூறினார். அவருடைய முக்கிய ஒத்துழைப்பாளராகிய டாக்டர் கேசாடுவிக் 1932-ல் அத்தகைய அணு இருப்பதைக் கண்டு பிடித்தார்.

அறிவியல் உலகம் *நியூடிரான் என்பது உண்டென்று தெரிந்து ஒழுங்குபடுமுன் கேவெண்டிஷ் பரிசோதனை அறையிலிருந்து இன்னொரு பெரிய உண்மை கண்டுபிடித்து வெளிப்படுத்தப்பட்டது. டாக்டர் சேடி காக்கிராப்ட் என்பவரும் யந்திரத்தால் இயற்கையான கதிரிச் செயலின் துணை இல்லாமல் அணுமாற்றத்தை முதலில் முடித்துக் காட்டினர். ருதர்போர்டு அணுக்களைப் பிரிப்பதற்கு எரி கருவியாக ஆல்பாத் துகள்களை உபயோகப்படுத்தினர். காக்கிராப்டனும் வால்டனும் அணுக்களின் வேகத்தை அதிகப்படுத்தக்கூடிய கருவி அமைத்தனர். வேகங்கள் அதிகமானதும் ஆல்பாத் துகளின் ஊக்கசத்தி அவற்றிற்கு உண்டாயின. அவர்களின்

* Neutron.

கருவியினுல் விரைவான துகளின் மிகுந்த எண்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கதிரிச் செயல் தன்மையுடைய பொருள் கள் மிகக்குறைந்த அளவிலேயே கிடைத்ததனுல் அவ்வளவு அதிகமான வேகத் துகள்கள் உண்டாக்க முடியவில்லே. ஆத லால் அவற்றைக்கொண்டு அணுக்களேப் பெருவாரியாக உண்டாக்கக் கூடவில்லே.

அணுக்களே உடைப்பதைப்பற்றிய அமைப்புக்களேயும் நிலைமைகளேயுங் கற்பது ஆழமான அறிவிய லாராய்ச்சிக்கு முக்கியமாய் இருப்பதோடு இந்த ஆராய்ச்சிகளில் இன் ெனாரு நுட்பம் இருக்கின்றது. அணுக்களினுடைய கருத்து களின் பகுதிகள் அளவற்ற ஆற்றற் களஞ்சியங்களாற் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அப் பகுதிகளேப் பிரிக்கும் போது இந்த ஆற்றல் சிறிது விடுபடுகின்றது. அணுஉடைப் பில் அணுவின் ஆற்றல் விடுபடுவதை உடனே காணலாம். அணுவைப் பிரிக்கிற ஒரு விரைவான முன் அணு வினுல் விடுதலையாகிற ஆற்றல் அளவு அந்த முன்னணுவி லுள்ள ஆற்றலின் அளவைப் பார்க்கிலும் அதிகம். முதலில் காக்கிராப்டும் வால்டனும் அணுவின் ஆற்றலே மக்களின் உபயோகத்துக்குப் பயன்படுத்தும் வழிகளேக் கண்டுவிட் டார்கள் என்று தோன்றிற்று. உள்ளபடி அவர்களுடைய கருவி அதற்குப் பயன்படவில்லே. ஓர் அணுவை உண்டாக் கின ஒவ்வொரு முன்னணுவும் தன்னிடத்தில் இருக்கிற சத் தியைப் பார்க்கிலும் அதிக சத்தியை விடுதலே செய்கிற தென்ப துண்மையே. ஆனுல் அவர்கள் கருவியில் கோடிக் கணக்கான முன்னணுக்களில் ஏதோ ஒன்றுதான் அணுவை உடைக்கிறது. அங்ஙனம் உடைப்பதால் விடுபடும் அணு ஆற்றலின் அளவைப் பார்க்கிலும் மிகுந்த சத்துகளில் எல்லா முன்னணுக்களேயும் விரைவுபடுத்தற்கு வேண்டப் படும் வலி அதிகம்.

அணுவின் ஆற்றல் மனித வாழ்க்கைக்குப் பயன்படுதற்கு வெகு தூரத்திலிருக்கிறது. ஆனால் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னுவது மனித சமூகத்துக்குப் பயன்படக்கூடிய பெரிய ஆற்றல் ஊற்ருக அது விளங்கும். அக்காலத்து மக்கள் அங்ஙனம் அணு ஆற்றலைப் பயன்படுத்தற்கு முன்னுகச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளுக்கு ருதர்போர்டு வழிகாட்டியாக இருந்தார் என்று அவரை மதிப்பார்கள்.

---

## எ. பால் இண்டன்பர்க்[1]

ஓர் ஆயுளில் முற்றிலும் வெவ்வேறான மூன்று வாழ்க்கைகள் நடத்துவது சிலர்க்கே முடியும். ஜெர்மன் பெரிய சட்ட மன்றத்தின் தலைவரும், பெரும் படைத் தலைவருமாய் இருந்த **பால் இண்டன்பர்க்** என்பவர் அவ்வித மூவகை வாழ்க்கை நடத்தினார். ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் இடையே மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் சென்றன. ஒவ்வொன்றும் முன்னதைப் பார்க்கிலும் விருத்தியுடையதாயும் முக்கியமாயும் இருந்தது.

அவரது முதல் வாழ்க்கை ஹோசென் என்னும் இடத்தில் 1847-ல் பிறந்ததுமுதல் இராணுவப் படையிலிருந்து 1911-வது ஆண்டில் விலகியது வரை நீடித்திருந்தது. அந்தக் காலத்தில் அவர் பிரசியா பெரிய நிலைக்கு வந்து கொண்டிருக்கையில் அதிகப் பேர் வழங்காத காரியசித்தி உடைய சிப்பாயாக அவர் வாழ்க்கை நடத்தினார். டென்மார்க்குக்கு விரோதமாகச் சண்டை நடந்தபோது அவர் போர் புரியக் கூடாதபடி மிகவும் இளைஞராய் இருந்தார். 1866-ல் சூர் என்னுமிடத்தில் ஆஸ்திரியர்களோடு போட்ட சண்டையில் அவர் முதன் முதல் துப்பாக்கி எடுத்தார். அச்சண்டை முடிவில் செங்கழுகு வகையார் என்ற வரிசையிற் சேர்க்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார். அதற்கு நாலு வருடங் கழித்துப் பிரான்சுக்கும் பிரசியாவுக்கும் நடந்த சண்டையில் தைரியத்துக்காக இரும்புச் சிலுவை என்பதைப் பரிசாகப் பெற்றார். வெர்செயில்ஸ் என்னுமிடத்தில் ஜெர்மன் ஏகாதிபத்தியப் பிரசுரம் நடந்தபோது அவர் தம் படையினால் பிரதி

1. Paul Hindenburg.



பால் இண்டன்பர்க்

நிதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். சண்டை முடிவில் இராணுவத்தில் அவர் சாதாரண உத்தியோகத்தராய் இருந்தார். அவருடைய ஊழியம் மதிக்கத்தக்கதாய் இருந்தாலும் தெளிவான சிறப்புப் பெறவில்லை. புது ஜெர்மன் பேரரசின் புதுப்படை வில்ஹெல்ம் காலத்தில் தொடங்கி விருத்தியடைந்தபோது, அவர் அதிற் சேர்ந்து மெதுவாகப் படிப் படியாகச் சிறு தலைவர் பதவியிலிருந்து துணைப்பெருந் தலைவர் பதவிக்கு நாற்பது வருடகால அளவில் உயர்ந்தார். மிகுந்த கீர்த்திக்காக அவர் மேற்பதவி பெறவில்லை. மனச் சாட்சிப்படி நடக்கிற உத்தியோகத்தராய் இருந்து படிப்படி உயர்ந்து தம் பதவிக்கேற்ற பரிசுகளும் சக்கரவர்த்திபாற் பெற்று வந்தார்.

1911-ல் தமது 64-வது வயதில் அவர் படையிலிருந்து விலகினார். சக்கரவர்த்தி மேற்பார்த்த படைப் பகுதியைச் சூழ்ச்சி முறை தவறும்படி அவர் விட்ட காரணம் பற்றி அவர் விலக நேர்ந்தது என்ற பிரஸ்தாபம் இருந்தாலும், அவர் அதை மறுத்து, அதிக வயதுக்குப் படையில் இருந்தமையாலும், போர் வருவதற்கு ஏதுவில்லாமையாலும், தம்மிலும் வயது குறைந்தவர்களுக்கு இடம் பண்ண வேண்டினமையாலும் தாம் விலகியதாகக் கூறினார்.

அவர் படையில் நின்று விலகியபின் ஆனோவரில் ஆறுதலாயும் சாந்தமாயும் உள்ள வாழ்க்கை நடத்திக்கொண்டு தம்முடைய பழைய படையில் இரண்டாவது துணையாய் இருந்த தம் மகனது இராணுவ அபிவிருத்திக்கு வேண்டியது செய்துகொண்டிருந்தார். அவருடைய பெயர் அவருடைய நாட்டு மக்கள் பலருக்குத் தெரியாது. படைப் பகுதியில் இருந்து விலகிய தளகர்த்தர்கள் பலருள் அவர் ஒருவராய் இருந்தார். பெரியார்களைப்பற்றிய ஜெர்மன் நாட்குறிப்பில் பன்னிரண்டு பேரோடு இவரும் ஒருவராகக்

குறிக்கப்பட்டார். ஆறுதல் தொடங்கி நாலு ஆண்டுகளாகத் தமது ஆயுளின் இலையுதிர் காலத்தில் ஒரேவிதமான சுக வாழ்க்கை நடத்தி வந்தார். அவர் யாத்திரை செய்து உரோமாபுரிக்குப் போனபோது மேரியையும் கிறித்துவை யும் தாயும் பிள்ளையுமாய்க் காட்டும் படங்கள் சேர்ப்பவ ராயினர். அவ்வகைப் படங்கள் சேர்ப்பதும் வேட்டையாடு வதும் அவருக்கு முக்கியப் பொழுதுபோக்குத் தொழில்க ளாக இருந்தன. அவருடைய உடல்நிலை சிறிது கவலைக்கு இடங் கொடுத்தது. எப்பொழுதும் சுறுசுறுப்பான வாழ்க்கை நடத்தினவராதலால், வேலையில்லாமல் இருப்பது அவருக்கு இடைஞ்சலாகத் தோன்றிற்று. அவர் எழுபது வயதுவரை வாழ்ந்திருப்பாரோ என்பது சந்தேகமாயிற்று.

திடீரென்று 1914 கோடையில் அவருக்கு ஊக்கங் கொடுக்கக்கூடிய செய்தி ஒன்று நிகழ்ந்தது. ஜெர்மனியில் இரண்டு இடங்களில் சண்டை ஏற்பட்டது. பெரிய தளகர்த் தர்கள் சொல்லுக்கு மாறாக ஒரே காலத்தில் மூன்றுபேரை ஜெர்மனி எதிர்க்கவேண்டியதாயிற்று. மேற்குப் பக்கத்தில் ஜெர்மனியின் முதல் முயற்சி பாரிஸ் நகர வாயில்வரை எட் டிற்று. கிழக்கே ருஷியப்படைகள் கிழக்குப் பிரசியாவுக்குள் புகுந்தன. ஆகஸ்டு 20-ந் தேதி கும்பின்னன் என்னுமிடத் தில் ஜெர்மன்படை மிகுந்த நஷ்டத்தோடு தோல்வியுற்றது. ருஷியத் தலைவர்கள் அதிக அறிவோடு வேலை செய்திருந் தால், சண்டை முடிவு ஜெர்மனுக்கு மிகவும் கெடுதியாய் இருந்திருக்கும். ஆனோவரில் இண்டன்பர்க் சும்மாவிருப் பதிற் சுரங்கண்டதுபோல் வருந்தினர். "விதி வகுத்தபடி ஆயிற்றே. நான் நெடுநாளாகக் காத்துக்கொண்டிருந்தேனே" என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தார். ஆகஸ்டு 22-ந் தேதியன்று மாலை அவர் "வேலை பார்ப்பதற்குத் தயாராய் இருக்கின்றீரா" என்று கேட்டுச் சக்கரவர்த்தியினிட

மிருந்து ஒரு தந்தி வந்தது. அவர், "தயாராக இருக்கிறேன்" என்று உடனே பதிற் சொல்லிவிட்டுப், புறப்பட ஆயத்த மானார். கீழ்ப் பிரசியாவில் எட்டாவது படைக்குத் தலைவ ராக அவரும், முக்கிய உத்தியோகத் தலைவராகத் தளகர்த்தர் * லூடன் டார்ப் என்பவரும் நியமிக்கப்பட்டனர் என்ற தந்திகள் வந்தன. மறுநாள் விடியற்காலம் இவ்விருவரும் புறப்பட்டுக் கீழ்த்திசை நோக்கித் தோல்வியை வெற்றியாக மாற்றுவதற்குச் சென்றனர். இப்பொழுதுதான் இண்டன் பர்க்கினுடைய இரண்டாவது வாழ்க்கை தொடங்கிற்று. இவ்வாழ்க்கை 1919-ல் முடிவுற்றபோது, ஜெர்மனி தோல்வி யும் தாழ்வும் அடைந்தாலும் இண்டன்பர்க்கினுடைய கீர்த்தி ஆயிரமடங்கு அதிகரித்தது. ஜெர்மன் தேச முழுவதும் அவருடைய பெயர் பழமொழியாக வழங்கிற்று.

அவர் வாழ்க்கையின் இந்தப் பகுதியில் முக்கியமான செய்தி யாதெனில் அவருக்கும் லூடன்டார்புக்கும் ஏற்பட்ட தொடர்பே. பல வழிகளில் அவர்களுடைய இயற்கைகள் எதிர்ப்புற்றிருந்தாலும் குறைகளை நிறைவுசெய்யுந் தன்மை யனவாய் இருந்தன. இண்டன்பர்க் அடக்கமாயும் தாழ்மையா யும் இருந்தார். லூடன் டார்ப் செருக்கும் தற்பெருமையு முடையவரா யிருந்தார். இருவரும் ஒரு வேலைசெய்த காலத் தைப்பற்றிப் பேசும்போது இண்டன்பர்க் "நாம்" என்று இருவரையும் ஒன்றுபடுத்தியே பேசுவார். லூடன் டார்ப் "நான்" என்றே பேசுவார். இண்டன்பர்க் மெதுவாய்த் திட்டமாய்ச் செல்லும் புத்தியுடையவர். தம் உறுதியை அவர் இழப்பதில்லை. லூடன் டார்ப் ஒன்றின் நிலையினை விரைவாக அறியக்கூடிய புத்திகூர்மை யுடையராயினும் திகிலடையக்கூடிய போக்குடையவர். கையாகவும் சில வேலை களில் தலையாகவும் அவர் இருப்பினும் இண்டன்பர்க் தாம்

* Luden dorff.

செய்வது இன்னதென்று முற்றிலும் உறுதியாகத் தெரியாமல் ஒன்றையும் ஒப்புக்கொள்வதில்லை. அவருடைய அனுபோக மிக்க உறுதியான தீர்மானங்கள் நிலையில்லாது தடபுடலாகச் செய்யும் ஊடன் டார்பின் போக்கை மட்டுப்படுத்தின. தங்கள் இருவருக்கும் உள்ள சம்பந்தத்தை ஒரு சுகமான மணவாழ்க்கைத் தொடர்புபோல இண்டன்பர்க் பேசுவதுண்டு. ஆனால் அந்தச் சம்பந்தத்தில் ஊடன் டார்பே மேலதிகாரஞ் செய்யுங் கணவர்போன்றவர். அவர், வழியில் நிற்பவரைக் கவனியாமல் குறித்த முடிவுக்கு நேரே ஓடுகின்ற ஆத்திரமிக்க பலமான மனப்பாங்குடையவர். இராணுவ சம்பந்தத்தில் இருவருடைய சேர்க்கை மிகவும் பயன்பட்டது. ஆனால் அரசியலில் அது நன்மை தரவில்லை. இராணுவ வேலைகளில் இருவருடைய மூளைகளும் ஒன்றுக்கொன்று துணையாக வேலை செய்தாலும் பிற்காலத்து அரசியற் சூழ்ச்சிகளில் ஊடன் டார்ப் இண்டன்பர்க்கினுடைய பேரையும் பதவியையும் தகாத முறையிற் பயன்படுத்தினர்.

இருவருஞ் சேர்ந்து இராணுவத்திற் பெரும்பயன் விளைத்ததற்கு அடையாளமாக, ஆணேவரில்நின்றும் போய்ப் பதினெட்டு நாட்கள் ஆவதற்குள் அவர்கள் * டானேன்பர்க் என்னும் இடத்தில் ருஷிய சேனைகளை நொறுங்க அடித்துத் தோல்வியுண்டாக்கினர். போரில் மிகவும் பலத்த தோல்வியாக அதனை ஒரு தளகர்த்தர் கூறியுள்ளார். இவர்கள் பக்கமிருந்த ஆட்கள் மிகக் குறைவாயிருந்தும் இவர்கள் சூழ்ச்சியால் வெற்றியடைந்தார்கள். சண்டைத் திட்டத்தில் இண்டன்பர்க்கின் பாகம் மிகக் குறைவுதான். ஊடன்டார்ப், போர்ப் பெருந்தலைவருக்கு ஒருமுறையை வகுத்துக் காட்டி அதற்கு இண்டன்பர்க்கும் இணங்கும்படி செய்துகொண்டார். அவர்கள் கீழ்ப் பிரசியாவில் மாரிபென்பர்க் என்னுமிடத்தில்

* Tananburg.

இருந்த தலைமை நிலையத்தை யடைந்தபோது, அங்கே இருந்த கர்னல் ஹாப்மென் என்பவரும் அதுபோன்ற முறையைத்தான் வகுத்திருந்தார். ஆகவே அந்த முறைப் படி படைகள் வகுக்கப்பட்டுப் போர் புரிந்தன. நடந்த சண்டையில் இண்டன்பர்க் முக்கிய தலைமை வகித்தார். கடைசியாகத் தாக்கும்படி உத்தரவு கொடுத்ததும் அவரே. சண்டையின் வெற்றி தோல்விக்குப் பொறுப்பேற்றுக் கொண்டதும் அவரே. ஏனெனில் ஆகஸ்டு 26-ந் தேதி மாலை ருஷியர்களுக்கு அதிகப் படை வருவதினிமித்தம் லூடன் டார்ப் சண்டையை நிறுத்தவேண்டு மென்று குறிப் பித்தகாலத்தில், இண்டன்பர்க் அதனை மறுத்துச் சண் டையை மேல் நடத்தினர். தங்கள் படையின் இருப்பு வட்டத்துக்குள் அகப்பட்ட சாம்சான்ப் என்பவன் படை யைத் தாக்குதற்கு வாய்ப்பு, சண்டையை மேல் நடத்தின மையால் ஏற்பட்டது. அல்லாவிட்டால் அப் படை தப்பி ஓடி யிருக்கும். ஜெர்மனிக்கு வெற்றி ஏற்பட்டிராது.

இச் சண்டையில் ஜெர்மனிக்கு வெற்றி கிடைத்ததும் இண்டன்பர்க் வெற்றிச் செய்தியைச் சக்கரவர்த்திக்குத் தந்தி யடித்தார். சக்கரவர்த்தி அவருக்குத் தகுந்த வரி சைப்பட்டம் கொடுத்தார். உடனே இரண்டு வாரத்துக்குள் ஜெர்மனி முழுவதும் இண்டன்பர்க்கின் பெயர் வீடுதோறும் வழங்கலாயிற்று. செப்டம்பரில் மசூரியன் ஏரிக்கரையில் நடந்த முதற்சண்டையில் மறுபடியும் ருஷியர்கள்மீது வெற்றி கிடைத்தது. உடனே அவருடைய கீர்த்தி மிகவும் அதிக மாயிற்று. கீழ்த்திசையில் அவர் மிகவும் முக்கிய தள கர்த்தராக நியமிக்கப்பட்டார். நவம்பரில் அவருக்கு வந்த தபாற்கடிதங்களில் ஜெர்மனியில் "ஜனங்கள் மிகவும் விரும் பும் மனித"னென்று விலாசம் குறிக்கப்பட்டிருந்தது. கடைக்காரர்கள் சுருட்டுக்கள், கழுத்துக்கட்டிகள் முதலிய

வற்றிற்கு அவர் பெயரிட்டனர். சிற்றுண்டி விடுதிகளில் உயர்ந்த உணவுப் பண்டங்களுக்கு அவர் பெயரிடப்பட்டது. சண்டை வருடத்தில் முதல் கிறித்துவின் பிறப்பு நாட் கொண்டாட்டத்தில் ஆயிரக்கணக்கான பரிசுகள் வந்தன. அவற்றில் அறுநூறுக்குமேல் திராட்ச ரசம், புகையிலை, குழாய்கள் முதலியன வந்தன. கிழவிகள் ஈரத்தில் நடப் பதற்குப் பயன்படும் நல்ல செருப்புக்களை அனுப்பினார்கள். இளம் நங்கையர் தங்கள் உரோமம் அடைத்த தலையணைகள் அனுப்பினார்கள். லூடன் டார்ப் நல்ல இராணுவத் தேர்ச்சி உள்ளவர் என்று எல்லாரும் ஒப்புக்கொண்டாலும் அவ ருக்கு முக்கியமானவரான இண்டன்பர்க்கை எல்லோரும் அன்பாக “நம்முடைய இண்டன்பர்க்” என்று பேசினார்கள். உத்தியோகத்தர் கூட்டத்திலும் அவர் பெயர் உயர்வாகவே மதிக்கப்பட்டது. நவம்பரில் கலீசியாவில் ஆஸ்திரியர்களுக்கு அபாயம் நேரக்கூடிய தருணத்தில் அவர்களைப் பாதுகாக்க இண்டன்பர்க்கை அனுப்பவேண்டுமென்ற சத்தம் எங்கும் உண்டாயிற்று. அதன் பயனாக 1915 பிப்ரவரியில் ஏரிக் கரை இரண்டாவது சண்டை நிகழ்ந்தது. அதில் ருஷியர்கள் அதிக மோசமாகத் தோற்கடிக்கப்பட்டு 1,10,000 பேர் களுக்குமேல் கைதியாக்கப்பட்டார்கள். ஆஸ்திரிய முனை பாதுகாக்கப்பட்டது. இண்டன்பர்க்கும் லூடன் டார்பும் சேர்ந்தால் அவர்களை வெல்ல முடியாது என்ற உணர்ச்சி எங்கும் உண்டாயிற்று.

மேற்குப் பக்கத்தில் போரின் நிலை ஜெர்மனிக்கு அனு கூலமாய் இல்லை. அங்கே அனுப்பப்பட்ட தளகர்த்தரைப் பார்க்கிலும் சிறந்தவர் இருந்திருந்தால் வெற்றி கிடைத்திருக் கும். கிழக்கே இண்டன்பர்க்கும் லூடன்டார்பும் இல்லாமல் போனாலும் வெற்றி ஏற்பட்டிருக்கலாம். அவ்விருவரும் மேற்கே சென்றிருந்தால் காரியம் அனுகூலமாய் இருந்திருக்

கும். ஆனால் மேற்கே 'மால்டக்' என்னுந் தளகர்த்தருக்குப் பதிலாக *பால்க்கன்ஹேயின் என்னுந் தளகர்த்தரை ஜெர்மன் அரசாங்கத்தார் அனுப்பினார்கள். அவருடைய நோக்கப்படி கடற்கரைவரை போட்டி போட்டுச் சென்று ஜெர்மனி அவ்விடத்தைப் பிடிக்க முடியாமல் போய்விட்டதால் 1914-ல் செய்ததுபோலச் சூழ்ச்சிகள் செய்ய முடியவில்லை. முற்றுகை போட்டு நாளைக் கடத்தும் வேலை கூட்டுக் கட்சியாரால் தொடங்கப்பெற்றது. ஜெர்மன் கடற் படையானது, எதிரியைத் தாக்கிச் சண்டை போட்டு முற்றுகையை ஒழிக்கக் கூடவில்லை. கூட்டுக் கட்சியினரைப் பார்க்கிலும் அதிக நாள் போர் புரியக் கூடிய பலம் ஜெர்மனியிடம் இருப்பதாகக் காட்டி, அவர்கள் தங்களுக்கு இடைஞ்சலும் பலவீனமும் உண்டாக்குவதைப் பார்க்கிலும் தாங்கள் இடைஞ்சலும் பலவீனமும் அவர்களுக்கு உண்டாக்க வேண்டிய அளவே எதிர்த்துச் சண்டை புரிவதை பால்க்கன்ஹெயின் மேற்கொண்டார். இந்தக் கொள்கை இண்டன்பர்க்குக்கும் லூடன்டார்புக்கும் பிடியாது. ஏனெனில், முடிவான பயனைத் தாராமல் தனித்தனி முயற்சிகளில் ஜெர்மனியினுடைய ஆள் வலிமையை நாளடைவில் அது சிதறச்செய்து ஒழிக்கும் என்பது அவர்கள் கருத்து. கிழக்கேயாவது மேற்கேயாவது ஒரு பெரிய சண்டை செய்து முடிவுகண்டு விடுவதே அவர்கள் நோக்கம். அவர்கள் அக்கருத்தைப் பால்கன்ஹெயினுக்குச் சொல்லியும் அவர் கேட்கவில்லை. கடைசியாக அளவுப்பட்ட சண்டைகள் நஷ்டத்திலேயே முடிந்தன. 1916 பிப்பிரவரியில் வோர்டேன் என்னும் இடத்தை ஜெர்மனியர் தாக்கிய போது அது பிரஞ்சுக்காரர்களுக்கு மிகுந்த நஷ்டத்தை உண்டுபண்ணினாலும் ஜெர்மனியர்களுக்கு அது சமமான நஷ்டத்தை விளைவித்தது. வெர்டூனும் விழவில்லை. எதிரி

* Falkenhein

கள் சாம் நதிக்கரையில் எதிர்த்துத் தாக்குவதையுந் தடுக்க முடியவில்லை. அந்த வருடம் கோடையில் ஜெர்மன் படைகள் எல்லாப்புறமும் நெருக்கப்பட்டன. ருஷியர்கள் 'செர்நோவிட்ஸ்' என்னும் இடத்தைப் பிடித்துக்கொண்டார்கள். இத்தாலியர்கள் கொரிசியாவைக் கைப்பற்றினார்கள். ருமேனியர் கூட்டுக் கட்சியாரோடு சேர்ந்துகொண்டார்கள். சாம் நதிக்கரையில் பிரிட்டிஷ் எதிர்ப்புத் தவறிவிட்டாலும் அவர்களை எதிர்த்து அடிப்பதற்கு ஜெர்மனியரால் இயலவில்லை.

மறுபடியும் பாதுகாப்புக்கு இண்டன்பர்க்கை விடுங்கள் என்ற சத்தம் கிளம்பியது. ஆகஸ்டு மாதத்தில் கெய்சர் அவரைத் தலைமை நிலையத்துக்கு அழைத்துப் பேரரசுப் படையின் உத்தியோக முதல்வராக நியமித்தார். லூடன்டார்ப் முதல்துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரு மாதம் கழித்துப் போரில் சர்வாதிக்கப் பதவி ஏற்படுத்தப் பட்டபொழுது சக்கரவர்த்தியின்பெயரால் அதனை இண்டன்பர்க்கே நடத்தி வந்தார். இரண்டு வருடத்திற்குமுன் எங்குந் தெரியப்படாதிருந்த அவர் இப்பொழுது ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா என்னுந் தேசங்களின் படைகளைச் செலுத்தினார். அவருடைய புது நியமனம் ஜெர்மன் ஜனங்களுடைய தளர்ச்சியை ஒழித்து ஊக்கத்தை எழுப்பிற்று. கிழக்கே டானென்பர்க், மசூரி ஏரிக்கரை என்னும் சண்டைகளின் வீரராய் விளங்கி, அவர் மேற்கே சென்று அங்கேயும் வெற்றி நிலைநாட்டத் தொடங்கினார். லூடன் டார்பும் அவரோடு சென்றார். ஜனங்களுக்கு நம்பிக்கை பலமாயிற்று; ஊக்கமும் அதிகப்பட்டது; உத்தியோக முறையிலும் அஃது அதிகரிக்க இடமிருந்தது. அவர் போர்த் தலைவர் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டார். புது சண்டைக் கப்பல் என்பது அவர் பெயரால் விளங்கிற்று. அவருடைய மனைவி முதன்முதல் அதைக் கடலிற் செலுத்

தினுள். ஜெர்மனியின் பெரிய நகரங்களில் அவர் மதிப்புக்காகப் பெரிய மரப்பதுமைகள் அமைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் அவற்றில் ஆணி அடிக்கக் கிடைப்பதற்காகச் செஞ்சிலுவை நிதிக்குப் பணஞ் செலுத்தினர். இண்டன்பர்க் வழிபாடு அதிகமாய்விட்டது. அவர் ஒரு புராண காவிய வீரனின் மதிப்புப் பெற்றார்.

மாக்கன்ஸெனும் பால்கன்கெயினும் ருமானியர்கள்மீது வெற்றி பெற்றனர். தலைமைப் பதவிக்கு இண்டன்பர்க்கை நியமித்ததால் போருக்கு விரைவான வெற்றி முடிவு உண்டாகும் என்று ஜனங்கள் நம்பினர். ஜெர்மனியர் மூச்சு விடுவதற்கு இடமும் கொஞ்ச நேரமும் கிடைத்தமையேயன்றி அதிகமாக ஒன்றும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கூட்டுக் கட்சியாரின் சிறந்த ஆயுதம் கடல் வழியாக முற்றுகை போடுதல். ஜெர்மனிக்கு எவ்வளவு வெற்றிகள் கிடைத்தாலும் ஜெர்மன் தேசமானது முற்றுகை போடப்பட்ட கோட்டைபோலத்தான் இருந்தது. இடையிடையே ஏற்பட்ட சண்டை வெற்றிகள் ஜெர்மனியைச் சூழ்ந்துள்ள இருப்பு வட்டத்தைத் தகர்க்க முடியவில்லை. ஏழு கோடி ஜனங்கள் பாதிப் பட்டினி நிலைமையை நெருங்கிக்கொண்டிருந்தார்கள். இதை ஜெர்மன் போர்த் தலைவர்கள் அறிந்து இந்த இடரை நீக்குவதற்கு ஏதாவது செய்யவேண்டியதாயிருந்தது. லூடன் டார்ப் போர்த் தலைவருக்குத் தீயமதி சொல்பவராகவே இருந்தார். அவருடைய போதனையினால் போர்த்தலைவர்கள் அரசுக்குள் தனி அரசுபோல் அரசாங்கத்தோடும் சட்ட மன்றத்தோடும் சக்கரவர்த்தியோடும் மிஞ்சிய முறையில் வாக்குவாதஞ் செய்துகொண்டிருந்தார்கள். அரசியல் ஆசையும், அரசியல் தெள்ளிய அறிவும் இல்லாதிருந்த லூடன் டார்ப் கடற்படை உத்தியோக வகையாரோடு சேர்ந்துகொண்டு அவர்கள் சொன்ன முறையில் கூட்டுக்

கட்சியாரின் முற்றுகையை உடைப்பதற்குப் பலமாக முயற்சி செய்யவேண்டுமென்றார். இண்டன்பர்க்கையும் தம் வழிக்கு இழுத்துக் கொண்டார். இருவரும் சட்ட மன்றப் பெருந் தலைவராகிய 'பெத்மேன் ஹால்வெக்' என்பவருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சக்கரவர்த்தியின் சம் மதத்தை 1917 ஜனவரியில் பெற்றுக்கொண்டார்கள். முதலில் அவர்கள் முயற்சி வெற்றியுடையதாய் இருந்தது. ஆனால் அவர்கள் தழுவிய முறை குறுகிய நோக்கமுடையதா யும் தற்கேடு விளைப்பதாயும் இருந்தமையால் மூன்று மாதத் துக்குப்பின் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் கூட்டுக் கட்சியாரோடு சண்டையிற் சேர்ந்த பிற்பாடு ஜெர்மனிக்கு வெற்றி நம்பிக்கை மறைந்தது. அதற்குப்பின் அரசியல் வேலையில் லூடன் டார்ப் புகுந்து போர்த் தலைவரையும் நாளுக்குநாள் அதிகமாக அதில் ஈடுபடுத்தி அகில ஜெர்மனி யாரோடு உடன்படிக்கை பேசிக் கிழக்கிலும் மேற்கிலும் நில அரசுகளை ஜெர்மனியோடு சேர்க்கிற உபாயத்தை மேற் கொண்டார். பெத்மென் ஹால்வெக்கை அவர் தள்ளிவிட்டு இண்டன்பர்க்கைப் பெருந்தலைவராக்க முயன்று தவறி, நூறு நாளைக்குப் பெருந்தலைவராய் அமர்ந்த 'மைக்கேலிஸ்' என் பவருக்குக் கேடுசெய்து நடுநிலைத்தீர்ப்புச் செய்வதாகச் சொல் லிய கத்தோலிக்க மதத் தலைவரின் சொல்லையும் நிராகரித் தார். செயன்முறையால் அவர் ஏகாதிபத்தியத் தலைவராகிச் சண்டையினால் அலுத்த நாட்டு உத்தியோகத்தர்களை யுத்த உழைப்பு விதிகளால் அடக்கி, உத்தியோக வன்மையை மிகுதியாகக் காட்டி எதிர்ப்பு ஏற்படும்போதெல்லாம் போர்த் தலைவரும் நானும் இராஜினாமாச் செய்துவிடுவோம் என்று அச்சுறுத்தி அதனை ஒழித்தார்.

இவையெல்லாம்பற்றி இண்டன்பர்க்குக்கு ஒன்றும் தெரி யாது. தம்மைத் தெய்வம்போல வணங்கின மக்களிடத்தி

லிருந்து அவர் பிரிக்கப்பட்டிருந்தார். அவரைச் சுற்றி இராணுவ உத்தியோகத்தர்களே சூழ்ந்திருந்தார்கள். ஜனங்கள் வெற்றியை விரும்பினார்கள் என்று சொல்லுவதைத் தவிர மற்ற ஏதாவது பேசுகின்றவர்களுக்கு இண்டன்பர்க்கினிடம் போவதற்கு லூடன் டார்ப் இடங்கொடுக்கவில்லை. உள்ளபடி ஜனங்களுக்குப் போரில் விருப்பம் குறைந்து கொண்டிருந்தது. லூடன் டார்ப் செய்த பெரிய போர் முயற்சிகளெல்லாம் அதிகப் பயன் தரவில்லை. சமாதானஞ் செய்யவேண்டியது வரும் என்று அவர் தெரிந்தார். அதற்கிடையில் தமக்கும் சக்கரவர்த்தி, போர் அமைச்சர், அரசியற் கட்சித் தலைவர்கள் முதலியோருக்கும் ஏற்பட்ட வேற்றுமைகளை அவர் ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியாதபடி மறைத்துக்கொண்டாலும், அரசியற் கட்சியாரோடு அறிவுக்குப் பொருத்தமாகக் காரியங்களை விட்டுக்கொடுத்துச் சமாதானம் செய்துகொள்வதற்கு அவருடைய போர் மனப்பான்மை இடங்கொடுக்கவில்லை.

1918 மார்ச்சு மாதம் கூட்டுக் கட்சியாரை நேரான சண்டைக்கு இழுப்பதற்குச் செய்ய வேண்டிய எல்லா முயற்சியும் இண்டன்பர்க்கும் லூடன் டார்பும் செய்தார்கள். ருஷியர்களினுடைய தோல்வியினாலே விடுபட்ட மிகுந்த சேனைகளோடு ஜெர்மன் படைகள் கலந்து ரைன் நதியைக் கடந்து கூட்டுக் கட்சியாரைத் தாக்கினார்கள். சக்கரவர்த்தி முக்கிய படைத் தலைவராகிய இண்டன்பர்க்குக்கு உயர்ந்த வரிசைகளெல்லாஞ் செய்தார். மதிப்புக்குக் குறைவில்லாது சமாதானஞ் செய்யச் சக்கரவர்த்தியினிடம் போர்த் தலைவர் அதிகாரம் பெற்றார். ஆனால் பெல்ஜியத்தை ஜெர்மனியோடு சேர்க்க வேண்டுமென்றும் ஜெர்மனிக்கு அதுவரை சேர்க்கப்பட்ட நிலப்பகுதிகள் ஜெர்மனி வசமே இருக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டார்கள். அவ்வருடம் ஜூன்

மாதம் உண்மையில் ஜெர்மன் படைகள் சமாதானம் விரும்பும் நிலைமைக்கு வந்துவிட்டன. இதைத் தெளிவாகச் சட்ட மன்றத்தில் சொல்லிய போர் அமைச்சரை நீக்கிவிட வேண்டுமென்று போர்த் தலைவர்கள் கேட்டார்கள். ஏனெனில் சமாதானம் கட்டாய மென்பதைத் தேசத்துக்குத் தெரிவிக்க அவர்களுக்கு விருப்பம் இல்லை. ஜெர்மன் வெற்றியிலும் போர்த் தலைவர்களின் திறமைகளிலும் நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு அமைச்சருடைய வாக்குத் திகிலை உண்டாக்கிற்று. ஆகஸ்டு 8-ஆம் நாள் கூட்டுக் கட்சியினர் எதிர்த்துப் போர் புரியவே, நம்பிக்கைப் பேச்சு மறைந்தது. மூன்று மாதங் கழித்துப் போர்த் தலைவரும் லூடன் டார்பும் சமாதான உடன்படிக்கை அவசியமென்று அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தனர். ஆனால் தலைவர் வில்சனுடைய நிபந்தனை தெரியவந்தபோது லூடன் டார்ப் மனக்குழப்பமடைந்து இண்டன்பர்க்கைக் கலவாமலே அந் நிபந்தனைகள் போர்த் தலைவர் ஒப்புக்கொள்ளத் தக்கன வல்ல என்று தெரிவித்துவிட்டுத், தாம் இராஜிநுமா செய்துவிட்டார்.

உள்நாட்டிலும் வெளியிலும் உள்ள பயங்கரமான நிலைமையை இண்டன்பர்க் தாமே நிர்வகிக்க வேண்டியதாய் இருந்தது. அவருக்கு எல்லாம் முடிவடைந்துவிட்டதாய்த் தோன்றிற்று. போரில் ஜெர்மனிக்குத் தோல்வி ஏற்பட்டது. உள்நாட்டில் அரசியற் புரட்சி தலையெடுத்தது. எழுபது ஆண்டுகளாகச் சக்கரவர்த்திக்கு விசுவாசமாய் வேலை செய்துவிட்டு இப்பொழுது இருவகையான அரசுக்கு இணங்கி நடக்கவேண்டிய இடர்ப்பாடு அவருக்கு நேர்ந்தது. அவர் முன்னமே தள்ளப்பட்ட கெய்சரை நவம்பர் ஒன்பதாந் தேதி டச்சு எல்லையைக் கடக்கும்படி போதித்தார். தாமே அவருடைய படைகளுக்குத் தலைமையாய் இருந்து அவற்றை ஜெர்மனிக்கு மீளக் கொண்டுபோவதாகவுங் கூறினர்.

இஃது ஒரு பெரிய செயலாகும். அரசனுக்கு விசுவாசக்குறை வில்லாமல் தமது உழைப்பைக் குடிஅரசின் ஆளுகையில் அமைத்துக்கொண்டார். இதனால் புது அரசாங்கம் தம் மோடு சேர்ந்த உத்தியோகத்தருக்குச் சற்று ஏற்றுக்கொள் ளத்தக்கதாயிற்று. எதிர்ப் புரட்சிகள் கடினமாயின. இண் டன்பர்க் 1918—1919-ல் நடந்த உள்நாட்டுச் சண்டையோடு கலவாமல் தனியே நின்ற போதிலும் சமாதான உடன் படிக்கை கையெழுத்துப் பெற்று முடியும்வரை படையின் தலைமை அவரிடமே இருந்தது. அவரையும் சக்கரவர்த்தி யையும் போர்க் குற்றவாளிகள் என்று பேசினர். 1919-வது வருடம் ஜூலை 3-ல் அவர் **தளகர்த்தர் போக்** என்பவ ருக்குக் கெய்சரின் தானத்தில் தாம் சரணாகதி யடையத் தயாராய் இருப்பதாக எழுதினார். அதே நாளில் தம் தலை மையை ஒப்புக் கொடுத்துவிட்டுத் தம் படைகளுக்கு முடி வான உத்தரவு பிறப்பித்துவிட்டு விலகினார். அவரது இரண் டாவது வாழ்க்கை இப்பொழுது முடிவுபெற்றது.

ஆனோவருக்கு இப்பொழுது இரண்டாவது முறை திரும்பிப் போய் வாழ்ந்தபோது 1911-ல் இருந்ததுபோல அவருடைய நாட்கள் சுகமாகத் தோன்றவில்லை. அப்பொ ழுது அவருக்கு வயது எழுபத்திரண்டாய் விட்டது. போர் முழுவதிலேயும் அவர் மிக உயர்ந்த இராணுவப் பதவிகளில் அமர்ந்து இடைவிடாது உழைத்துத் தம் நாட்டவர் தம்மைத் தெய்வம்போல வணங்கும் நிலைமையை யடைந்தார். தம் ஜனங்களுடைய குறைவுபடாத மதிப்புக்கு அநேக சான் றுகள் ஏற்பட்டன. லூடன் டார்புவினுடைய நிலைப்பில்லாத நடத்தைக்கு வேறாக இவர் நடத்தை மதிப்போடு விளங் கிற்று. ஜெர்மன் குடியரசின் தொடக்கத்தில் ஏற்பட்ட தொந் தரவுகள் ஒன்றிலும் இவர் சேரவில்லை. தமது பொது ஜன வாழ்க்கை முடிவுற்றதாக எண்ணி எஞ்சிய ஆயுளைச் சமய

தானமாகவே கழிக்க எண்ணியிருந்தார். ஆனால் அவர் விதி அவ்வாறு இருக்க இடங்கொடுக்கவில்லை.

1925-ல் அரசாங்கப் பெருங் கணக்கராயும் ஜெர்மன் சட்ட மன்றத்தின் முதல் தலைவராயுமிருந்த பரிடரிக் எபேர்ட் என்பவர் திடீரென்று இறந்தார். அப்போது அந்தப் பதவிக்குத் தேர்தல் நடக்க வேண்டியதா யிருந்தது. முதல் தேர்தல் சரியாக நடைபெறவில்லை. நாட்டில் உள்ள நிலத் தலைவர்கள், பெரிய தொழிலாளர்கள், அவருடைய ராணுவ சகோதரர்கள் ஆகிய எல்லோரும் இண்டன்பர்க்கை அபேட்ச கராய் நிற்கும்படி செய்தார்கள். தேர்தலில் பத்து இலட்சம் அதிக வாக்குரிமைகளால் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அஃதாவது 1925-வது வருடம் மே-மாதம் 12-ம் நாள் அவர் வெய்மாரில் முடிவான அரசிய லமைப்பைத் தாங்கி நிற்ப தாகவும் எல்லா மக்களுக்கும் நடுநிலையாக நீதி செலுத்துவ தாகவும் பிரமாணஞ் செய்து சட்ட மன்றத்தில் இரண்டாவது தலைவரானார். இப்பொழுது அவரது வயது எழுபத்தெட்டு. இஃது அவரது மூன்றாவது வாழ்க்கைத் தொடக்கம். இரண்டாவது வாழ்க்கையில் லூடன் டார்போடு சம்பந்தப் பட்டதுபோல மூன்றாவது வாழ்க்கையில் அவர் டாக்டர் மேய்சினர் என்னும் அமைச்சரோடு சம்பந்தப்பட்டார். இந்த அமைச்சர் சரியான ஜெர்மன் அரசியல் உத்தியோகத் தர். சட்டமன்ற வழக்கங்களும் முறைகளும் நன்றாக அறிந்தவராதலினால் அவற்றை நன்கறியாத தலைவருக்கு வயது செல்லச் செல்ல அவரது உதவி அதிகமாக வேண்டி யிருந்தது. இண்டன்பர்க், தலைவரான காலமும் ஜெர்மனி பழையபடி நல்ல நிலைமைக்கு வந்த காலமும் ஒத்திருந்தன. லொக்கார்னோ உடன்படிக்கையில் ஸ்டீபென்னுடைய அயல் நாட்டு அரசியற் கொள்கை பயன் தந்தது. ஜெர்மனி அகில தேச சங்கத்திற் சேர்ந்தது. போர்த் தண்டனையைப்

பேசிய பாரீஸ் உடன்படிக்கையில் ஜெர்மனி கையெழுத்திட்டது. ஜெர்மனியில் மறுபடியும் எல்லாருக்கும் நம்பிக்கை ஏற்பட்டதால் கைத்தொழிலுக்கு ஏராளமான பணம் கடனாக அயல் நாட்டிலிருந்து கிடைத்தது. இத்தகைய நல்ல காலங்களில் மெய்சினரின் தக்க உதவி கொண்டு தலைவர் தம்முடைய கடமைகளைத் திறமையோடும் புத்திக் கூர்மையோடுஞ் செய்து வந்தார். அவர் நாட்டு மக்கள் அவரை ஜனங்களின் தந்தைபோல வாழ்த்தினார்கள். அவர் எண்பதாவது பிறந்த நாளில் பொது ஜனங்கள் பணம் சேர்த்துக் கிழ்ப்பிரசியாவில் அவர்கள் முன்னோர்கள் வாழ்ந்த இடமாகிய நியூடெக் என்னுங் கிராமத்தை வாங்கி அவருக்கு இனமாகக் கொடுத்தனர். அவர் குடியரசுக்கு இணக்கமாய் உழைப்பதற்கு உறுதிகொண்டு அது தமது இயற்கையாக அமையப்பெற்றார். ஒரு முறை, இரு முறை நடு நிலைமை தவறினாலும் அஃது அவ்வளவு குறை சொல்லத்தக்கதாயில்லை.

ஆனால் அவரைத் தேர்ந்தெடுத்த கட்சிக்காரர்களுக்கு அவர் திருப்தியாக நடக்கவில்லை. இளைஞர் திட்டமென்பதையும் ஹேக் உடன்படிக்கைகளையும் உறுதி செய்யக் கூடாது என்று அவர்கள் சொன்னதை அவர் மறுத்த காலை அவர்களுக்கும் அவருக்கும் 1930-ல் முறிவு ஏற்பட்டது. தேசீயக் கட்சியார் அவருக்கு விரோதமாக நாட்டைக் கிளப்ப முயன்றனர். அவரைப் பலரும் தேசத் துரோகி என்று பழிக்கத் தொடங்கினார்கள். அவருடைய போர்த் தோழர் ஒருவர் இரகசியக் கொலைத் திட்டம் அனுசரணையில் இல்லையே என்று கவலைப்பட்டார். லூடன் டார்பு அவரை வெளிப்படையாகவும் மனக் கசப்போடும் தாக்கினார். இவற்றால் சிறிதும் அசைவுறாது தம்முடைய அந்நிய அரசியல் அமைச்சர் கூறியது தக்கது என்று தெரிந்து அதனையே

அவர் தழுவினர். இஃது அவருக்கு ஒருமாற்று நிலையாயிற்று. சட்ட மன்றத்தில் வலப்பக்கத்தார் அவரைக் கைவிட்டனர். மத்திய பக்கத்தாரும் இடப்பக்கத்தாரும் அவருக்கு அனு கூலமாய் இருந்தனர்.

இத் தருண முதல் இண்டன்பர்க்கினுடைய நாட்கள் சுகமாகக் கழியவில்லை. தேசத்தின் பொருளாதார நிலைமை யும், சட்ட மன்றத்தின் பிடிவாதமான நிலைமையும், அயல் நாட்டுக்குப் பணம் செலுத்துகின்ற கட்டாயமும் காரண மாகத் தம் கணக்கராகிய டாக்டர் புரூணிங் என்பவருக்கு அவர் வரி விதிக்கும் அதிகாரம் கொடுக்க வேண்டியதாக ஏற்பட்டது. தேசீய சமுதாயக் கட்சியினருடைய (ஹிட் லர்) பலம் அதிகரித்துக்கொண் டிருந்ததும் அதற்கொரு காரணம். 1931-வது வருட முழுவதும் தலைவர் பெருங் கணக்கருக்கு ஆதரவாக விருந்தார். பின்னர் விசுவாசம் குறைந்தது. அதற்குக் காரணம் பெரிய தளகர்த்தர் ஒரு வரும் இண்டன்பர்க்கினுடைய குமாரரும், டாக்டர் மெய் சினரும் கூடிச் செய்த சூழ்ச்சியே. கிழ்ப் பிரசியாவில் கடன் பட்டொழிந்த நிலச் சொத்துக்களை அரசாங்கத்தில் சேர்த் துக்கொள்ள டாக்டர் புரூணிங் கையாண்ட முறை இச் சூழ்ச்சிக்காரர்களுக்குப் பிடியா திருந்தது. அவருடைய முறைகள் வெற்றியடைந்தால் தலைவரிடத்தில் அதிகச் சொற்சத்தி உண்டாய்விடுமென்று அவர்கள் பயந்தார்கள். தேசீய சமுதாயக் கட்சியை எதிர்ப்பதற்கு அவரால் இய லாது என்று எண்ணினர். ஆனால் சூழ்ச்சியாளர்கள் உடனே ஒன்றுஞ் செய்யக் கருதவில்லை.

தலைவருடைய உத்தியோக கால அளவு முடிந்து மறு படியும் அவர் தேர்தல் பெற வேண்டியவராயிருந்தார். டாக்டர் புரூணிங் தலைவருக்கு மறுபடியும் தேர்தல் வெற்றி உண்டாக் கும்வரை காத்திருந்தார். ஏப்பிரலில் அது முடிந்தது. மே

31-ம் நாளில் அவரைத் தள்ளிவிட்டுத் தாங்கள் கூறு கின்ற **பேப்பன்** என்பவரை அவர் பதவியில் நியமிக்க வேண்டுமென்று சூழ்ச்சியாளர்கள் தலைவரை வேண்டிக் கொண்டனர்.

இத்தருணம் முதல் இண்டன்பர்க் தக்க முறையில் நடவாமல் சூழ்ச்சியாளர் கைவசப்பட்டார். தம்மிடத்தில் விசுவாசமாயிருந்து மறுபடி தேர்தல் வெற்றியைத் தமக்கு உண்டாக்கிய கணக்கரை அவர் வேலையைவிட்டு நீக்கியது தவறு. மேலும் எந்த அரசியல் அமைப்பைப் பாதுகாப்ப தாய் ஒப்புக்கொண்டு தலைவரானரோ அந்த அரசியல் அமைப்புக்கு மாறாக அடுத்த ஆறு மாதத்தில் மந்திரிகள் குழுவினை ஏற்படுத்தத் தொடங்கினர். 1933 ஜனவரியில் சூழ்ச்சியாளர்களுக்குள் முறிவு ஏற்பட்டது. புதியதாய் நியமித்த கணக்கர் தள்ளப்பட்டுத் தேசிய சமுதாயக் கட்சி யிற் சேர்ந்து கொண்டார். ஹிட்லருக்கு ஏகாதிபத்திய அதிகாரம் சில மாதங்களுக்கு முன் கொடுக்க மறுத்த இண் டன்பர்க் **ஹிட்லரையே** பெருங் கணக்கராய் நியமிக்கும்படி ஏற்பட்டது. வெய்மார் அரசியலமைப்பு முற்றிலும் தொலைந் தது. தேசியக் கட்சியினரும் மத்தியபக்கக் கட்சியினரும் ஹிட்லருக்கு மேலாகவிருந்த தலைவர், பொறுப்பாக வெய் மார் அரசியல் அமைப்பைப் பாதுகாப்பார் என்று நம்பிக் கொண்டிருந்தார்கள். அந்த நம்பிக்கை மாறுவதற்கே இடம் உண்டாயிற்று. இப்பொழுது நியூடெக் என்னும் ஓரிடத்தி லும், பர்லினில் தலைவர் அரண்மனையிலும், புதுஏற்பாட்டைக் காண்பிக்கின்றவர் ஒருவரும் தலைவரை நெருங்குவதற்கு இடமில்லாமல் மெய்சினர் செய்துவிட்டார். ஹிட்லருக்கு அதிகாரம் கொடுத்தது பெரிய செய்கை என்று புகழ்கின்ற வர்களே அவரைப் பார்க்க முடிந்தது. நண்பர்கள் பலர் தம்மிடம் வந்து உண்மை சொல்லவில்லையோ என்று அவர்

சந்தேகித்ததுண்டு. ஆனால் அவர்கள் மெய்சினராகிய காவற் பெருநாயைக் கடந்துபோய் இண்டன்பர்க்கைப் பார்க்க முடியவில்லை. காரியங்கள் நாளடைவில் மிகுதியும் வேறு பட்டுப் போய்த் தேசிய சமுதாயக் கட்சிக்கு ஆதிக்கம் அதிக மானவுடன் பேப்பன் என்னும் முன் கணக்கர் தலைவருக்கு உண்மை நிலையைச் சற்றுத் தெரிவித்துத் தாம் அதை வெளிப் படையாகக் கண்டிக்க அனுமதி பெற்றார். அவர் மார்பர்க் குப் பல்கலைக் கழகத்தில் 1934 ஜூன் 17-ம் நாள் பேசிய பேச்சு ஜெர்மனியில் பிற்பாடு உண்டாக்கிய உள்நாட்டு மாற் றத்தை விரைவுபடுத்தியது. ஆதிக்கக் கட்சியார் ஜூன் மாதம் 30-ம் நாளில் நடந்த பழிகளையும் பிறவற்றையும் தலைவருக்குச் சொல்லாமலே தலைவர் மனத்தைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். பெருங் கணக்கர் ஹிட்ல ருக்கும் தளகர்த்தர் கோரிங் என்பவருக்கும் தலைவர் மகிழ்ச் சித் தந்தி அடித்தார். அஃது அவரை நம்பின கட்சியாருக்கு வெறுப்பையும் திகிலையும் உண்டாக்கிற்று. ஆனால் மார்பர்க் பல்கலைக் கழகப் பேச்சுக்காகப் பேப்பன் என்பவர் தண்டனை படாதபடி தலைவர் அவரைக் காத்ததே பெரிய செய்கை யாயிற்று. கடைசியாக 1934 ஆகஸ்டில் எழுபது ஆண்டு உழைப்புக்குப்பின் தம் வேலையை ஒப்புவித்துவிட்டு ஆறுதல் பெற்றார்.

முக்கியமாக இண்டன்பர்க்கினுடைய நடத்தையைப் பார்க்கும்போது அவர் உழைப்பாளியாகத் தெரிகிறது. முதல் சட்ட மன்றம் சரியாக நடக்கும்வரை அதற்கு விசு வாசமாக உழைத்து அது கழிந்தொழிந்தபின் இரண்டாவ தற்கும் விசுவாசமாயிருந்தார். பின் அது மூன்றாவதற்கு இடம் கொடுக்கவேண்டுமென்று தெரிந்தபோது மூன்றாவது சபைக்கும் அவர் வேலைக்காரராக இருந்தார். பேராசை இல்லாமலும் ஆடம்பரத்தையும் உபசாரத்தையும் விரும்பாம

னும் பயனைக் கருதாமலும் அவர் உழைத்த எண்பத்தாறு ஆண்டுகளில், "எங்கே நான் வேலை செய்ய வேண்டும்" என்று கேட்பாரே தவிர அக் கேள்விக்கு வரும் விடையைப் போதுமானபடி அவர் சிந்திப்பதில்லை. லூடன் டார்பினுட னும் மெய்சினருடனும் அவர் சம்பந்தப்பட்டது அவர், தமக்குப் போதிப்பவர்களின் புத்திமதியை அதிக ஆராய்ச்சி யின்றி நம்புகின்றவர் என்று காட்டிற்று. தீயடோர் லெஸ்ஸிங் என்பவர் 1925-ல் தலைவர் தேர்தல் நடந்தபோது திட்டமான எதிர்கால அறிவோடு சொல்லியதாவது: "ஒரு தக்க சாமர்த்தியவான், தமக்குத் துணை நின்று ஊக்கங் கொடுத்துக் காரியங்களை ஒழுங்குபடுத்தும் வரை நல்ல மேய்ப்பராயும் காப்பராயும் இருப்பார்" என்றார். தேசீய சமுதாயக் கட்சிப் புரட்சிக்கு முன் நடந்த செய்திகள், தக்க படி அவருடைய இயற்கைக் குறைகளைக் காட்டவில்லை. தன் மதிப்புக்கும் பெருமைக்கும் பின் வாழ்ந்தவர்கள் இரங் கத் தக்கவர்களே. இண்டன்பர்க் அவர்களுள் ஒருவர். அவரது சட்ட மன்றத்தில் முதலாவது தலைமைப் பதவி 1932-ல் முற்றுப்பெற்றபோது அவர் காலஞ் சென்றிருந் தால், ஜெர்மனியாருக்குள் அவரே மிகப் பெரியவர் என்ற உணர்ச்சி நிலைத்திருக்கும். அவரது இரண்டாவது தலைமைப் பதவியின்போது நிகழ்ந்த செய்திகள் அவருடைய கீர்த் தியை அதிகமாகக் கறைப்படுத்தின.

முற்றிற்று.